# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி III | ஸாதாரண௵ வைகாசிமீ 1911-௵ ஜூன்மீ | பகுதி 12


OFFICE OF THE REGISTRAR OF [...] 24 JUL 1911 MADRAS.

## ஸுக துக்கங்கள் (1)

### PLEASURE AND PAIN

ஸுகம் துக்கம் என்பவைகள் எல்லோர் அனுபவத்திலும் இருப்பவைகளாயினும் அவைகளின் ஸ்வரூபத்தை நன்கு ஆராய்வோம். மனதில் உண்டாகும் ஒருவித அமைதியே ஸுகம்; அதில் உண்டாகும் ஓர்வித பரபரப்பே துக்கம். இவை ஸாதாரணமாக வெளிவஸ்து ஸம்பந்தத்தால் உண்டாவதாகத் தோன்றும். மனதிற்கு இஷ்டமாயும் ஒருவித ஒற்றுமையாயும் உள்ள விஷயங்களோடு அது ஸம்பந்தப்பட்டால் அதில் ஒருவித இன்ப உணர்ச்சியும், அதனோடு மாறுபட்டும், அநிஷ்டமாயும் உள்ள வஸ்துவோடு ஸம்பந்தப்பட்டால் ஒருவித சஞ்சல உணர்ச்சியும் உண்டாகிறது என்பது தெரிந்த விஷயமே. இவைகளே ஸுகதுக்கங்கள் என்பவை. உலக விஷயங்கள் இந்த்ரியங்களில் தாக்குங்கால் ஒருவித பரபரப்பே எற்படும். இதனால் துக்கம்தான் ஸஹஜமாக உண்டாவது. அதை நீக்குங்கால் மனதில் ஓர்வித சாந்தம் உண்டாக ஸுகம் உண்டாகிறது. ஆகவே துக்க நிவிர்த்தியே ஸுகம்; ஸுகம் என்பது தனியாக ஒன்றில்லை என்று சிலர் கூறுவர். பாட்டு, ருசியான உணவு, முதலிய விஷயங்களால் ஏற்படும் ஸுகம் இல்லை என்று கூறமுடியாது. ஆகவே ஸுகம் துக்கம் ஆகிய இரண்டுவித நிலைகள் உண்டு என்பது வெளியாகும்.

ஸுகம் துக்கம் என்று இரண்டு இருந்தும், பொதுவாக ஆராய்வோருக்கு ப்ரபஞ்சத்தில் துக்கமே தோன்றும் என்று பெரியோர் கூறுவர். இதற்குத்தகுந்த காரணங்கள் உண்டு. உலகவிஷய ஸுகங்கள் ஓர் அளவிற்குக் குறைந்தால் அத்ருப்தியை உண்டாக்கி துக்கத்தை உண்டாக்கும்; அளவுக்கு மிஞ்சிவிட்டால் வெறுப்பு, இந்த்ரிய பலக்குறைவு, இவைகளை உண்டாக்கித் துக்கத்தை உண்டாக்கும். விஷயஸுகங்கள் எற்படாத காலத்தில் அவை வேண்டும் என்ற ஆவல் துக்கத்தைக் கொடுக்கும். ஸுகம் முடிந்ததும் முடிந்துவிட்டதே என்ற எக்கம் உண்டாகித் துக்கம் உண்டாக்கும்; ஸுகம் அனுபவிக்கும் காலத்திலேயே, அதை ஸம்பாதிக்கச் செய்த முயற்சிகளும் பட்டபாடுகளும், ஞாபகம் வர, இவ்வளவு கஷ்டப்பட்டு அடைந்த ஸுகம் தக்கமேண்டுமே என்று இயற்கைக்கு விரோதமாக அடிக்கடிப் பொத்துக்கொண்டு எழும்ஆவல் மிகுந்த துக்கத்தை உண்டாக்கும். துக்கம் வந்துவிடப்போகிறதே என்று எதிர்ப்பார்ப்பதால் வரும் கஷ்டம் துக்கம் நேரே வருங்கால் உண்டாகும் கஷ்டத்தைவிட மிக அதிகம். மனிதன் பகுத்தறிவு சஞ்சலமனது ஆகிய இவ்விரண்டும் உடையவனாதலால் பிறர் அனுபவிக்கும் துக்கத்தைக் கண்ட உடன் அவன் பகுத்தறிவால் இவ்வாறு அது கஷ்டப்படுத்தும் என்ற உணர்ச்சி எற்பட மனது மிகவும் சஞ்சலம் அடைந்து மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கும். ஆதலால் உலக விஷயத்தில் ஸுகம் துக்கம் ஆகிய இரண்டு இருந்தபோதிலும் மனிதன் ஸம்பந்தப்பட்ட வரையிலும் துக்கமே எராளமாகக் காணப்படும். ஆகவே ஸுகம் அனுபவிக்குங்கால் அதில் மூழ்கி முற்கூறிய துக்க ஸம்பந்தத்தை மறந்து மயங்கி தேன் குடித்த நரிபோல திருதிரு என்று அலைந்து, துக்கம் நேரிட வருங்கால் அனாதைச்சிசுபோலப் பரிதவிப்பவர்களை மாக்கள் என்றே கூறவேண்டும்.

ஸுகதுக்க விஷயம் இவ்வாறானால் உயிருள்ள வரையில் கஷ்டப்படுவதுதான் புத்தியுள்ளோர்களது கதியோ! என்ற சங்கை அறிவுடையோர் மனதைக் கலக்கும். முன் செய்த ஆராய்ச்சியால் உலகஸுகம் அல்பம், மனதைக்கவர அதற்கு இடங்கொடுக்கலாகாது. அது எவ்வளவு ஸஹஜமாக நமக்கு வருமோ அதுபோலவேதான் துக்கமும் வருவது. இவை இரண்டும் மாறி மாறி உலகில் வருவது வழக்கம். ஆதலால் இவை இரண்டையும் ஒரு பொருட்டாக மதித்து வீண்மனஸ்தாபத்திற்கு இடங்கொடுத்து உலகில் ஸஹஜமாக எப்பொழுதும் காணப்படும் துக்கங்களை அதிகப்படுத்திக்கொண்டு கஷ்டப்படலாகாது. உள்ள துக்கமே போதும்; அதை த்யானம் செய்து எங்கி, ஸுகம் வாராதா, என்று எதிர்பார்த்து, எல்லோருக்கும் வருகிறதே நமக்குமாத்திரமில்லையா என்று பொறாமையால் எரிக்கப்பட்டு, ஸுகம் வருங்கால் கால்தலை தெரியாது மூழ்கி ஸுகாதிகத்தால் வருந்தி, உள்ள துக்கத்தை வீணாகப் பெரிதாக்கிக்கொள்ளாது; எப்பொழுதும் நிதானமாய்ச் சாந்தமாய் இருக்கச் செய்வதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம். இதைத்தான் பகவான் கீதையில் 'சீதோஷ்ணம் ஸுகதுக்கம் ஆகிய இவைகள் விஷயஸம்பந்தத்தால் எற்படுபவை, அடிக்கடிப் போய் வந்து கொண்டிருப்பன (நிலையில்லாதவை) அவைகளைப் பொறுத்துக்கொள்' என்றார்.

விவேக போதினி

தொகுதி 3]ஸாதாரணஹு வைகாசிமீ [பகுதி12

# முக்கிய உபநிஷத்துக்கள்

## THE PRINCIPAL UPANISHADS

### X. ப்ருஹதாரண்யக உபநிஷத்து (2)

### THE BRIHADARANYAKA UPANISHAD

அத்யாயம் 2:—முதல் அத்யாயத்தில் ஞானத்திற்கும் அக்ஞானத்திற்கும் உள்ள வேற்றுமை விளக்கப்பட்டு அக்ஞானத்தின் ஸ்வரூபம் நன்ருக எடுத்து விஸ்தரிக்கப்பட்டது. இங்கு ப்ரம்ம வித்யை எடுத்து விஸ்தரிக்கப்படுகிறது. முதலில் கார்க்யருக்கும் அஜாதசத்ரு என்ற அரசனுக்கும் ஏற்படும் ஸம்வாத மூலமாக, ப்ரஹ்ம ஞானம், யுக்தி முதலியவைகளால் ஏற்படாது, ப்ரஹ்மம் உண்டென்ற ஆஸ்திக புத்தியுடைய சிஷ்யனுக்கு, அனுபவித்துத் தேர்ந்த குருவின் உபதேசத்தால்தான் இது ஏற்படவேண்டும், என்று விளக்கப்படுகிறது.

(1) மிகுந்த வாக் சக்தியும் கர்வமும் நிறைந்த கார்க்யர் என்ற ப்ராஹ்மணர் ஒருவர் இருந்தார். இவர் பாலகர் என்பவர் பிள்ளை. ஒருநாள் இவர் காசி சென்று அங்கிருந்த அஜாதசத்ரு என்ற அரசனை நோக்கி 'நான் ப்ரஹ்ம விஷயத்தை விளக்குகிறேன்.' என்ருர். அதற்கு அரசன் 'இம்மாதிரி சொன்னதற்காகவே உமக்கு ஆயிரம் பசுக்கள் கொடுக்கிறேன்' என்ருன். இதைக் கேட்டதும் கார்க்யர் முறையே ஸூர்யன், சந்த்ரன், மின்னல், ஹ்ருதயாகாசம், மூச்சு, (புத்தியாகிய) தேஜஸ், அப்பு (சக்தி), கண்ணடி, ப்ராணன், ஆகாசம், நிழல் (அக்ஞானம்), தேஹம், ஆகிய இவைகளுள் உள்ள புருஷனே ப்ரஹ்மம், என்று வெளியிட்டார். இவ்வாறு ஒழுங்காகக் கூறிவருங்காலத்தில் அப்போதைக்கப்போது அஜாதசத்ரு, கார்க்யர் கூறியது ப்ரஹ்மமல்லவென்றும், தான் அவைகளை முறையே, ஜந்துக்கள் தலைவன், வெண்மை உடை தரித்த ச்ரேஷ்டன், தேஜோவான், பூர்ணமும் அசலமுமானவன், இந்த்ரன், பலவானுன ஸம்ஹார கர்த்தா, ஆபாஸன், ப்ரகாசவான், உயிர், இணைபிரியா இரட்டை, மரணம், தேஹி என்று மதித்து அவைகளால் ஏற்படக் கூடிய இஹலோகச் சிறப்பை அடைந்திருப்பதாகவும் கூறி, ஆதலால் இவைகளை ப்ரஹ்மம் என்று கூற இடமில்லை என்று வற்புறுத்தினன். கார்க்யருக்கு மேல் வாயெடுக்க முடியாமல் போய்விட மௌனமானுர். கொஞ்ச நாழிகை யானதும் கார்க்யர் அஜாதசத்ருவை நோக்கி, 'எனக்கு இவ்வளவு தான்தெரியும். இதுபோதாது என்று எனக்குத் தோற்றுகிறது. ஆதலால் நான் உமக்கு சிஷ்யனுகிறேன். எனக்கு உண்மையை வெளியிட வேண்டும்' என்று கேட்டார். 'நீர் ப்ராஹ்மணராயிற்றே க்ஷத்ரியனுகிய என்னை நீர் இவ்வாறுகேட்கலாமா? ஆயினும், நீர் என்னை இவ்வாறு கேட்டுவிட்டபடியால் உமக்கு இதைத் தெரிவிக்கிறேன்' என்று கூறி அஜாதசத்ரு கார்க்யரை அழைத்துச் சென்று தூங்கும் ஒருவனிடம் கொண்டுபோய் விட்டான். தூங்குபவனைக் கூப்பிட்டுப் பார்க்க அவன் எழுந்திருக்காதது கண்டு, அவனைத்தட்டி எழுப்ப, அவன் எழுந்தான். இதை த்ருஷ்டாந்தமாக வைத்துக்கொண்டு கார்க்யரை நோக்கி 'பார்த்தீரா! இவன் தூங்குங்கால் இவனுள்ளிருந்த புருஷன் எங்கே இருந்தான்? விழிக்குங்கால் எப்படி வந்தான்? இதை நன்கு உணர்ந்தால் ப்ரஹ்மத்தை உணர்ந்ததாகும். இந்தப் புருஷன் இந்த்ரிய சக்தி முதலிய சக்தி எல்லாவற்றையும் தன்னுள் ஆகர்ஷித்துக்கொண்டு ஹ்ருதயாகாசத்தில் அடங்குகிருன். இவ்வாறு போகும்போது ஸ்வப்நாவஸ்தையில் மன ப்ரபஞ்சத்தில் அலைகிருன். ஸுஷுப்தியில் (ஸவப்நம் அற்ற தூக்கத்தில்) ஸுக காலங்களில் ஓய்ந்து இருப்பதுபோல இருப்பான். சிலந்தி தன் நூலைத் தன்னுள்ளிருந்து வெளிவிடுவது போலவும், நெருப்பிலிருந்து பொறிகள்

வெளி வருவதுபோலவும் இந்த்ரிய விஷயங்கள், அதிஷ்டான தேவதைகள் எல்லாம் ஆத்மாவிலிருந்து வெளியாகிறது. இந்த ஆத்மா ஸத்யத்துள் ஸத்யமானது. இந்த்ரியாதிகள் ஸத்யம், ஆத்மா ஸத்யத்துள் ஸத்யம்.' என்று உபதேசித்தான்.

(2) ஸூக்ஷ்ம சரீரமே சிசு; அதன் ஸ்தானம் இந்தத் தேஹம்; தலையே மேற்பாகம்; ப்ராணனே ஆதாரம்; ஆஹாரமே இதை ஸ்தானத்தில் நிலைக்கும்படி செய்யும் கயிறு. இதை நன்கு உணர்ந்தவன் ஏழு விஷயங்களால் ஏற்படும் விஷயா ஸக்தியிலிருந்து தப்புவான். தலைப்பக்கம் இந்த ஸூக்ஷ்ம சிசு ஏறும்பொழுது கண்ணையே ஆதாரமாக உள்ளது. இந்தக் கண்ணினிடம் முற்கூறிய ஏழு விஷயங்களின் அதிஷ்டானதேவதைகளும் வந்து கூடுகின்றனர். இதை உணர்ந்தவன் நித்ய த்ருப்தனாக இருப்பன். இவ்விஷயத்தில் "ஓர் ஸோமபாத்ரம் இருக்கிறது, அதன் வாய் கீழேயும் பாதம் மேலேயும், அதனுள் சிறப்பும் அமைந்திருக்கின்றன. அதன் ஓரத்தில் ஸப்த ரிஷிகளும், எட்டாவதும் பிரஹ்ம ஸம்பந்தம் உடையதாகியும் உள்ள வாக் என்பதும் இருக்கின்றன. இது தலையையே குறிக்கின்றது; வாய் என்பது நமது வாய்; பாதம் என்பது மண்டை ஓடு; சிறப்பு இந்த்ரியங்கள். இந்த்ரியங்களைத் தொழிற்படுத்தும் சக்திகளே ஸப்த ரிஷிகள். வலக்காது கௌதமர், இடக்காது பரத்வாஜர்; வலதுகண் விச்வாமித்ரர், இடதுகண் ஜமதக்னி; வலது மூக்கு த்வாரம் வஸிஷ்டர், இடது காச்யபர்; நாக்கு அத்ரி. இதை உணர்ந்தவன் ஆஹாரக்குறைவால் வருந்தான்.

(3) இரண்டுவித ப்ரஹ்மம் உண்டு. ஒன்று ரூபம், அழிவு, கண்டத்வம், இருப்பு ஆகிய இவைகளையும்; மற்றொன்று அரூபம், அழிவில்லாமை, அகண்டத்வம், இருப்புக்கு அப்பாற்பட்டது ஆகிய இவைகளையும் தன்மையாக உடையது. தேவதைகள் ஸம்மந்தப்பட்டவரையில் ப்ருதிவி அப்பு தேஜஸ் ஆகிய இவைகளே முதல் விதத்தைச்சேர்ந்தவை. இவைகளின் ஸாரமான வஸ்து ஸூர்யன். வாயுவும் ஆகாசமும்பின் விதத்தைச் சேர்ந்தவை. இவைகளில் ஸாரம் ப்ரபஞ்சத்துள் பரவியிருக்கும் வஸ்து (ஹிரண்ய கர்ப்பர்). தேஹ ஸம்பந்தப்பட்டவரையில் முதல் விதம் தேஹத்திலுள்ள முற்கூறிய மூன்று பூதங்களுமே. இவைகளின் ஸாரம் கண்கள், இரண்டாவது விதம் தேஹத்திலுள்ள வாயுவும் ஆகாயமுமே. இவைகளின் ஸாரம் வலக் கண்ணிலுள்ள புருஷன். இந்த ஸாரமான வஸ்து பீதாம்பரம், வெள்ளைக்கம்பளி, அக்நி, வெண்தாமரை, மின்னல் போன்ற ப்ரகாசமுடையவன். இதை உணர்ந்தவன் உடனே தேஜஸ்வியாவான். இதன்மேல் இந்த ப்ரஹ்மத்தை **நேதி நேதி** (இதல்ல, இதல்ல) என்று நீக்கும் வழியால் இதைவிட மேலானது ஒன்றும் இல்லை என்பதை உணரவேண்டும். இந்தவழியால்தான் ப்ரஹ்மம் உண்மையாகிய இந்த்ரியங்களுள் சிறந்த உண்மையாக விளங்குவது என்பது நன்கு வெளியாகும்.

[இவ்விரண்டு ப்ராஹ்மணங்களால் கார்யகாரண ஸம்பந்த விவரண மூலமாக ப்ரஹ்மம் இவ்வாறு ஸத்யத்துள் ஸத்யமாய் உள்ளது என்பது நிர்ணயிக்கப்பட்டது.]

(4) ஸந்யாஸம் ப்ரஹ்மஞானத்திற்கு அத்யாவச்யம் என்பதை விளக்க ஆத்மாவே உண்மையான ஆனந்தவஸ்து என்பதை யாக்ஞவல்க்ய மைத்ரேயி ஸம்வாதத்தால் விளக்கப்பட்டிருக்கிறது.

**யாக்ஞவல்க்யர்** ஸந்யாஸியாக நினைத்துத் தமது ஸொத்துக்களைத் தமது பெண்சாதிகள் மைத்ரேயி காத்யாயனி என்ற இருவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கத் தொடங்கினர். அப்பொழுது **மைத்ரேயி** அவரை நோக்கி 'ஸ்வாமீ! உலகத்தில் உள்ள ஸம்பத்துக்கள் எல்லாம் எனக்கு வந்தால் எனக்கு அமரத்வம் வருமா?' என்று கேட்டாள்.

யாக்ஞவல்க்யர்:—ஸம்பத்து வந்தால் ஸாதாரண பணக்காரர்கள் கதி உனக்கு வருமே ஒழிய அழிவற்றநிலை வாராது.

மை.—(விநயத்துடனும், ஓர்வித சோகத்துடனும்) அதனால் வரவேமாட்டாதா? அப்படியானால் ஸம்பத்தால் எனக்கு என்ன உபயோகம்? அழிவற்ற நிலையை அடையும் மார்க்கத்தை எனக்குக் கூறும்.

யா:—‘நீ எனக்கு இதுவரையில் ப்ரியையாக இருந்தாய். இப்பொழுது ப்ரிய வசனத்தையும் சொல்லத்தொடங்கிவிட்டாய். அழிவற்ற நிலையை அடையும் வழியை எடுத்து விஸ்தரிக்கிறேன். கவனமாகக் கேள்.

‘பர்த்தா உண்மையான ப்ரிய வஸ்துவல்ல. பெண்சாதி ஆத்மாவாகிய வஸ்து ஸம்பந்தமாக அவன் ப்ரியனாகத்தோன்றுகிறான். இம்மாதிரியே எந்த வெளிவஸ்துவும் ப்ரிய வஸ்துவாகாது. அது அநுபவிப்பவன் ஆத்மா விஷயமாக ஸம்பந்தப்பட்டே ப்ரிய வஸ்துவாகத் தோன்றும். ஆகவே இந்த ஆத்மாதான் உண்மையில் ப்ரியமானது. இதன் ஸம்பந்தமாகத் தத்காலத்தில் த்ருப்தி உண்டாக்கும் வஸ்துக்கள் ப்ரிய வஸ்துக்கள் என்று நமக்குத் தோன்றும். ஆதலால் இவ்வெளி வஸ்துக்களைக் கவனியாது இந்த ஆத்ம விஷயத்தை ச்ரவண மனன நிதித்யாஸனம் (கேட்டல் சிந்தித்தல் தெளிதல்) ஆகிய இவைகளைச்செய்ய வேண்டும். இந்த வஸ்துவை ஒட்டாது வெளி வஸ்துக்களைத் தனிமையாகப் பாராட்டுபவன் எல்லா வஸ்துக்களிலிருந்தும் முடிவில் பிரிந்து துக்கத்தையே அடைவான். மத்தளத்திலிருந்து வரும் சப்தத்தைத் தனிமையாக இன்னதுஎன்று உணர முடியாமலிருந்தும் அடிப்பவன் அல்லது மத்தளம் இவைகளை உணர்ந்த மாத்திரத்தில் உணர முடிவதுபோலவும், சங்கு, வீணை முதலியவைகள் விஷயத்திலும் இம்மாதிரி இருப்பது போலவும், இந்த வெளி விஷயங்களின் உண்மை ஸ்வரூபம் வெளிவ்யாபாரங்களால் உணரமுடியாது; உள்காரண விஷயங்களால்தான் உணரமுடியும். நெருப்பிலிருந்து வரும் புகைபோல வேதம் முதலிய சாஸ்த்ரங்கள் ஆத்மாவிலிருந்தே வெளியாயின. ஜலங்களின் நிலயம் ஸமுத்ரம், உணர்ச்சிக்கு நிலயம் மனம், வேதத்திற்கு நிலயம் வாக்கு இதுபோலவும்; தண்ணீரில் போட்ட உப்பு கரைந்துபோகப் பிரிக்க முடியாதாயினும் ருசிக்கு வெளியாவது போலவும், இந்த ப்ரஹ்மம் எல்லாம் தோன்றி நின்று ஒடுங்குவதற்கு நிலயமாயும், எவ்வித வரையும் இன்றி ஞான ரூபமாகவே இருக்கிறது. நமக்குத் தனிமையாக உள்ள இருப்பு நீங்கினால் இப்பொழுதிருக்கும் நாமரூபாதிகள் நீங்கிவிடும்.

மை.—எனக்குக் குழப்பம் வந்துவிட்டது. அது இறந்துவிட்டால் எல்லாம் நீங்கிவிடும் என்றும், எல்லாம் அதனுள்ளேயே இருக்கின்றது என்றும் கூறிவிட்டீரே.

யா.—எதுவரையில் த்வைதம் (பேதம்) இருக்கிறதோ அதுவரையில் தான் அநுபவிப்பவன் அநுபவ விஷயம் என்பவை உண்டு. எல்லாம் இந்த ப்ரஹ்மமாகப் பார்க்குங்கால் அநுபவி, விஷயம் என்பவை எப்படி இருக்க இடமுண்டு? இவைகளை உணருபவனை எவ்வாறு உணருவது? அறிபவனை அறிவது அஸாத்யம். இந்த விஷயத்தை நன்றாக உணர்ந்தால் போதும் என்று கூறி முடித்தார்.

(5) தேனீக்கள் மதுவைச் சேர்க்கக் காரணமாக இருந்து அந்த மதுவின் மூலமாகவே தாம் தரித்து நிற்பதால் மது தேனீக்குக் காரணமாகியும் அவைகளால் ஏற்பட்ட ஓர் கார்யமாயும் ஆகிறது. ஆகவே மதுவென்னும் பதத்தை இந்த ப்ராஹ்மணத்தில் கார்யமாகியும் காரணமாகியும் உள்ள வஸ்து என்னும் பொருளில் உபயோகப்படுத்தி ப்ரஹ்மத்திற்கும் ஆத்மாவுக்கும் உள்ள அபேதம் கூறப்படுகிறது.

ப்ருதிவி ஜந்துக்கள் விஷயத்தில் மதுவாகவும், ஜந்துக்கள் ப்ருதிவி விஷயத்தில் மதுவாகவும் ஏற்படும். இதுபோல பூமியுள்ளிருக்கும் அழிவற்ற தேஜோவானான புருஷனும்,

தேஹத்துள்ளிருக்கும் ஆத்மாவும் மதுவே. இவன் தான் பரமாத்மா,அழிவற்றவன் ப்ரஹ்மம், எல்லாமாய் இருப்பவன்.

இம்மாதிரியே அப்பும், அக்நியும், வாயுவும், ஸூர்யனும், திசைகளும், சந்த்ரனும், மின்னலும், இடியும், ஆகாசமும், தர்மமும், ஸத்யமும், மானிடர்களும், ஆத்மாவும் ஆகிய இவைகளும் ஜந்துக்களும் பரஸ்பரம் மதுக்கள் ஆகையால் முன்னவைகளுள் இருக்கும் அழிவற்ற தேஜோவானை புருஷனும், தேஹத்துள் முறையே சக்தி, வாக்கு, மூச்சு, கண், காது, மனம், தேஜஸ், சப்தம், ஹ்ருதயாகாசம், ஒழுங்கு, உண்மை வஸ்து, மனிதன், ஆகிய இவைகளும் ஆத்மாவும் பரஸ்பரமதுவே. இவன்தான் பரமாத்மா, அழிவற்றவன், ப்ரஹ்மம், எல்லாமாயிருப்பவன்.

இந்த ஆத்மாதான் எல்லா ஜீவராசிகளுக்கும் ராஜன். சக்ரத்தின் குறுக்குக்கம்புகள் எவ்வாறு இருசிலுள்ள குடத்துள் அடங்கிவிடுகின்றனவோ அவ்வாறே ப்ருதிவி, அப்பு முதலிய முற்கூறியவை எல்லாம் ஆத்மாவுள் அடங்கும்.

இந்த ரஹஸ்யத்தை அதர்வணர் பிள்ளை ததீசீ என்பவர் அச்வனீ தேவதைகளுக்கு உபதேசித்தார். இவ்வாறு செய்யுங்கால் இவர் தலையை இந்த்ரன் அறுக்க அதற்குப் பதிலாகக் குதிரைத் தலையை இவருக்கு அச்வனீதேவதைகள் வைத்தனர். பின்னும் இவர் உபதேசிப்பதைக் கண்டு இந்த்ரன் மறுபடி இந்தத் தலையை வெட்ட ஸொந்தத்தலையை அச்வனீ தேவதைகள் இவருக்கு வைத்தனராம். அப்பொழுது இதைக் கண்ட ஒரு ரிஷி 'இந்த ப்ரஹ்மம் எல்லாமாயது. எல்லாத் தேஹத்துள்ளும் இது அமைந்து கிடப்பதால் இதற்குப் புருஷன் என்று பெயர். இது இல்லாத இடமே இல்லை. இந்த உருவங்களெல்லாம் ஆத்மாவின் உண்மை உருவை விளக்க ஏற்பட்டதே. இந்த்ரனாகிய இது மாயையால் (தோற்றத்தில்) அநேகமாயது. நூற்றுப்பத்து இந்த்ரியங்களுடன் ஸம்பந்தப்பட்டிருப்பது. இந்த ஆத்மாவே இவைகள் எல்லாமாயிருப்பது. கார்யம், காரணம், உள், வெளி இவைகள் அற்ற ப்ரஹ்மம் இதுவே. இந்த ஆத்மாவே ஸர்வ வ்யாபியாயும், ஸர்வக்ஞனும் உள்ள ப்ரஹ்மம்.

(6) இந்த ப்ராஹ்மணத்தில் ப்ரஹ்மமாகிய ஹிரண்யகர்ப்பர் முதல் பௌதிமாஷ்யர்வரையில் உள்ள குருபரம்பரை கூறப்படுகிறது. முற்கூறிய விஷயங்கள் இப்பரம்பரை வழியாக வந்தன போலும்.

**அத்யாயம். 3.** (1) விதேஹ தேசத்து அரசனாகிய ஜனகர் ஓர் அச்வமேதயாகம் செய்தார். அதற்கு அநேக ப்ராஹ்மண ச்ரேஷ்டர்கள் வந்தனர். இவர்களுள் யார்கற்றுத்தேர்ந்தவர்கள் என்று உணர ஆயிரம் பசுக்களை ஒன்றுசேர்த்து நிறுத்தி அவைகள் கொம்பில் பொற்பூண் பிடித்து ப்ராஹ்மணர்களை நோக்கி 'ஒப்ராஹ்மணோத்தமர்களே! உங்களுள் யார் சிறந்த புத்திமானோ அவர் இவைகளைத் தாராளமாக ஒட்டிக்கொண்டு போகலாம்' என்றார். இதைக்கேட்டதும் யாக்ஞவல்க்யர் தமது சிஷ்யன் ஒருவனை நோக்கி அவைகளை ஒட்டிப்போகச் சொன்னார். அவன் தன் குருவின் சிறப்பை உரக்க எடுத்துச் சொல்லிக்கொண்டு அவைகளை ஒட்ட ஆரம்பித்தான். அப்பொழுது ஸபையிலிருந்த அநேகர் அவரைத் தடுத்து 'நீர் மிக்க மேதாவியோ?' என்ன, அதற்கு அவர் மஹா விநயத்துடன் நான் ப்ரஹ்மத்தை உணரும் மேதாவி காலில் விழத்தயாராயிருக்கிறேன். ஆனால் எனக்கு இந்தப் பசுக்கள் வேண்டும்' என்று தமது சிறப்பைவெளியிட்டார். உடனே ஒருவர் எழுந்து 'லோக விஷயங்கள் எல்லாம், மரணம், இராப் பகல், இருபக்ஷங்கள், இவைகளால் பீடிக்கப்பட்டு நிற்க, ஸ்வர்க்கத்திற்கு யாதொரு வழியும் காணப்படவில்லையே! என்ன செய்வது?" என்று கேட்க 'மூன்று பீடைகளையும், **ஹோதா**, **அத்வர்யூ**, **உத்காதா**, ஆகிய மூவர் ஸஹாயத்தால் முறையே ஒழித்து, ஸ்வர்க்க வழியை **ப்ரஹ்மா** என்னும் **ரித்விக்** மூலமாக உணரவேண்டும்,' என்றார். பின்னர் அச்வமேதயாக மந்த்ர விஷய

மாகச் சில கேள்விகள் கேட்க யாக்ஞவல்க்யர் தயங்காது அவைகளுக்கு விடை அளித்து அவர் வாயை அடக்கினர்.

(2) இரண்டாவது ஒரு ப்ராஹ்மணர் எழுந்து 'க்ருஹ அதிக்ராஹங்கள் எவை, எத்தனைவிதம்' என்று கேட்க, 'ப்ராண, அபானன்; வாக், நாமம்; நாக்கு, ருசி; கண், உருவம்; காது, சப்தம்; மனம், ஆசை; கை, தொழில்; தோல், ஸ்பர்சம்; ஆகிய இவை எட்டும் க்ருஹாதிக்ருஹங்கள்' என்றார். மரணகாலத்தில் மனிதனது ஒவ்வொரு பாகமும் ஸூக்ஷ்மமாகி ஒடுங்க ஆத்மா எங்கே போகிறான்?' என்றுகேட்க, யாக்ஞவல்க்யர் அவரோடு ரஹஸ்ய ஸம்பாஷணை செய்து 'ஸத் கர்மத்தால் ஒருவன் ஸத்தாகவும், துஷ்கர்மத் தால் ஒருவன் அஸத்தாகவும் ஆகி மறுபடி பிறக் கிறானே ஒழிய அவனுக்கு ஒய்வே கிடையாது' என்றுகூறிக் கர்மத்தின் சிறப்பைப் புகழ்ந்துபேசி அவர் வாயை மூடிக்கொள்ளும்படி செய்தார்.

(3) இதன்பின்னர் ஒருவர் அச்வமேதயாகம் செய்பவர் கதியைப்பற்றி வினவ 'அவர்கள் நமது ப்ரஹ்மாண்ட முடிவில் சென்று பக்ஷி ரூபமான இந்த்ரன் மூலமாக வாயுவினிடம் ஒப்பு விக்கப்பட்டு முடிவில் மேலான பதம் பெறுவர். வாயுவே எங்கும் பரவி இருப்பது, எல்லாமாய் இருப்பது. இதை உணர்ந்தவன் மரணம் நீங்கு வான்' என்ற மறுமொழியால் மேல்கேள்வி கேட்க முடியாமல் இவர் மௌனமானர்.

(4) மற்றொருவர் 'ஸகுணமாயும், நிர்க்குண மாயும், எல்லாவற்றுள்ளும் இருக்கும் ஆத்மா வாயும் உள்ள ப்ரஹ்மம் எது? என்று கேட்க 'உனது ப்ராணபானுதி வாயுக்கள் உள்ளிருக்கும் ஆத்மாவே இந்த 'ப்ரஹ்மம்' என்று யாக்ஞவல் க்யர் கூறினர். இது விளங்காது, அவர் மறுபடி கேட்க, 'உன்னுள்ளிருக்கும் அறிபவனையும், பார்ப் பவனையும், உணருபவனையும் உள்ள வஸ்துவை மற்றைய வஸ்துக்களை உணருவதுபோல நேரிட உணரமுடியாது. இம்மாதிரி உன்னுள்ளிருக் கும் வஸ்துவே எங்குமுள்ளது. இதைத் தவிர மற்றவைகள் எல்லாம் அநித்யம்' என்று முற் கூறியதை விளக்க, அவரும் அடங்கினர்.

(5) முற்கூறிய கேள்வியை வேறு ஒருவர் கேட்க அதற்கு யாக்ஞவல்க்யர், 'பசி தாஹம், துக்கம் மரணம் முதலியவைகளுக்கு அப்பாற் பட்டது இந்த ஆத்மா. இதை ப்ராஹ்மணர் கள் உணர்ந்து, புத்ரன், பணம் பரலோகம் ஆகிய இவைகள் விஷயமாக உள்ள ஆசை களிலிருந்து நீங்கி, ஸந்யாஸிகளாகத் திரி வார்கள். ஆகவே ப்ராஹ்மணன் முதலில் நன் ருகக் கற்றுத் தேறவேண்டும், பின்னர் ஆத்மா வை உணர்ந்து பலம் அடையவேண்டும். பின் னர் ப்ரஹ்ம விஷயமான அமௌனம், மௌனம் ஆகிய இவைகளை நன்கு உணர அவன் உண்மை யான ப்ராஹ்மணனுவான். அவன் எல்லாவிதத் தொழில்களுக்கும் அப்பாற்பட்டவனாகநிற்பன். இதல்லாத வேறு எந்த நிலையும் அநித்யமே' என்று கூற அவரும் மௌனமானர்.

(6) வாசக்னு பெண்ணாகிய **கார்கி** என்ற ப்ரஹ்மசாரிணி யாக்ஞவல்க்யரை நோக்கி 'இங்கு எல்லாம் அப்புவினல் பரவப்பட்டிருக்கிறது. அப்புள் பரவியிருப்பது (ஸூக்ஷ்மமாக இருப் பது) எது? என்று கேட்க அவர் 'வாயு' என் ருர். பின்னர் 'முறையே வாயு, அந்தரிக்ஷம், கந்தர்வலோகம், ஆதித்யலோகம், சந்த்ரலோகம், நக்ஷத்ரலோகம், தேவலோகம், இந்த்ரலோகம், ப்ரஜாபதிலோகம், ப்ரஹ்மலோகம், இவைகளுள் பின்னது, முன்னதைவிட ஸூக்ஷ்மமானது என் றும், யாக்ஞவல்க்யர் ஒவ்வொரு விஷயத்திலும் கார்கி கேள்வியின் மேல் கூறிவந்தார். முடிவில் ப்ரஹ்மலோகத்தை விட ஸூக்ஷ்மம் எது?' என்ற கேள்வி பிறக்க; 'இதை வேதங்களால் நேராக உணர வேண்டுமே ஒழிய தர்க்கத்தால் உணர முடியாதென்று கூறி அவள் வாயைத் தத் காலத்திற்கு அடக்கி வைத்தார்.

(7) அருணர் பிள்ளை **உத்தாலகர்** யாக்ஞவல்க் யரை நோக்கி 'எல்லா உலகங்களுள்ளும் (மணிக ளுள்) கயிறு போன்ற ஆதாரமாக இருப்பது

எது ? இதை உள்ளிருந்து இழுக்கும் அந்தர் யாமி யார்?' என்று கேட்டார். அதற்கு யாக்ஞ வல்க்யர் :—

'வாயுவே உள்ளூறப்போயிருக்கும் கயிறுக்கு ஸமானம். இதன்பேரில்தான் எல்லாம் தரித்து நிற்பது. வாயு நீங்குவதால் தான் மனிதன் இறப்பதும்.

'பூமி, அப்பு, அக்நி, வாயு, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், ஸூர்யன், திசை, சந்த்ர நக்ஷத்ரங்கள், ஆகாசம், தமஸ், தேஜஸ், ஜந்துக்கள், ப்ராணன், வாக்கு, கண், காது, மனம், தோல், ஜீவாத்மா, சக்தி ஆகியஇவைகளுள்ளும்புறமும்இருப்பவனு யும், இவைகளால் அறியப்படாதவனுயும், இவை களைத் தேஹமாக உடையவனுயும், அடக்கியாள் பவனுயும் உள்ளவன் எவனே, அவனே உன் ஆத் மா, அந்தர்யாமி, அழிவற்றவன்' என்று கூறி 'இதுதான் எல்லாவற்றையும் உணர்வது. இதை உணரவே முடியாது ; இதைத்தவிர உணர் பவன் வேறென்றுமில்லை; இதுதான் உன் ஆத் மா, அந்தர்யாமி அழிவற்றவன், இதைத் தவிர மற்றவைகள் எல்லாம் அநித்யம்' என்று விளக்கி அவரை வென்றார்.

(8) உடனே கார்கி எழுந்து எல்லாவற்றை யும் விழுங்கிக்கொண்டு ஸூக்ஷ்மமாக இருப்பது எது ? என்றுகேட்க, ஆகாசம் என்றார். 'இதை விட ஸூக்ஷ்மமானது எது?' என்ன; 'இந்த அதி ஸூக்ஷ்ம வஸ்துவை அக்ஷரம் (அழிவற் றது) என்பார்கள் பெரியோர். இதில் ஓர்வித குணமும் காணப்படாததால் இது நிர்க்குணம். தன்னம் தனியானது. இதன் சக்தியால்தான் ப்ர பஞ்சத்தொழில்கள் எல்லாம் நடப்பது. இதை உணராது எந்த ஸத்கிருத்யத்தைச் செய்தபோ திலும் அதன் பலன் சீக்ரம் முடிவுபெறும். அவன் அடிமைக்கு ஸமானம். இதை உணருப வனே ப்ராஹ்மணன். ஓ கார்கி! இது உணர முடி யாத வஸ்துவாகிலும் எல்லாவற்றையும் உணரு வது. இதைத் தவிர உணரும் வஸ்து வேறொன் றும் இல்லை. ஆகாசம் இத்தகைய அக்ஷரத்தில் தான் தரித்து நிற்பது' என்று கூற கார்கி மிகுந்த ஆச்சரியத்துடன் 'இவரை ஒருவராலும் வெல்ல முடியாது, என்றாள்.

# தேவாரம்—சிற்றாராய்ச்சி

## SAIVITE HYMNS—A CRITICAL NOTE

தமிழ்வேதம் எனச் சிறந்துநிற்கும் தேவாரத் தைத் தமிழ் மக்கள் ஓதி உய்யும்வண்ணம் உல கத்துக் குதவிய நாயன்மார்களாகிய திருஞான ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள், ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் என்ப வர்களது திவ்ய சரித்ரங்களைத் திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணத்திற் காண லாகும். அன்னோர் திருவாய்மலர்ந்தருளின தேவாரத்தின் மெய்ப்பொருளை முக்குண வசத் திற்பட்ட நம்போலியர் ஒருசிறிதும் கண்டுணர் தல் அரிது. ஆயினும் உற்றுநோக்க உற்றுநோக்க அவர்கள் சரித்ரத்திற் சில விஷயங்கள் அவர் தம் பாசுரத்தினின்றே தெரிகின்றன. அவ்விஷ யங்களையும் இன்னும் அறியக்கிடக்கின்ற சில விஷயங்களையும் இங்கெடுத்தெழுதுவாம்:—

### 1. திருஞானசம்பந்த ஸ்வாமிகள் தேவாரம்

(i) இவரது சரித்ரத்திற் சில விஷயங்கள்:

(a) சிவபிரானது திருவடியை என்றும் மற வாத தன்னை மையல் செய்து இம்மண்மிசைப் பிறக்குமாறு இறைவன் செய்தனர் என்பது—

"துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்தி மண்ணின்
பிறக்குமாறு காட்டினுய்." [மேற்

(b) சீகாழியிற் பார்வதி தேவியார் பொற்கிண் ணத்து உணவை ஊட்டுவித்ததும், இன்னார் ஊட்டுவித்தனர் என்பது தெரியாது, இவர் தந் தந்தையார் இவர்மீது கோபங்கொண்டதும், இங்ஙனம் தேவியும் இறைவனும் இவர் உள்ளத் தைக் கவர்ந்து ஆட்கொண்டதும்:—

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதென
[னத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே."

"ஆதி எமை யாளுடைய அரிவை யொடு பிரிவிலி
[யமர்ந்த பதிதான்
சாதி மணி தெண்டிரை கொணர்ந்துவயல் புகவெறி
[கொள் சண்பை நகரே"
"என்னுள்ளங் கவர் கள்வன் * * * பீடுடைய பிர மா
[புர மேவிய பெம்மா னிவனன்றே."

(c) இவர் பாலப் பர்வத்திலேயே தலங்கள் தோறும் பதிகம் பாடிச் சென்றனரென்பதும்:—
"பாலனீங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்"
"பாலனுய தொண்டு செய்து".

(d) பாலப்பர்வத்தினராதலின் தனது தந்தை யாரது தோள்மேலிருந்தபடியே இன்னிசைப் பாடல் பாடினரென்பது:—
"மறையொன்ற வத்தர்* பியன்மே விருந்தின்னிசையா
[லுரைத்த பனுவல்"

(e) பதிகம் பாடி ஆற்று வெள்ளத்தில் ஓடத்தைச் செலுத்திக் கோள்ளம்பூதூர் என்னுந் தலத்தை அடைந்தது.
"ஓடம்வந்தணையுங் கொள்ளம்பூதூர் ஆடல் பேணிய
[அடிகளை உள்கச்
"செல்லவுந்துக சிந்தையார்தொழ, நல்குமாறருணம்ப
[னே."

(f) திருவாவடுதுறையிற் பொருள் வேண்டி ஈசனைப்பாடினது:—
"இதுவோ எமையாளுமா றீவதொன் றெமக்கில்லையே
லதுவோ வுனதின்னரு ளாவடுதுறை யானே."

(g) வேதாரண்யம் என்னும் தலத்தில் வேதங்களாற் காப்பிட்டிருந்த கதவம் அப்பர்ஸ்வாமிகளால் திறக்கப்பட்டு இவரது திருப்பதிகத்தால் மறுபடி காப்பிடப்பட்ட விஷயம்:—
"சதுரம்மறை தான்றுதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காடுறை மைந்தா
இது நன்கிறை வைத்தருள் செய்த வெனக்குன்
கதவந்திருக் காப்புக் கொள்ளுங் கருத்தாலே."

(h) சமணரொடு வாது செய்து வெற்றி பெறுமாறு இறைவன் திருநீறு கூட்டுவிக்கும் என்னும் துணிவோடு மதுரைக்குப்புறப்பட்டது:—
"கொத்தலர்குழலியோடும் விசயற்குநல்கு குணமாய
[வேட விகிர்தன்
மத்தமு மதியினுக மூடிமேலணிந்தெனுளமே புகுந்த
[வதனுற்
புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ணல் திரு
[நீறு செம்மை திடமே
யத்தகு நல்ல நல்ல வவை நல்ல நல்ல அடியாரவ
[ர்க்கு மிகவே.

(i) சமணரொடு வாது செய்வதன்முன் ஆலவாய்ப் பெருமானது திருவுள்ளக் குறிப்பை அறிய வேண்டினரென்பது—
ஒதி யோத்தறியா அமணுதரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
ஆதியே திருவாலவா யண்ணலே
நீதியாக நினைந்தருள் செய்திடே.

அங்ஙனம் உள்ளக்குறிப்பை அறிந்து, ஆலவாய்ப் பெருமானது அநுமதி பெற்றவுடன் "வேத வேள்வியை நிந்தனை செய்துழல், ஆதமில்லி யமணொடு தேரரை, வாதில் வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனுய பரமனே, ஞால நின்புகழே மிக வேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம் மாதியே" எனவரும் திருப்பதிகத்தைப் பாடின ரென்பது அப்பதிகத்தின் ஈற்றில் வரும்:—
"கூடலால வாய்க்கோனை விடைகொண்டு
வாடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச் சம்பந்தன் மதித்தவிப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே"
என்பதா லறியக்கிடக்கின்றது.

(j) தாமிருந்த இடத்தில் சமணர்கள் இட்டதீ பாண்டியனையே சுடுக எனப்பதிகம் பாடினது:—
தஞ்சமென்றுன் சரண் புகுந்தேனையு
மஞ்சலென்றரு ளாலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தமணர் கொளுவுஞ் சுடர்
பஞ்சவன் றென்னன் பாண்டியற்காகவே"

(k) அங்ஙனமே பாண்டியன் மீதுற்ற தீப்பிணியைத் திருநீற்றுப்பதிகம் பாடிப் போக்கினரென்பது:—
"ஆற்றலடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவு பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்
[தாமே."

* தோள்

(l) பின்னர் தீயிலிட்ட ஏடு வேகாமலும், வைகை ஆற்று நீரிலிட்ட ஏடு எதிரேறவும், திருப்பதிகங்கள் பாடிச் சமணரை வென்றது— "தளிரிள வளரொளி" எனத் துவக்கும் பதிகத்தில் "எரியிடி லிவை பழுதில மெய்மையே" என்பதாலும், "வைகை நீரேடு சென்றணைதரும் ஏடகம்" என்பதாலும் அறியக்கிடக்கின்றது.

(m) திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனையாக்கின ரென்பது—

"குரும்பை ஆண்பனை யீன்குலை ஒத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே."

என்னும் பாடலால் விளங்குகின்றது.

(n) திருமருகலில் விஷந்தீர்த்த பதிகம் பாடினது, அத்தலத்துப் பதிகமாகிய "சடையாயெனுமால்....தகுமோ இவளுண் மெலிவே" என்பதிற் றெரிய வருகிறது.

பூம்பாவையைத் திருமயிலையில் எழுப்பியது.- 'மட்டிட்டபுன்னை" எனவரும் பூம்பாவைப்பாட்டால் அறியலாம்.

(o) நல்லூர்ப் பெருமணம் என்னுந் தலத்தில் சிவபிரானொடு கலக்க நினைந்து இவ்வுலகினின்றும் மறைய வேண்டினது.—

"நல்லூர்ப் பெருமணம் புக்கிருந்தீர் எமைப்போக்கரு [ளீரே"

"பெரும்பதம்......உறும்பொருளாற் சொன்னவொண் [டமிழ்"

(ii) ஸ்ரீ ஸம்பந்தர் தேவாரத்தில் கூறியுள்ள நாயன்மார், முனிவர், அரசர், முதலியோர்:—

மார்க்கண்டன், நளன், புரூரவா, ராமர், அநுமன், ஜாம்புவான், ஸுக்ரீவன், ராவணன், வண்டமரோதிமடந்தை(வண்டோதரி), ஸம்பாதி, ஜடாயு, பஞ்சவர், விஜயன், கோச்செங்கணான், தில்லைவாழந்தணர், தண்டி, பாணன், கண்ணப்பர், சண்டேச்வர், சிறுத்தொண்டர், முருகநாயனார், நமிநந்தியடிகள், புகழ்த்துணைநாயனார், நீலநக்கநாயனார், குலச்சிறைநாயனார், மங்கையர்க்கரசி.

(iii) ஸ்ரீஸம்பந்தர்தேவாரத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ள திருவிழா முதலிய.—

(a) திருவிடைமருதூர் பூச ஸ்நாநம்.

(b) திருமயிலை ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, தைப்பூசம், ஆதிரைநாள், பங்குனி உத்திரநாள்.

(c) வெண்காட்டு முக்குளநீர் ஸ்நாநம்.

(d) திருநெல்வேலி திங்களுள்விழா, ஸிந்து பூந்துறை.

(e) வீழிமிழலை விண்ணிழி விமானம்.

(iv) ஸ்ரீஸம்பந்தர் தேவாரத்தில் உள்ள பழமொழி போன்ற வாக்கியங்கள்.—

(a) பேய்த்தேர்ப்பின் குடங்கொண்டு நீர்க்குச் செல்வார்.

(b) எந்நாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே!

(c) நம்பொருள் நம்மக்கள்.

(d) ஊமனார் தங்கனா.

(v) ஸ்ரீஸம்பந்தர் தேவாரத்திற் சொல்லப்பட்டுள்ள சில சைன நூல்கள்.—

கிளிவிருத்தம், எலியின் தொழிற்பாட்டு

வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, எம். ஏ.

---

அபாத்ரதானம் செய்யாதே.—ஏனெனில், சிலருக்குச் செய்யும் புண்யத்திற்குப் பதிலாகப் பாபத்தை யுண்டாக்குகின்றது. ஒருவன் இரப்பவர்களுக்கெல்லாம்அன்னமளிக்கும்தர்மசாலை ஒன்று வைத்திருந்தான். ஒருநாள் கசாப்புக்கடைக்கிப்பசுவை யோட்டிக்கொண்டு போகும் புலையன் ஒருவன் நடு வழியிற் களைத்து, அந்தத் தர்மசாலைக்குப்போய்ச் சாப்பிட்டுத் திடமாகி உற்சாகத்துடன் பசுவைக் கசாப்புக்கடைக்குக் கொண்டு போனான். கடைசியில் பசுவைக்கொன்ற பாவம் இரண்டு பங்காகப் பிரிக்கப்பெற்று, புலையனுக்குக் கால் பங்கும், தர்மசாலைத் தலைவனுக்கு முக்கால் பங்குமாகப் பாகிக்கப்பட்டது.

ஸ்ரீ. ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர்.

# ராஜாங்க முறை ஸம்பந்த மானவிஷயங்களைப்பற்றிய பிரதமக் கொள்கைகள்.

## CIVICS: ELEMENTARY PRINCIPLES

## பிள்ளைகள் கடமைகள்

## FILIAL DUTIES

(All Rights Reserved.)

**நேசம்.**—நாம் நமது தாய்தந்தையர்களை நேசிக்கவேண்டும். நமது கடமைகளுள் மிக இனியதும் இதுவே. இதைப்பற்றி உங்களுக்கு ஏன் ஞாபகப்படுத்த வேண்டுமென்று ஒருகால் நீங்கள் கேட்கலாம். பெற்றோர்களிடம் அன்பும் நேர்மையுமில்லாத குணக்கேடுள்ள ஒரு குழந்தையும் இருக்கக்கூடுமோ! நான் சொல்வதை நன்றாய் அறிந்து கொள்வீர்களாக. முத்தம் கொடுத்துச் சீராட்டுவதனாலேயே, உங்கள் புத்ரீய வாஞ்சையைக் காண்பிக்கும். இளமைப்பருவத்தைக் கடந்து விட்டீர்கள். பெற்றோர்களுக்கு த்ருப்தி உண்டாக்குவதில் தன்னால் கூடிய யாவற்றையும் செய்பவனே அவர்களிடம் உண்மையான நேசமுடையான் ஆவன். உங்கள் கடமைகளையெல்லாம் மனச்சாட்சிக்கு ஒத்தவாறு செய்து முடிப்பதே பெற்றோர்களிடம் நீங்கள் வைத்திருக்கும் நேசத்திற்கு ச்லாக்கியமான அறிகுறியாம். ப்ரியமுள்ள குமாரனாக இருத்தல் மாத்ரம் போதாது. ஆனால் உங்கள் ஸஹோதர ஸஹோதரிகளுக்கும் மற்றும் அந்யர்களுக்கும் கூட உதவி செய்துகொண்டு நன் மாணாக்கனாக நடத்தல் வேண்டும். உங்கள் வாழ்நாள் முழுமையும் எவ்வித நிலைமையிலும் உங்கள் மர்யாதையைக் காப்பாற்றிக்கொண்டு மானியாக நடந்தால் பெற்றோர்கள் உங்களைப் பெற்றதின் நிமித்தம் மிகப் பெருமை யடைவார்கள். அப்போது உங்களுக்கு அவர்களிடம் உண்மையான நேசம் இருக்கிறதென்றும் அவர்களை ஸந்தோஷப்படுத்த வேண்டுமானால் குறைவின்றிப் பாடு படுவீர்களென்றும் காண்பித்தவர்கள் ஆவீர்கள்.

மேலும் மர்யாதையும், கீழ்ப்படிந்து நடத்தலும் நன்றியறிவும் பெற்றோர்களுக்குரிய கடமைகளே.

உண்மையான புத்ரீய வாஞ்சையுள்ள ஒரு குழந்தைக்கு இக்கடமைகளைச் செய்து முடிப்பது மிகச்சுலபமே தான்.

புத்ரர்கள் பெற்றோர்களிடத்தில் வைத்திருந்த அதிநேசத்தைப்பற்றி நான் முன்பு படித்த இரண்டு கதைகள் இப்போது என் ஞாபகத்திற்கு வருகின்றன. முதலாவது, "**ஸ்ற்புத்ர மார்க்கம்**" என்னும் பெயரையுடையது. இது அடியில் வருமாறு.—

முன்னொருகாலத்தில் ஐரோப்பாகண்டத்தில் **ஸிஸிலி** (Sicily) த்தீவில் **எட்னா** (Etna) என்னும் எரிமலைச் சாரலில் ஓர் கிராமத்தில் இரண்டு ஸஹோதரர்கள் வஸித்துவந்தார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களிடத்தில் அதிக வாஞ்சையுள்ளவர்கள்; மிகவும் தள்ளாத கிழவர்களான தங்கள் பெற்றோர்களுக்கு நன்மை செய்வதே இம்மக்களுக்கு விசேஷ ஆனந்தம். அக்காலத்தில் ஒரு நாள் திடீரென்று பூமி கம்பித்தது. குபீர் குபீர் எனப் புகைப்படலங்கள் ஆகாயத்தை நிரப்பின; நடுப்பகல் நள்ளிருளாக மாறிவிட்டது. அவ்விடமுள்ள ஜனங்கள் நடுநடுங்கி கைகால் உதறவிடுத்து உயிர் தப்பிப்பிழைக்க நாலாதிக்குகளிலும் ஓடினார்கள். அவரவர்கள் விலையுயர்ந்த பொருள்களை மாத்ரம் எடுத்துச் சென்றார்கள். தப்பியோடச் சக்தியில்லாத அநேக பாலர்களும் வ்ருத்தர்களும் மாண்டார்கள். மேற்கூறிய இளங்குமாரர்களோ தங்கள் அருமையான பொருள்களையும் விலை யேறப்பெற்ற ஆடை ஆபரணங்களையும் ஒரு பொருட்டாக மதிக்காமல் தங்கள் வயது சென்ற தாய் தந்தையர்களே தங்கள் உயிரினும் சிறந்த பொருள்கள் என நினைத்துத் தகப்பனை ஒருவனும், தாயை ஒருவனுமாக முதுகின்மேல் தூக்கிக் கொண்டு அபாயமில்லாத ஒரு வழியாகப்போய் எரிமலைக்கு வெகுதூரத்திற் கப்பால் உள்ள ஓர்

இடத்தில் பத்ரமாய் வந்து சேர்ந்தார்கள். அப்போது அப்புத்ரர்களுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. இச்சிறுவர்கள் இவ்வாறுசெய்திராவிட்டால் அவர்கள் இறந்துபோவது திண்ணம். அன்றுமுதல் இவர்கள் தங்கள் பெற்றோர்களைத் தூக்கிச் சென்ற வழிக்கு **ஸற்புத்ர மார்க்கம்** என்று பெயர் வழங்கலாயிற்று. இக்கதையிலிருந்து அச்சிறுவர்களுக்குத் தங்கள் தாய்தந்தையர்களிடத்தில் இருந்த நேசமும் அதனால் அவர்களடைந்த கீர்த்தியும் யாவர்க்கும் நன்றாய் விளங்கும்.

நான் கீழே சொல்லப்புகும் இரண்டாவது கதை, ஓர் எலிக்கு அதன் தகப்பனிடத்திலிருந்த விச்வாஸத்தைப் பற்றியது. இதைக் கவனித்துக் கேளுங்கள். நமது வீடுகளில் எலிகளினால் உண்டாகும் உபத்ரவமும் எலிப்பொறிகளை வைத்து நாம் அவற்றைப் பிடித்து அழிப்பதும் யாவருக்கும் தெரிந்ததே. முன்னொரு காலத்தில் வ்யாபாரச் சரக்குகளை ஏற்றிக்கொண்டு ஓர் கப்பல் ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்தை நோக்கி ப்ரயாணம் செய்து கொண்டிருந்தது. அக்கப்பலில் அநேகம் எலிகள் ஸாமான்களைத் தின்று கொழுத்து அதிக தொந்தரவுசெய்தன. ஸாமான்களைக் கடித்தும் தின்றும் சேதப்படுத்தி வந்ததைப் பார்த்துக் கப்பற்காரர்கள் அவ்வெலிகளை உடனே தொலைத்துவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். கப்பல் துறைமுகம் வந்து சேர்ந்ததும் கப்பல்தலைவன், அக்கப்பலில் கந்தகத்தை ஏராளமாய்க் கொளுத்திப் புகைபோட்டு எலிகளைப்பிடித்துக் கொன்றுவிடும்படி உத்திரவு பண்ணினான். அவ்வாறே செய்தபோது கந்தகப் புகைக்கும், உஷ்ணத்திற்கும் ஆற்றாது எலிகள் தங்கள் வலைகளை விட்டு வெளியே வந்து நாலாபக்கங்களிலும் ஓடி ஒளியத் தலைப்பட்டன. கப்பற்காரர்கள் வெளிவந்த எலிகளைக் கொன்று அழித்து வந்தார்கள். கடைசியில் உடம்பெல்லாம் வெளுத்துத் தளர்ந்துபோன ஒரு குருடான கிழ எலியை, ஒரு சிறு எலியானது தன்முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு கப்பலின் மேற்றளத்தில் ஓடி வந்தது. இக்காட்சியைக் கண்டதும் கப்பற்காரர்களுக்கு அதிக இரக்கம் உண்டாயிற்று. அக்கிழ எலியானது சிறு எலியின் தகப்பன் என்று எண்ணி, ஒரு எலிக்குக்கூட தன் தகப்பனிடத்தில் என்ன நேசம் என்று சொல்லிச்சொல்லி ஆச்சர்யமடைந்தார்கள். அச்சிறு எலிக்கு இருந்த அறிவையும், கடமையும் பார்த்து அகமகிழ்ந்து ஒரு தீங்கும் செய்யாமல் அதையும் அதன் வயது சென்ற தகப்பனையும் பத்திரமாய்ப் போய்ச் சேரும்படி விட்டுவிட்டார்கள். கேவலம் பகுத்தறிவில்லாத எலிகள்கூட இவ்வளவு விச்வாஸமாயிருக்கும்போது, மானிடராய்ப் பிறந்த நாம் நமது பெற்றோர்களிடத்தில் எவ்வாறு நடந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்களாக.

C. S. சுந்தரம் ஐயர், பி. ஏ., எல். டி.

பணமும் பாக்யமும்.—பணத்திலே ஒருவன் பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடிய அம்சம் ஒன்றுமில்லை. நாம் பணக்காரனா யிருக்கின்றோமெனக் கருதுவையேல், உன்னைவிட பணக்காரரா யிருப்போர் இன்னும் எத்தனையோ பேருளர்; அவர்களை நோக்க நீ வெறும் பிச்சைக்காரனே யாவாய். இருட்டினவுடன் வெளியே வரும் மின்மினிப் பூச்சிகள் நாமே உலகிற்கு ஒளி யளிக்கின்றோம் என்று எண்ணுகின்றன. பிறகு நக்ஷத்ரங்கள் "நாம்தான் ப்ரபஞ்சத்துக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கின்றோம்" என்று நினைக்கின்றன. சற்று நேரங்கழித்துச் சந்திரன் உதயமாகி ஆகாய வீதியில் வந்தவுடனே, நக்ஷத்ரங்கள் மானமிழந்து வ்யஸனமுற்றனபோல் காணப்படுகின்றன. அப்பொழுது சந்திரனும் செருக்குற்றுத் தன் வெள்ளொளியால் தான் உலகம் தேஜோமயமாகி எங்குப் பார்க்கினும் அழகிலும் உற்சாகத்திலும் மூழ்கி மந்தஹாஸத்துடன் ஒளிர்கின்றதென்று நினைக்கின்றான். ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம், என்ன ஆச்சரியம்! இதோ அருணன் தோன்றிக் குணதிசையிலே (கிழக்கு திக்கிலே) பால ஸூர்யன் உதயமாகப் போவதை முழக்குகின்றான். இப்பொழுது சந்திரன் எங்கே? தாம் தாம் பணக்காரர்களென்று கருதுவோர் இத்தகைய ஸாதாரண இயற்கை விநோதங்களை யுற்று நோக்குவரேல், அவர்கள் அதுமுதல் பிறகு எக்காலமும் தம் செல்வத்தைப் பற்றிப் பெருமை பாராட்டவே மாட்டார்கள்.

உபதேச ரத்நமாலை.

## குடித்தன முறைமை

**Domestic Economy**

இனி சுவர்களிருக்கவேண்டிய முறைமையைப் பார்ப்போம். அனேகர் கண்ட கண்ட விடங்களி லெல்லாம் அடுப்பு வைத்து வீட்டிலதிகமாகப் புகையடித்துச் சுவர்களைக் கரியாக்கிவிடுகிறார்கள். இதை யோசித்தே வெள்ளைக்காரர் பங்களாக் களில், சமையலிடம் தனியாகக் கட்டப்படுகிறது. நாம் புகைப்போக்கிகளுள்ள விடங்களில் மட்டுமே சமைத்தல் தகுதி. இல்லாவிட்டால் பெரிய ஜன்னல்கள் இருக்குமிடத்திற் கருகாமையில் சமைத்தல் வேண்டும். இப்படிச் செய்யும் விதத்தில் காற்று அடித்துப் புகையைக்கொண்டுபோய் விடும். இல்லாவிட்டால் சமையலறை முழுவது மண்டிக்கொண்டே யிருக்கும். சமைப்பவர் கண்களுக்குங் கெடுதியுண்டாக்கும். அநேகர் கண்ட கண்ட விடங்களில் கயிறு கட்டிச் சாமான்களைத் தொங்கவிடுகிறார்கள். பிறகு இக்கயிறுகள் நாலாபுறமுந் தொங்கிப், பார்ப்பதற்கு அசங்கியமாயும், நடமாடுபவர் தலையிலிடிப்பதுமாயிருக்கின்றன. இது விஷயத்திற்குக் கூடியவரை சுவரில் கதவுள்ள அலமார்களும், ஆழங்கால்களும் வைக்கப்படுதல் வேண்டும். ஆழங்காலென்பதைக் கோக்காலியென்றுஞ் சொல்லுதலுண்டு. இவைகளிற் சாமான்கள் வைக்கப்படுதலால், சமையற்கூடத்தில் இடைஞ்சலில்லாமல், ஸாமான்களை ஒழுங்காயும் கைக்குவேண்டியவாறு அருகாமையிலு மிருத்தல் முடியும்.

இனி சுவர்களை வெள்ளையடித்தல் சுசியாயிருத்தலுக் கின்றியமையாதது. மூட்டுப்பூச்சிகள், ஒட்டரை முதலியன சேரவிடாமலும்,எண்ணெய் யழுக்கு முதலியன பட்டவையை நீக்கிவிடவும், கண்ணுக்கழகாயிருக்கவும் கடைசியிற் சுவர்க்கே பலங்கொடுப்பதற்கும் வெள்ளை யடித்தல் வேண்டும். ஆனல் எவ்விதத்தாலுஞ் சமயற்கட்டிடத்தில் புகை சேருவதால் அவ்விதப் புகையின் மேல் வெள்ளையடித்தல் முடியாது. ஆகவே மஞ்சள் அல்லது சிகப்புக்காவி யடித்தல் நல்லது. சமயற்கட்டிலடிப்பது கூடியவரை கட்டியாகவும் கனமுடையதாகவு மிருத்தல் வேண்டும். அப்படி யிருந்தால் மட்டுமே புகை, கரி முதலியனவற்றை மாற்றல்கூடும்.

இனி, வீட்டில் பொதுவா யெவ்விடத்திலும் குப்பை சேரவொட்டல் கூடாது. ஏனென்றால் தேள், பாம்பு முதலிய கெட்ட ஜெந்துக்களடைவதற்கு இடமாகும். ஆகவே ஆண்பிள்ளைகளுபயோகிக்கு மறைகளில் மூங்கிற் கூடைகளிருத்தல்வேண்டும். கிழித்துப்போடுங் காகிதம், மற்றக் குப்பைகளைக் கூடியவரை அக்கூடைகளிலே போட்டு வரவேண்டியது. அறைகள் வாரத்துக்கிரண்டு, மூன்று தடவை பெருக்கப் பட்டாலு மிக்கூடைகளிலுள்ள குப்பைகள் அன்றன்றெடுக்கப் படுதல்வேண்டும். இதுபோலவே பெண்கள் வேலைசெய்யு மிடங்களில் ஒரு இரும்பு வாளி யொன்றிருத்தல் வேண்டும். ஈரச்சூம்பல், வைக்கோல்முதல், காய்கறிஅரிந்த குப்பை, பழங்களினின்று முரிக்கப்பட்ட தோல்வரை எல்லாச் சாமான்களையும் போட, கூடையினும் பலமானதாய் இரும்புவாளி யிருத்தல் முக்யம். அன்றன்றைக் கிவ்வாளியிலுள்ள குப்பையைக் காலை மாலை இருவேளை எறிந்து, அப்பாத்திரங்களைச் சுத்தப் படுத்தல் வேண்டும். இவ்விதமாகக் குறிப்பிட்ட விடங்களிலேயே குப்பைகளைக் கூடியவரைப் போட்டு வருவதால் சுத்தமதிகப்படும். வேலைக்காரர் குப்பைகளை யெடுத்தெறிந்துவிடவு மெளிதாயிருக்கும். வாழைப்பழத் தோல்கள் கீழே கிடந்து அவற்றை மிதித்து வழுக்கி வீழ்ந்துக்காயப் பட்டிருப்பதுண்டு. இதுபோன்ற அவலக்ஷணமான ஸங்கதிகளில்லாமலிருக்க வேண்டியதேல், கூடைகளும் வாளிகளு முபயோகித்தல் அவசியமே.

இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுமிடத்தே குழாய், தண்ணீர்த்தொட்டி முதலிய விடங்களில் பாசிபிடித்துக் கால் வழுக்குவதுண்டு. இவ்வித ப்ராணபத்தை நீக்கிக்கொள்ள வேண்டு

பவர், சிறிதுஞ் சோம்பலில்லாமல், செங்கலிட்
டுத் தேய்த்தாவது, கரைத்த சுண்ணாம்புடன்
மண்ணைச்சேர்த்து மெழுகிவிடவாவது வேண்டி
யது. சுண்ணாம்புஞ் செங்கல்லும் பாசியைத்
தின்றுவிடும். ஆகவே யவ்விடம் சுத்தப்படும்.

நாற்காலி மேஜைகள் இருக்குமிடங்களை யடிக்
கடிப்பெருக்கிச் சுத்தப்படுத்துவது எளிதில் முடி
யாத விஷயம். கூடைகள் வைத்துக் குப்பைகளை
யவைகளிற் போடுவதால், அதிகமாகக் குப்பை
சேரவிடாமல் வைத்தல் முடியும். என்றாலும்
மாதமொருமுறை ஸாமான்களை இடமாற்றி வைத்
தல் நல்லது. ஏனென்றால் சில ஸமயங்களில்
நமக்குக் கண்ணுக்குத் தோற்றாமல் கரையான்
பிடித்திருத்தல் கூடும். இல்லாவிட்டாலும் எலி
கள் தேரைகள் கூடுவைக்கின்றன. இவைகளை
யப்போதப்போது நீக்கிவிட இதுவே தகுந்தவழி.
சுவற்றிற் தொங்கவிட்டிருக்கும் படங்களையும்,
மாதமொருமுறை முன்னும் பின்னுந் துடைத்து
ராமபாணம் என்று சொல்லப்படுஞ் செல்லரிக்கிற
மீன்பூச்சி சேரவொட்டாமல் தடுக்கவேண்டியது.
ஸ்ரீராமரது பாணம் எப்படிப் பதினான்குலகத்
தையு மூடுருவிப் பாய்வதாகக் கேள்விப்படுகி
றோமோ அப்படியே அநேகம் பக்கங்களையுந்
தாண்டி புஸ்தகங்களை இவைகள் ஒரே தொளை
யாய்த் தொளைத்து விடுகின்றன. படங்களிலு மழ
கான கண்கள் முகங்களை, யொன்றும் பாராமற்
தின்பண்டமாக நினைத்துத் தின்றுவிடுகின்றன.
இது விஷயம் படத்தினருமையும், புத்தகங்களி
னருமையுமுணர்ந்தவர்கள் தெரிந்துகொள்ளலாம்.
பின்னும் படங்களை யிடமாற்றி வைத்தால் நாம்
முன்னர் பார்க்காத அழகுகளும் அற்புதங்களும்
புதுஇட மாற்றுவதால் பார்க்கக்கூடும்.

வீட்டில் சேரும் கழனீர், வீட்டிற்கொண்டு
வந்து சேர்த்திருக்கும் சாணம், முதலியவை
கூடியவரை சமயலிடங்கள், சாப்பிடுமிடம்,வீட்டு
ஜனங்கள் ஸாதாரணமா யுட்கார்ந்திருக்குமிட
முதலியவற்றிற் கருகாமையிலில்லாமல் பிரத்
யேகமாக ஏற்பாடு செய்யப்படுதல்வேண்டும்.
இது விஷயம் அவர் அவர் ஸௌகர்யத்திற்கேற்
றாற்போல செய்துமுடிக்கவேண்டும்.

இனி வீட்டைச்சேர்ந்த தோட்டத்தைப்
பற்றிக் கூறிவிட்டு இவ்விஷயத்தைக் குறித்
துச்சொல்லவேண்டிய விபரங்களை ஒரு முடிவுக்
குக்கொண்டுவருவோம்.

பட்டணத்திலுங்கூட சில வீடுகளில் புழக்
கடையில் பயிர்க்குழி வைத்துக்கொள்ளவாவது
சில வெற்றுத்தரையுண்டு. சிலவிடங்களில் துளஸி
மாடம் மட்டுமாவதிருக்கும். மற்றவர்கள்தொட்டி
களில் தமக்கு வேண்டிய செடிகளை நட்டுக்
கொள்ளுகிறார்கள். துளஸிமாடங்களைச் செம்மண்
பூசி, குங்குமப் பொட்டிட்டிருப்பது மிகவும்
களையாகவும், வீட்டிற்கதிக லக்ஷணமாயு மிருக்
கும். மற்ற இருவிதமானவற்றிலும், காய்ந்த
இலைகள், நசுவினிப்பூச்சிகள், புழுக்கள் முதலி
யன சேராதபடி பார்த்துவரல் வேண்டும்.புழுக்கள்
வெகு பருமனாயும், செடிகளை வெகு சீக்கிரத்தில்
வேரினின்றே கடித்துக் கெடுத்து விடுவனவுமா
யிருக்கும்.நான் வைத்திருக்கும் தொட்டி ஒன்றில்
வைக்குஞ் செடிகள் சரியாகவே வாராதிருந்தன.
ஆகவே அத்தொட்டியிலுள்ள மணலைக் காய
விட்டுத் தண்ணீர் ஊற்றிக் கிளறிக் கொடுக்கவே,
தடித்தடியான குண்டலப்புழுக்கள் இருபது இரு
பத்தைந்து கிளறக் கிளற வந்து கொண்டே
யிருந்தன. ஆகவே என் மனதிலுண்டான ஆச்ச
ர்யமிவ்வளவு புழுக்களிதி லிருந்தால் எவ்விதச்
செடிதான் இதில் முளைக்கும் என்பதாம். ஆகவே
செடிகளில்லாதஸமயங்களில் தண்ணீரை ஊற்றி
நன்றாய்க் கிளறிக் கொடுக்கவேண்டியது. தோட்
டங்களிலிடும் பயிர் அவற்றின் பலவகை ப்ரயோ
ஜனங்களை இனி பின்பு வருமொரு வகுப்பி
லெழுதுவோம். இதுவரை வீட்டைச் சேர்ந்த
தோட்டத்தில் குறிப்பு வைக்கவேண்டிய விஷ
யங்களென்னவென்றால், சாம்பல், சாணம், மணல்
முதலியவை கரைத்தாவது, தூளாக்கியாவது
போடவேண்டும். அப்போதப்போது விழும்
பழுப்பிலைகளை யுடனே எடுத்தெறிந்துவிடல்
வேண்டும். இப்படிச் செய்வதால் தோட்டம்
அதிகமாய் ப்ரயோஜன முடையதாயும் பல
விதமா யினிமை யுண்டாக்கக் கூடியதாய்
மிருக்கும்.

# ஆரியர்களின் ஸங்கீதமுறை

## SCIENCE OF ARYAN MUSIC

### மேள ராகங்கள்

இந்தப் பன்னிரண்டு ஸ்வரங்களையும் வைத்துக்கொண்டு கணக்கிட வல்லவர்களான ஸங்கீத வித்துவான்கள் பிரஸ்தரித்து 72 **மேளராகங்கள்** அல்லது மேள கர்த்தாக்கள் என்னும் ஸம்பூர்ண ராகங்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். மேலும் ஆதிகாலம்தொட்டு ஸம்ஸ்கிருத பாஷையே படிப்பவர்களது பொதுப்பாஷையாயிருந்ததனால் இந்த ராகங்களுக்குப் பெயரிடும்போது ஸம்ஸ்கிருத அக்ஷரங்களான க, ட, ப, ய முதலானவைகளை எண்ணிக்கைக்கு ஸங்கேதமாக உபயோகித்துக்கொண்டு ராகங்களுடைய எண்ணிக்கைகூட அவைகள் வகிக்கும் பெயர்களாலேயே நமக்குப் புலப்படும்படியாக ராகங்களுக்குப் பெயரிட்டிருக்கிறார்கள். உதாரணமாக, **மாயாமாளவ கௌளம்** என்னும் ராகத்தின் பெயர் சொன்னவுடனே அதில் முதல் இரண்டக்ஷரங்களையும் கவனித்தால் **ம** என்பது 5 ஐயும் **ய** என்பது 1 ஐயும் குறிக்கிறது. ஆக, 15 என்னும் எண்ணிக்கையைக் குறிக்கும். அதாவது அது பதினைந்தாவது மேளராகமாம். அதே மாதிரி **ராமப்ரியா**, ஐம்பத்திரண்டாவது ராகமாம்.

இப்படி மேளராகங்களின் எண்ணிக்கை தெரிவதால் பிரயோஜனம் என்னவென்றால், இவ்விராகங்களின் எண்ணிக்கையை ஆறால் வகுத்து வரும் மிச்சத்தால், அவ்வவ்விராகத்தின் **தைவத நிஷாதங்கள்** இன்னமாதிரியென்று அறியக்கூடியது. ஈவைக்கவனித்தால் எத்தனையாவது ஆறராகங்களின் ஸமூகத்தில் அந்தராகம் இருக்கிறது என்று தெரியும். அதுமூலமாய் **ரிஷப காந்தாரங்கள்** இன்னவையென்று அறியலாம்.

**ஸ ரி க ம ப த நி** என்னும் ஏழு ஸ்வரங்களையும் **மேல் ஷட்ஜம்** அதாவது **ஸ'** வோடு சேர்த்து எட்டு ஸ்வரங்களாகவே சாஸ்திரத்தில் சில ஸௌகரியங்களுக்காகப் பாடுவது வழக்கமாயிருக்கிறது.—(இதற்குக் காரணம் இன்னதென்பது தாளத்தைப்பற்றிய விஷயங்களை எழுதும்போது விவரித்து எழுதப்படும்.) ஆகவே, **ஸ ரி க ம ப த நி ஸ'** என்பதோடு அந்த ஸ்வரங்களைத் திருப்பி நாம் வாசித்தோமானால் **ஸ' நி த ப ம க ரி ஸ** என்னும் கிரமத்தைத் தருகிறது. முதலில் சொல்லப்பட்டதற்கு **ஆரோஹண** வரிசை என்றும், இரண்டாவதாகச் சொல்லப்பட்டதற்கு **அவரோஹண** வரிசை யென்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வரிசைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மேளம் என்று சொல்லுகிறார்கள்.

ஸ முதல் ஸ' வரைக்கும் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களும், ஆனால் பதினாறு நாமங்களும் அமைந்திருக்கின்றன. (சித்திரம் 1—பார்க்க.) அந்த ஸ்வரங்களில் ஸ முதல் ம வரைக்கும் ஸ, ரி, க, ம என்று நாமமுள்ள **ஸ்வர கணம்** எத்தனை வரும் என்று நாம் கணக்கிட்டுப் பார்த்தால்:—

(1) ஸ ரி, க ம
(2) ஸ க, ரி, ம
(3) ஸ ரி, க ம

என காந்தாரத்தில் மட்டும் பேதமுள்ள மூன்று பேதங்கள் ஏற்படுகின்றன. இதையே பிரஸ்தாரம் (Combination according to laws of permutation in Algebra) என்பார்.

பிறகு அதேமாதிரி,

(1) ஸ ரி க, ம
(2) ஸ ரி க ம

என இரண்டு பேதங்களே உண்டாகின்றன. ஏனெனில், சதுச்சுருதி ரிஷபமும் சுத்தகாந்தாரமும் அதே ஸ்தானமானபடியால், பிரஸ்தாரம் செய்யும்போது இரண்டும் சேர்ந்துவரமாட்டாது. ஆகவே காந்தாரத்தில் இரண்டே பேதங்கள் உண்டாகும். அதாவது, சதுச்சுருதி ரிஷபமுள்ள மேளங்கள் இரண்டுதான் ஏற்படும்.

இதே பிரகாரமாய்,

(1) ஸ ரி₂ க ம

என்று ஒரே பேதமுள்ள மேளமே அடுத்ததாக வரும் என்று அறிந்துகொள்ளலாம். ஷட்சுருதி ரிஷபமே ஸாதாரண காந்தாரஸ்தானமாதலால் அந்த காந்தாரம் பிரஸ்தாரம் செய்யும்போது வர மாட்டாது. அந்த காந்தாரமே வாராதபோது அதற்கு முந்தின ஸ்தானமான சுத்த காந்தாரமும் வர இடமில்லாமல் போகிறது.

ஆகவே, ஸ ரி க ம எனப் பெயருள்ள நாலு பூர்வ ஸ்வரங்களுள்ள கணங்கள்(Lower Tetrachords) ஆறு உண்டாகின்றன என்று கணக்கிட்டே அறிந்துகொள்ளலாம்.

அதே மாதிரியாய் ப த நி ஸ' என்று நாலு உத்தர ஸ்வரங்களுள்ள கணங்கள் (Upper Tetrachords) ஆறு உண்டாகும் என்பதை யாரும் ஊகிக்கலாம். அவை பின்வருமாறு:—

(1) ப த, நி ஸ'
(2) ப த, நி, ஸ'
(3) ப த, நி ஸ'
(4) ப த நி, ஸ'
(5) ப த நி ஸ'
(6) ப $த_2$ நி ஸ'

மேலும், ஸ ரி க ம என்னும் பூர்வ ஸ்வர கணங்களில் உள்ள ஆறு பேதங்களில் முதல் பேதத்தை எடுத்துக்கொண்டு ப த நி ஸ வின் ஆறு பேதங்களோடு ஒவ்வொன்ருக நாம் சேர்த்து அப்படிச் சேர்ந்த ஸ்வரங்களைத் திருப்பி வாசித்தோமானல் ஆறு ராகங்கள் உண்டாகின்றன, இந்த ஆறு ராகங்களுக்கும், கநகாங்கி, ரத்நாங்கி. காநமூர்த்தி, வநஸ்பதி, மாநவதி, தாநரூபி என்று பெயரிட்டிருக்கிருர்கள். இந்த ஆறு ராகங்களிலும், தைவத நிஷாதங்கள் தவிர வேறு ஸ்வரங்களில் பேதமே கிடையாது. அந்தப் பேதமும் பிரஸ்தாரத்தால் ஏற்பட்ட பேதமாகையால் இந்த ராகங்களுக்கு ஒரு சக்ரம் என்று பெயரிட்டிருக்கிருர்கள்.

மேலே சொன்னமாதிரி அவ்விராகங்களுக்குப் பெயர்கள் வைக்கக் காரணம் உண்டு. ஸம்ஸ்கிருத பாஷையின் எழுத்துக்களைப் பார்த்தால் க வர்க்கம், ச வர்க்கம், ட வர்க்கம், த வர்க்கம், ப வர்க்கம் என்று அவ்வைந்து அக்ஷரங்களுள்ள ஐந்து வர்க்கங்கள் இருக்கின்றன வல்லவா? அதில் க வர்க்கத்தில் ஐந்து அக்ஷரங்களும் ச வர்க்கத்திலுள்ள முதல் நாலு அக்ஷரங்களும் சேர்ந்து ஒன்பது அக்ஷரங்களாகின்றன. அந்த ஒன்பது அக்ஷரங்களும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்னும் எண்களுக்கு முறையே ஸங்கேதமாக ஏற்படும். அதேமாதிரி ட வர்க்கம் ஐந்தையும் த வர்க்கம் நாலோடு சேர்த்து மேலே சொன்ன எண்களுக்கு இன்னெரு ஸங்கேதமும் அமைத்திருக்கிருர்கள். ப வர்க்கத்திலுள்ள ஐந்து எழுத்துக்களும் 1, 2, 3, 4, 5 எண்களுக்கு ஸங்கேதமாகின்றன. பிறகு ய, ர, ல, வ, ச, ஷ, ஸ, ஹ என்னும் எட்டு அக்ஷரங்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்னும் எண்களுக்கு ஸங்கேதமாகும்.

கநகாங்கி என்னும் ராகத்தின் பெயரில் முதல் இரண்டு அக்ஷரங்களையும் எடுத்தால், முதல் அக்ஷரமாகிய க என்பது ஒன்றுகளின் ஸ்தானத்தில் உள்ள எண்ணைக் குறிக்கும். இரண்டாம் அக்ஷரமாகிய ந என்பது பத்துக்களின் ஸ்தானத்தில் உள்ள எண்களைக் குறிக்கும். க என்பது க வர்க்கத்தில் முதல் அக்ஷரமாகையால் 1 என்பதைக் குறிக்கும். ந என்பது பூஜ்யத்தைக் குறிக்கும். ஆகவே, கநகாங்கி என்னும் பெயருக்கு முதலாவது ராகம் என்று அர்த்தமாகும்.

அதேமாதிரியாக ஸ ரி, க, ம என்பதோடு ப த நி ஸ வின் ஆறு பேதங்களுடன் கிரமமாகச் சேர்த்தால் இன்னெரு ஆறு ராகங்களுள்ள அடுத்த சக்ரம் உண்டாகும்.

இவ்விதமாக மொத்தத்தில் முப்பத்தாறு பேத முண்டாகின்றன. இந்த முப்பத்தாறு ராகங்களும் சுத்தமத்தியமமுள்ள ராகங்களாகும்.

இந்த முப்பத்தாறு ராகங்களிலும் சுத்தமத்தியமத்துக்குப் பதிலாகப் பிரதி மத்தியமத்தை வைத்து விட்டோமேயானல் இன்னெரு முப்பத்தாறு ராகங்களுண்டாகும்.

ஆகவே எழுபத்திரண்டு ராகங்களுண்டாகின்றன. இந்த எழுபத்திரண்டு ராகங்களுக்கும் **மேளராகங்கள்** என்றும், **மேளகர்த்தாக்கள்** என்றும், **ராகாங்கராகங்கள்** என்றும், **ஸம்பூர்ணராகங்கள்** என்றும், **ஜநகராகங்கள்** என்றும் பலவிதமான பெயர்கள் வழக்கத்தில் இருக்கின்றன.

இவ்விதமாக மேலே சொல்லப்பட்டிருக்கும் ராகங்களின் பிரஸ்தாரக் கிரமத்தை நாம் தெரிந்துகொள்வதின் பிரயோஜனம் என்னவென்று நாம் பார்ப்போம். முன்காலத்தில் புஸ்தகங்களை அச்சுப்போட்டுப் பிரசுரம் செய்யும் ஸாதநம் ஏற்படாமலிருந்ததனால், கற்கும் மாணாக்கர்கள் எதைக் கற்றுக்கொண்டாலும் அதைத் தம் ஞாபகத்தில் தரித்துக்கொள்ளவேண்டியதாகவேஇருந்தது. அவர்கள் ஞாபகசக்தியைக்கொண்டு வெகு விஷயங்களை மனதில் வைத்திருந்தார்கள் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆசாரியர்கள் தம் மாணாக்கர்களுக்கு நிகண்டு, சூத்திரங்கள் முதலிய குறுக்குவழிகளை ஏற்படுத்திக்கொடுத்து ஒத்தாசை செய்தார்கள் என்பது யாரும் கவனித்தால் அறியக்கூடிய விஷயமே. அந்தக் காலத்துக்கொத்தபடி, இந்த ராக பிரஸ்தாரமும் அவ்விதமான குறுக்கு வழிகளில் ஒன்றாகும்.

பிரஸ்தரித்து ஏற்பட்டிருக்கும் ராகங்களை எடுத்துக்கொண்டால், முதலில் அந்த ராகங்களின் பெயரில் உள்ள முதல் இரண்டு அக்ஷரங்களைக்கொண்டு அவை அவை இத்தனையாவது ராகம் என்று கண்டுகொள்ளலாம். பிறகு, அந்த எண்ணிக்கையை ஆறால் வகுத்தால் வரும் மிச்சம், தைவத நிஷாதப்பிரஸ்தாரத்தில் எத்தனையாவது பிரஸ்தாரம் அந்த ராகத்துக்கு உரியது என்று குறிக்கிறதாகும். இந்த வகுத்தலாலேயே இந்த ராகம் எத்தனையாவது **சக்ரம்** என்பதையும் அறியலாம். எப்பொழுது இன்ன **சக்ரம்** என்று தெரிகிறதோ அப்போது ரிஷப காந்தாரப் பிரஸ்தாரத்தில் இத்தனையாவது பிரஸ்தாரம் இவ்விராகத்துடையது என்பது தெரிந்து விடுகிறது.

மேலும், அந்தராகத்தின் எண்ணிக்கை முதல் முப்பத்தாறு ராகங்களில் ஒன்றானால் அது சுத்த மத்தியமமுடையது என்றும், அடுத்த முப்பத்தாறு ராகங்களில் ஒன்றானால், பிரதிமத்தியமமுள்ளது என்றும் அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, **பாவநி** என்னும் ராகத்தை எடுத்துக்கொள்வோம். அதின் பெயரில் உள்ள முதல் இரண்டு அக்ஷரங்களில் இருந்தே இந்த ராகம் 41-வது மேளராகம் என்று அறிந்து கொள்ளலாம். அந்த எண்ணை ஆறால் வகுத்தால் வரும் மிச்சம் ஐந்தாகிறது. ஆகவே அவ்விராகத்துக்கு தைவத நிஷாதத்தின் ஐந்தாவது பிரஸ்தாரமாகிய சதுச்சுருதி தைவதமும் காகலி நிஷாதமும் ஆகும். இவ்விராகம் பிரதிமத்தியம மேளங்களில் முதல் சக்ரமாகிறது. அப்போது இவ்விராகத்துக்கு ரிஷப காந்தாரங்களின் முதல் பிரஸ்தாரமாகிறது. அதாவது சுத்தரிஷபமும் சுத்தகாந்தாரமும் ஆகும்.

இந்த ராகம் இரண்டாவது முப்பத்தாறு ராகங்களில் ஒன்றானதால், இது பிரதி மத்தியம ராகம் என்றும் அறியலாம்.

ஆகவே, இவ்விராகத்துக்குள்ள ஸ்வரங்கள் ஸ ரி, க₀ ம₂ ப த நி ஸ' என்பதாம்.

இந்த ராகத்துக்கு ஸ்வரங்கள் இன்னவையென்றும் தெரிந்தவுடனே வேறு சில ராகங்களை இதில் ஜந்யமென்று சொன்னால் அந்த ராகங்களுக்கும் இந்த ஸ்வரங்களே வருகின்றனவென்று அறிந்துகொள்ளலாம்.

மேலே சொன்னதைக்கொண்டு, இந்தப் பிரஸ்தாரம் செய்தவர்களின் அபிப்பிராயம் :—

(1) இந்த ராகங்கள் இவ்வளவு பேதமுள்ளவைகளாக இருக்கின்றனவென்பதும் ; தவிர,

(2) இந்த ராகங்களின் பெயர்களைக் கொண்டு அவை அவை இத்தனையாவது ராகம் ஆகிறது என்பதை அறிவிக்கவுமாம். தவிரவும்,

(3) அந்தந்த ராகங்களுக்கு உள்ள ஸ்வரம் இன்னின்னவையென்றும் ஊகித்தறிந்துகொள்ளும் விதமாக ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இந்த மாதிரி உண்டான ராகங்கள் எழுபத்திரண்டுக்கும் மேளராகம் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். மேளம் என்றால் கூட்டம் என்று பொருள்.

இப்படிக் கணக்கால் ஏற்பட்ட ராகங்கள் எழுபத்திரண்டும் இருந்தாலும் இந்த ராகங்கள் முழுவதையும் பாடுவது வழக்கத்தில் இல்லாமலிருந்தது என்பது யாருக்கும் தெரிந்த விஷயம். **லக்ஷணகீதம்** என்னும் ஸங்கித கிரந்தத்தில் இந்த எழுபத்திரண்டு ராகங்களிலும் ஒவ்வொரு **கீதம்** ஸாஹித்யம் செய்யப்பட்டுள்ளது. (கீதம் என்பது ஓர்வகை ஸாஹித்யம். அதின் லக்ஷணம் ஸாஹித்ய விஷயங்களைப்பற்றி எழுதும்போது விவரித்து எழுதப்படும்.) அந்தக் கீதத்தைக்கூடப் பாடுவோர் இல்லாமலேயே இருந்தது. எப்பொழுது அந்தக் கீதங்களையே பாடுவோரில்லையோ அந்த ராகங்களின் ஸ்வரூபம் இன்னதென்று தெரியாமல் இருந்தது. ஸ்ரீமான் தியாக ஐயர் அவர்கள் அவதரித்து வழக்கத்திலுள்ள ராகங்களில் ஸாஹித்யம் செய்து அலுத்து, அதில் திருப்தி யடையாமல் வேறு கர்த்தா ராகங்களிலும், ஜந்நிய ராகங்களில் இதுவரையில் வழக்கத்தில் இல்லாத அபூர்வ ராகம் என்று சொல்லப்படும் ராகங்களிலும் ஸாஹித்தியம் செய்ய எண்ணி, அந்த அஸாத்தியமான செய்கையை ஸாதித்து ஸங்கீதத்துக்கு ஒரு புதிய யுகம் வந்து விட்டாற்போல் ஆக்கிவிட்டார் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். கி. பி: 1904 ஹூ த்தில் காலஞ்சென்ற ம-ா-ா.ஸ்ரீ **சின்னசாமி முதலியார்** அவர்கள் வெகு சிரமப்பட்டுத் தியாகய்யர் அவர்களின் ஸாஹித்தியங்களை அவரது சிஷ்யர்களிடமிருந்து சேகரம் செய்து, அந்தக்கீர்த்தநங்களின் முதல் பதங்களை எடுத்து, அவைகளின் ராகம், தாளம் இவைகளோடு அகராதியாய் அச்சிட்டுப் பிரசுரம் செய்திருக்கும் புஸ்தகத்திலிருந்து சுமார் 25 மேள ராகங்களிலும், 250 அபூர்வ ஜந்நிய ராகங்களிலும் தான் தியாகய்யர் அவர்கள்கூட ஸாஹித்தியம் செய்திருப்பதாகத் தெரிகிறது.

அந்த மஹானுக்குப் பிற்காலம் நமது தலைமுறையார் அறிந்திட்டு 1891 ஹூ த்தில் காலஞ்சென்றவும் கந்தருவகாநம் செய்துகொண்டிருந்தவும் சிவபக்த சிரோமணியான ஸ்ரீ மஹாவைத்தியநாத **சிவம்** என்று மறுநாமமுள்ள **மஹாவைத்தியநாதய்யர்** அவர்கள் இந்த எழுபத்திரண்டு ராகங்களின் ஸ்வரூபமும் விளங்கும்படிக்கும் லக்ஷணலக்ஷியங்கள் கூடிய மேளராக மாலிகை ஒன்று ஸாஹித்தியம் செய்திருக்கிறார். அந்த ராகமாலிகை மாப்பிள்ளை துரை என்று தஞ்சாவூரில் யாருக்கும் தெரிந்த **ஹிஸ் ஹைநஸ் ஸகாராம் ஸாஹேப்** அவர்களின் அரண்மனையில் அநேக வித்துவான்கள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதென்பது தஞ்சாவூரார்க்குத் தெரிந்த விஷயம்.

[ஆனால் இந்தக் காலத்தில் மேலே சொன்ன தியாகய்யர் அவர்களின் ஒப்பற்ற கீர்த்தநங்களிருக்க, மஹாவைத்யநாதஐயர் அவர்களது அற்புதராகமாலிகை யிருக்க, கர்நாடக வித்வான்கள், நாம் கர்நாடக ஸங்கீதம்தான் பாடுகிறோம் என்று பெயர் வைத்துக்கொண்டு, அவர்களது வயிற்றுக் கொடுமையாலோ, சபையில் உள்ளவர்களது ஸங்கித ஞாநத்தைப் பரிகாசம் பண்ணுவதற்காக என்றோ, இவர்கள் ஜாவளிகளையும், ஏகடாக்களையும், மற்றும் சில விந்தையான பாட்டுக்களையும் பாட ஆரம்பித்து விட்டார்கள். இந்த விஷயத்தை நாம் கவனித்து நிறுத்த யத்தனிக்க வேண்டியது நமது முதற்கடமை யென்று நினைக்கவேண்டும்.]

இதுநிற்க, மேலே சொன்ன மாதிரி ராகங்கள் இன்னின்ன மேளங்களில் ஜந்நியம் என்று சொல்வதினால் அந்த ராகங்களுக்கும் அவைகளின் ஜநகராகமாகிய மேளங்களுக்கு எந்தெந்த விதமான ஸ்வரம் உள்ளனவோ அந்தந்த மாதிரி ஸ்வரம் இவைகளுக்கும் உள்ளவை என்று அறிய உபயோகமாகிறது என்று சொன்னோம். என்றாலும், இந்தப் பிரயோஜநமும் எப்போதும் உண்டென்று நினைக்க இடமில்லாமல் இருக்கிறது. இப்போது வழக்கத்தில் இருக்கும் ஆநந்தபைரவி

என்னும் ராகம் சில புஸ்தகங்களில் நடபைரவி மேளத்தில் சேர்ந்ததென்றும் சில புஸ்தகங்களில் கரஹரப்பிரியை மேளத்தில் ஜந்நிய மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல், அந்த ராகம் பாடுவதைப் பார்த்தால் இரண்டுவிதமான காந்தாரத்தை உபயோகப் படுத்துகிறார்கள். மகரி—காமா என்று பாடும்போது ஸாதாரண காந்தாரத்தையும், மக ரிக மா என்று பாடும்போது அந்தர காந்தாரத்தையும் பாடுகிறார்கள். ஆகவே, வேறு மேளத்தில் ஜந்நியமென்று நினைக்க இடமாகிறது. அதுமாத்திரமல்ல. இதைப் பாடும்போது இரண்டுவிதமான தைவதமும் உபயோகிக்கிறார்கள். கம பத பமகரி என்று பாடும்போது சுத்த தைவதமும், நித-பா என்று பாடும்போது சதுச்சுருதிதைவதமும் உபயோகப்படுவதை நாம் பார்க்கலாம். மறுபடியும், இரண்டு நிஷாதங்கள் அதே ராகத்தில் உபயோகமாகின்றன. நித—பா என்று பாடும்போது கைசிக நிஷாதமும் ஸநிதநிஸா என்று பாடும்போது காகலி நிஷாதமும் உபயோகத்திலிருக்கிறது. ஆகவே, இந்த ராகத்தை எட்டு மேளத்தில் ஜந்நியமென்று நினைக்க இடம் ஏற்படுகிறது.

இவ்விதமாக, இன்னும் அநேக ராகங்களில் இரண்டு விதமான ஸ்வரங்கள் ஏற்பட்டிருக்கிறது. அந்த ராகங்களை இன்ன மேளத்தில்தான் ஜந்நியம் என்று சொல்வதற்கு நியாயம் இல்லை என்பதைக் கொஞ்சம் கவனிப்போர் அறிந்து கொள்ளலாம்.

ஆகவே மேளகர்த்தாவை ஏற்படுத்தினவரின் முக்கியகருத்து நிஷ்பிரயோஜனமாய்விட்டது.

இந்தப்பிரகாரம் பிரஸ்தரித்துக் கணக்கிட்டு உண்டாகும் ஸம்பூர்ண ராகங்களில் சிலவற்றை மட்டும் ஸங்கீதத்தின் நிஜஸ்வரூபத்தைக் கண்டு கொண்ட ஸ்ரீதியாகராஜ ஐயர் அவர்கள் சுகம் தரும்படியானவை என்று நினைத்து மேலே சொன்னமாதிரி வேறு ஸ்வரங்கள் கலப்பில்லாது அநேக ஸாஹித்யம் பார்த்திருக்கிறார்கள். அவருக்குப் பிற்காலம் உதித்த ஸ்ரீ மஹாவைத்திய நாதஐயர் அவர்களும் இந்த 72 ராகங்களிலும் எல்லா லக்ஷணமும் பொருந்திய ஒரு ராக மாலிகை இயற்றியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறோம். இந்தமாதிரி 72 மேளம் உண்டென்கிற ஏற்பாடும், வேறு ஸ்வரங்கள் கலந்து பாடக்கூடாதென்கிற ஏற்பாடும் கர்நாடக ஸங்கீதத்தில் மட்டுமே வழக்கத்தில் உள்ளது.

தேசீயம், என்றும் ஹிந்துஸ்தானி ஸங்கீதம் என்றும் வடக்கே பாடும் பாட்டுக்களில் ஒரே ராகம் அல்லது ராகிணியில் பலவிதமான ஸ்வரங்கள் வருவதுண்டு.—அவர்கள் இவைகளில் ஆறு மேளத்தையே வைத்துக்கொண்டு, அதிலிருந்து மற்ற ராகங்கள் உண்டாகின்றனவென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஐரோப்பியாது ஸம்பிரதாயத்தில், முக்கியமாய் சங்கராபரணம், தோடி, நடபைரவி, ஹரிகாம்போதி ஆகிய நாலு மேளங்கள் மட்டும் உபயோகத்தில் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் கானத்தைக் கவனித்தால், ஒரே ஸாஹித்யத்தில் அநேக விதமான ஸ்வரங்களை உபயோகித்துக்கொண்டிருப்பதால் அவை இன்ன ராகந்தான் என்று சொல்ல இடமில்லாமலிருக்கிறது. இது காரணத்தாலேயே, அவர்கள் நம் ஸம்பிரதாயத்தில் உள்ள ராகம் என்னும் விஷயத்தை அறிந்து சந்தோஷிக்க முடியாதவர்களா யிருக்கிறார்கள்.

தஞ்சாவூர் சமஸ்தானத்தில் மஹாராஷ்டிர ராஜாங்கம் ஏற்படுவதற்கு முன் அரசாண்டு வந்த நாயக்க ராஜவமிசத்தில் அச்சுத நாயக்கர் நாளில் வேங்கடமகி என்னும் ஸங்கீத சாஸ்திரக்காரர் சதுர்தண்டிப் பிரகாசிகை என்னும் கிரந்தம் செய்திருக்கிறார். மேலும் அவர் லக்ஷண கீதம் என்று மற்றொரு கிரந்தமும் செய்திருக்கிறார்கள். அவரது ஸம்பிரதாயத்தில் நமக்குப் பழக்கத்திலில்லாத ஒரு மாதிரியாய் மேளகர்த்தா ராகங்களுக்கு வேறு விதமான பெயரிட்டிருக்கிறார். அது மட்டும் இல்லை அவரது ரீதியாய் ஜந்நிய ராகங்களுக்கு வெகு

வாய் நமக்குத் தெரிந்தமாதிரிப் பெயர்கள் இல்லாமலிருக்கின்றன. ஆனால் அவர் படித்தவரானதால், எல்லா ராகங்களுக்கும் சுலோக ரூபமாய் லக்ஷணங்கள் அமைத்திருக்கிறார்.

மேலும், இந்த வேங்கடமகி என்கிற ஸங்கீத வித்வானுக்கும் இப்போது வழக்கத்திலிருக்கும் வீணைவாத்தியத்துக்கும் சம்பந்தம் உண்டு. இந்த வீணையில் கிரஹ வாரியாய் கவனித்தால் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் இருக்கின்றன வென்று சொன்னோம். மேலும் இப்படிப் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களைப் பிரஸ்தரித்து எழுபத்திரண்டு மேளங்கள் உண்டாவதால் இதற்கு **மேளவீணை** என்று காரணப்பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்தாயியில் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் என்றும், அந்த அபிப்ராயத்துக்கு ஏற்க யுக்தியால் பிரஸ்தரித்து மேள கர்த்தாக்களை முதல் முதல் ஏற்படுத்தினவர் இந்த **வேங்கடமகி** என்னும் மஹாவித்துவானே.

மேலும் இப்போது **ஸிதாரா** என்னும் ஸ்வர வாத்தியம் **ஹிந்துஸ்தானி** ஸங்கீதம் பாடுவோர் வைத்துக்கொண்டு வாசிப்பதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அதன் தண்டியில் மேலும் கீழும் நகரும்படியாய் அதன் மெட்டுக்கள் அமைந்திருக்கின்றன. அதில் ஸ்வர மேளங்களை மாற்றிக் கொள்ளவேண்டுமானால், மெட்டுக்களை நகர்த்தி கொஞ்ச நேரம் **காம்போதி** மேளமாயும், கொஞ்ச நேரம் **சங்கரபரண** மேளமாயும் நமது இஷ்டம் போல் மாற்றிக் கொள்ளலாம். இந்த வாத்தியத்தில் மட்டுமல்ல. **ஸ்வரபத்து** என்னும் வாத்தியத்திலும் இந்த மாதிரியே மெட்டுக்களை நகர்த்தி ஸ்வர மேளங்கள் மாற்றிக்கொள்வதை நாம் பார்க்கலாம்.

எப்படி ஸிதாரா, ஸ்வரபத்து முதலிய வாத்தியங்களில் மெட்டுக்களை மாற்றி மேளம் மாற்றி வருகிறார்களோ அது போலவே வீணை வாத்தியத்திலும் மெட்டுக்களை நகர்த்தியே மேளங்கள் செய்துகொண் டிருந்தார்கள். பிடில் வாத்தியத்தைக் குழந்தைகளுக்கும் சரி, காதால் மட்டும் கேட்டு ஸ்வர விவரஞானம் இல்லாத ஸங்கீத மாணாக்கர்களுக்கும் சரி, ஸங்கீத போதகாசிரியர்கள் வாசிக்கக் கற்பிக்கும்போது, ஸ்வர ஸ்தானத்தைக் குறிக்கக் காகிதத்துண்டுகளைத் தண்டியில் ஒட்டி வைத்தும் அல்லது தந்த ஆணிகளைப் பதிய வைத்தும், ஸ்வர ஸ்தானங்களில் சரியாய்க் கைவைக்க ஒரு யுக்தி ஸாதனம் ஏற்படுத்துகிறார்களல்லவா? அது போலவே, வேங்கடமகியானவர் தஞ்சாவூர் அரசனான **அச்சுத நாயகர்** அவர்களுக்கு முதல் முதல் 12 ஸ்வர ஸ்தானங்களையும் பித்தளை மெட்டுக்களால் நிலைத்து மெட்டுக்களை நகர்த்துகிற தொந்தரவைத் தவிர்த்து, இப்போது எங்கும் உபயோகிக்கும் வீணை வாத்தியத்தை உண்டுபண்ணினார். மேலும் அவர் பிரபலமான ஸம்ஸ்கிருத வித்துவான் **கோவிந்த தீக்ஷிதருக்குப்** புத்திரரும், தானும் பெரிய ஸம்ஸ்கிருத வித்துவானாதலால் இப்படி வீணை உண்டாக்கும் விதத்தை "சதுர்த்தண்டிப் பிரகாசிகை" என்னும் கிரந்தத்தில் எழுதி வைத்திருக்கிறார். 72-மேளங்கள் தயார் செய்யும் விதத்தைக் கண்ணால் காணக்கூடியதாயிருப்பதாலும், **சேவப்பநாயக்கர்** வமிசத்தில் பிறந்த அச்சுத நாயக்கருடைய ஸௌகரியமாகப் பிறந்ததாலும் இந்த வீணைக்கு "**சேவயாச்யுத பூபால மேளவீணை**" என்றும், குறிப்பாய் **மேளவீணை** என்றும் பெயரிடப் பட்டது.

ஆனால், வேங்கடமகியின் **லக்ஷணகீதம்** என்னும் கிரந்தத்தில் மேள கர்த்தாக்களுக்கு வேறு பெயர்கள் இட்டிருப்பதாக நாம் சொன்னோமல்லவா? அதைத்தவிர வேறு சில விஷயங்கள் விநோதமா யிருக்கின்றன. மேளகர்த்தா என்றால் யாரும் ஸம்பூரண ராகம் என்று நினைப்பது வழக்கம். ஆனால், அவருடைய மேளங்களில் சில வர்ஜ்ஜியராகங்களாய் இருக்கின்றன. அதாவது சில ஸ்வரங்கள் ஆரோஹணத்திலோ அவரோஹணத்திலோ இல்லாத ராகங்களாய் இருக்கின்றன. மேலும் அநேக ராகங்கள் சுலோகத்தில் ஒருவிதமாய் ஆரோஹண அவரோஹணமும், பாடும்போது ஸஞ்சாரத்தைப் பார்த்தால் அது வேறு மாதிரியாயும் இருக்கிறது மேலும், **தேவகாந்தாரி** என்று இரண்டு ராகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது என்ன காரணத்தாலோ? இந்த விஷயத்தை எல்லாம் கவனித்தால் இந்தப் புஸ்தகம் எவ்வளவு ஸங்கீதம் அப்பியஸிக்கும் மாணாக்கருக்கு உபயோக மாகுமென்று அறியக் கூடவில்லை.

P. S. சுந்தரம் ஐயர், பி.எ., எல். டி.

## ப்ராணிகளின் முக்ய குணாதிசயங்களும், அவைகளைப்பிரிக்கும் வகையும்

## GENERAL CHARACTER OF ANIMALS AND THEIR CLASSIFICATION *

உலகத்தில் காணப்படும் வஸ்துக்களை ஆராய்ச்சி செய்யுங்கால் உயிர் உள்ளனவென்றும் உயிர் அல்லனவென்றும் இரண்டுவகையாகப் பிரிக்கலாம். இவ்வகைகளுக்கு உதாரணங்கள் சொல்லிக் காட்டவேண்டியது அவசியமாகத் தோன்றவில்லை. ஸாமான்ய ஜனங்களும் சிறு குழந்தைகளும்கூட எளிதில் வஸ்துக்களை இவ்வாறு பிரிப்பதை நாம் கண்டிருக்கிறோம். நம் பெரியோர்களும் வஸ்துக்களைச் சேதன வஸ்துவென்றும் அசேதன வஸ்துவென்றும் வஸ்து விசாரணை செய்து பிரித்திருக்கிறார்கள். கல், மண் முதலியன அசேதனமென்றும், உயிருடன் கூடி வாழும் செடி கொடிகளோ, ப்ராணிகளோ, சேதன வஸ்துக்களென்றும் விவகரித்து இருக்கிறார்கள். இதில் நாம் இன்றையதினம் அறியவேண்டிய விஷயம் யாதெனில், ப்ராணிகளை எதோடு சேர்க்கலாம், அவைகளுடைய முக்ய குணாதிசயங்கள் என்னென்ன, அவைகளை எவ்வாறு பிரிக்கலாம் என்ற விஷயங்கள்தாம்.

2. முதலில் ப்ராணிகளும் உயிருள்ளவையென்று நாம் சுலபமாய் அறிகிறோம். ப்ராணிகள் என்ற வார்த்தைக்கே ப்ராணன் அல்லது உயிர் உடையவையெனப் பொருள் படுதலால் அவைகளின் பொது லக்ஷணங்களை விசாரிக்கும் பொழுதே சேதன வஸ்துக்களின் முக்யமான குணங்கள் இன்னதென்று நாம் அறிய இடமுண்டாகிறது.

3. ப்ராணிகள் ஜீவவஸ்துவினால் அமைக்கப்பட்டுள்ளன. எப்பொழுதும் பசிதாகத்தோடு கூடி ப்ராணவாயுவை உட்கொள்ளும் திறமையும் அவசயமும் ஏற்பட்டுத் தங்கள் ஸகல தொழில்களையும் செவ்வையாய் நடத்த வலிமையும் திறமையும் பெறுகின்றன. ஜீவவஸ்து என்று விவரிக்கப்பட்டது யாதுஎன்று நான் இந்த இடத்தில் கொஞ்சம் விவரிக்கவேண்டியிருக்கிறது. ஜீவவஸ்துவென்பது ஸாதாரணமாக ப்ரபஞ்சத்தில் காணக்கூடிய வஸ்துக்களின் சேர்க்கையினாலே ஏற்பட்டதே யொழிய விசேஷமாக வேறு வஸ்து ஏதேனும் சம்மந்தப்பட்டதாகத் தெரியவில்லை. ப்ராணவாயு, கரியமிலவாயு, உப்புவாயு, கந்தகம், இரும்பு முதலிய சிற்சில பதார்த்தங்கள் அவைகளுக்கேற்பட்ட ஸரியான அளவில் சேர்ந்து, ஜீவபதார்த்தம் ஆகிறது. கடையில் விற்கும் ஒரு இறைச்சித் துண்டைச் சுட்டாலும், ஒரு மரக்கட்டையைச் சுட்டாலும் கரியாகிறது என்பது யாவரும் அறிந்திருப்பீர்கள். இவை போன்ற பரிசோதனையினால் ப்ராணி வர்க்கத்திலோ, செடி வர்க்கத்திலோ, எந்த ஜீவனை யெடுத்துப் பரிசோதித்தாலும் மேற்சொன்ன ஜீவபதார்த்தத்தின் குண விசேஷங்களை விவரமாக அறியலாம்.

4. ப்ராணிகளெல்லாம் உயிருள்ளனவாயிருந்த போதிலும் ஜீவனுள்ள எந்தவஸ்துவும் பிராணியாக மாட்டாது. பூச்சி புழுமுதல் பக்ஷி ம்ருகம் மனிதன்வரை ப்ராணி வகுப்பில் ஸாமான்யர்கூட அடக்கி விவகரிப்பார்கள். ஆனது பற்றியே ப்ராணிகளென்பது செடிகளையும் குறிக்காமல் மேற்சொன்ன ஜீவராசிகளை மாத்திரமே குறிக்கும். இப்பொழுது ப்ராணி வர்க்கத்துக்கும் செடி வர்க்கத்துக்கும் உள்ள பேதாபேதங்களை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். இருவகைத்தான ஜீவராசிகளும் ஒரே ஜீவவஸ்துவினாலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஜீவராசிகளின் பொது லக்ஷணத்திற்கிணங்க அவைகள் ஸதா ப்ராணவாயுவை உட்கொண்டு கழிவு பதார்த்தங்களைத் தேகத்தினின்றும் நீக்கி ஆகாராதிகளை யுட்கொண்டு பருத்துப் பெருகி வாழும் இயல்புடையனவாம். ஆனால் இவ்விரண்டுவர்க்கத்திற்கும்வித்யாஸங்கள், அவைகள் அடையும் ஆகாரத்தினின்றே உண்டாகின்றன. தாவரவர்க்கம் இயற்கைப் பொருளினின்றே தங்களுக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சேர்த்து

* இது பாளையம்பட்டி கல்விப்பொருட் காக்ஷியில் உபன்யஸிக்கப்பட்டது.

உணவாக்கிக்கொண்டு ஜீவிக்கும் சக்தியுடையன. ஆனால் ப்ராணிகளோ ஜீவபதார்த்தத்தை மற்ற ப்ராணியிடத்தினின்றோ செடிகொடிகளையுட்கொண்டோ அடையவேண்டிய நிலைமையில் இருக்கின்றன. ஆகாரவிஷயத்தில் மாத்திரமல்ல, இடம் பெயர்ந்து செல்லுதல் என்ற குணத்தை ப்ராணிகள் மாத்திரம் வகிக்கின்றன. அதுகாரணம் பற்றியே செடிவர்க்கத்தை ஸ்தாவரவர்க்கமென்றே பெயரிட்டிருக்கின்றனர். ஆனால் ப்ராணிகளில் சில செடிவர்க்கத்தைப்போல ஓரிடத்தில் வேரூன்றி வளர்வதையும், செடிவர்க்கத்தில் சில அற்ப ஜீவராசிகள் நீரில் நீந்திச் செல்லுதலையும் பார்க்குங்கால் இடம் பெயர்ந்து செல்லுதல் என்ற ஒரு குணத்தையே முக்யமான வித்யாஸமென்று கொள்ளுதல் கூடாது. மேற்கூறிய ஆகார விவகாராதிகளே முக்யமான வித்யாஸமாய்க் கொள்ளல் வேண்டும்.

5. ப்ராணிகளின் பொதுலக்ஷணங்களை ஒருவாறு அறிந்தோம். அவைகளில் வித்யாஸப்பட்டுப் பல விகாரங்களோடு காணப்படுவதற்குக் காரணங்களை நாம் ஆராய்ச்சி செய்வோம். ப்ராணிகளிலும், கண்ணுக்கெட்டாத அற்ப ஜீவராசிகள் நீரில் வாழக்காணலாம். அவைகளை உயர்ந்த பூதக்கண்ணாடியின் உதவியின்றிக்காணுதல் ஸாத்யமல்ல. மேல்நாட்டு உயிர்நூல் நிபுணராகிய **ஹக்ஸ்லி** என்பவர் கூறியபடி இந்த ஜீவராசியின் திரளான கூட்டம் நாம் கூடியிருக்கும் கண்காக்ஷி ஸபைக்கு ஒப்ப, ஒரு குண்டூசி முனையிலே ஸபை கூட்டி நடத்தக்கூடிய அவ்வளவு நுண்ணிய தேக விசாலத்தோடு உள்ளவையாம். இதற்கும் மகத்தான யானைக்கும் ஜீவப்ராணிகளுக்கு ஏற்பட்ட செய்கைகளில் ஒருவிதமான வித்தியாஸமும் கிடையாது. ஆனால் தேக அமைப்பிலோ, அநேக மாறுபாடுகள் நிறைந்துள்ளன. 'ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறுபதம்' என்று சொல்வதுபோல அற்பஜீவராசிகளுக்கு உதாரணமாக மேல்நாட்டார் 'அமீபா' என்று பெயரிட்டழைக்கும்ஒருஅற்பப்பிராணியின் 'செய்கையை' கவனித்தால் போதுமானது. அமீபா ஆறு குளங்களில் நல்ல ஜலத்தில் வஸிக்கக் காணலாம். அது தன் தேகத்தையே சுருக்கவும் நீட்டவும் அதனாலேயே ஜலத்தில் இடம் பெயர்ந்துச் சென்று தனக்கு ஆகாரமாகக்கூடிய அதினும் அற்ப ஜீவப்ராணிகளைத் தனது தேகத்தில் ஒட்டிக்கொண்டு விழுங்கி ஜீரணித்துக்கொள்ளக்கூடிய சக்தி பெற்றிருக்கிறது. ஆகார விவகாராதிகளின் விசேஷத்தால் தேகம் பெருத்து மக்கட்பேறுண்டாக்கவேண்டிய பர்வத்தை யடைகிறது. ஆனால் அமீபாவினத்தில் ஆண், பெண் என வித்தியாஸ விகாரங்கள் காணப்படவில்லை. இருந்தபோதிலும், ஒரு அமீபா இரண்டாகப் பிரிந்து தன் இனத்தைப் பெருக்குகின்றது. இதுபோலவே பிராணிகள் ஒவ்வொன்றும் சிற்சில அற்ப வித்யாஸங்கள் காணப்பட்டாலும் முக்யமான தொழில்களில் அதிக வேறுபாடின்றி ஜீவிக்கின்றன என்பதை நாம் அறிவோம். ஆனால் தேக அமைப்பில் மாத்திரம் வித்யாஸங்கள் உண்டு. அமீபா போன்ற அற்பப்ராணிகள் ஒரு செதிலாகப் பிறந்து ஒரே செதிலாக வளர்ந்து வாழ்நாள்களைக் கழிக்கின்றன. மற்றைய ஜீவராசிகளோ, செதில்களின் கூட்டத்தில் ஏற்படும் அங்க அவயவங்களுடன் காணப்படுகின்றன. தோலாயிருந்தாலும் ஸரி, சதையாயிருந்தாலும் ஸரி, மூளையாயிருந்தாலும் ஸரி, எலும்பாயிருந்தாலும் ஸரி, இவைகள் ஒவ்வொன்றும் தொழிலுக்கு மாறுபட்ட செதில்கூட்டங்களே. எவ்வகை மாறுபாடுகள் தேகத்தில் காணப்பட்டபோதிலும், இவைகளனைத்தும் உற்பத்திகாலத்தில் ஒரு செதிலாகிய கருவினின்றுதான் உண்டாகின்றன. அச்செதிலானது உற்பத்தி நிலையில் விகாரப்பட்டுப் பல தொழில்களுக்கிணங்க தோலாகவும், சதையாகவும், மூளை நரம்பு ஸ்தானங்களாகவும்எலும்புகளாகவும் மாறுபட்டுப் பல அவயவங்களாகி ஜீவனுக்கு வேண்டியதொழிலை நடப்பிக்கச் சாதனங்களாக முடிகிறது. இதனாலேயே பல செதில்களால் அமைக்கப்பட்ட ஒரு மனுஷ்யனுக்கும்,

ஒரு செதிலால் அமைக்கப்பட்ட அமீபா போன்ற ஜீவராசிகளுக்கும் இருக்கும் ஸம்பந்தம் இன்னதென்று நாம் ஒருவாறு அறியலாம்.

7. மற்றைய ப்ராணிகளைப் பிரிக்கும் உபாயம் இன்ன தென்று சற்று விசாரிப்போம். கீழ்த்தரத்தில் சில வாய், வயிறு, ஆஸனம், முதலிய அவயவங்கள் அதிக வித்யாஸப்படாமல் ஒரே பையுடன் கூடிய தேக அமைப்போடு காணப்படும் கடற்பஞ்சு, பவளம், இவைபோன்ற ஜீவராசிகளாய்க் காணலாம். இவை நீங்கலாக மற்ற எந்தப்ராணிக்கும் தேகத்தில் அவைகள் ஏற்பட்டு அவைகளின் ஊடே உள்ளுருவிச் செல்லக்கூடிய ஜீரணக்குழாயுடன் விளங்குகின்றன. ரத்தம் ஓடுவதற்குக் குழாய்களும், புத்தி உணர்ச்சிகளுக்கு ஸாதனமான மூளை நரம்பு முதலியனவும் ஆண் பெண்களுக்கு அறிகுறியான அங்க அடையாளங்களும்காணலாம். இப்பெருங்கூட்டத்தைப் பிரிக்குங்கால் முதலில் மண்புழு, நாக்குப் பூச்சி போன்ற புழு இனமாகவும், இரண்டாவது சிலந்தி, தேள், வண்டு, நண்டு இவைபோன்ற ப்ராணிகளை உள்ளடக்கும் பூச்சி இனமாகவும், மூன்றாவது: கிளிஞ்சல், சிப்பி, சோழி போன்ற நத்தை இனமாகவும், நான்காவது: நக்ஷத்திர மீன், உள்ளடக்கக்கூடிய இனமாகவும், கடைசியாய் உள்ள மற்றைய ப்ராணிகள் எல்லாம் முதுகெலும்போடு கூடியவை யாதலால் முதுகெலும்பினம் என்றும் பிரிக்கலாம். கடைசியில் கூறப்பட்ட முதுகெலும்பினத்தில்தான், நாம் எல்லோரும் சேருவோம். *

* அதிலும் தேக அமைப்பைப் பரிசோதிக்குங்கால் ம்ருகாதிகளுடன் அதிக ஸம்பந்த மிருப்பதாகக் காண்கிறோம். அப்படியானால் நமக்கும் வால் இருக்கவேண்டுமே என்ற ஓர் சங்கை உண்டாகலாம். உயிர்நூல் கரு உற்பத்தி சாஸ்திரம், உணர்ந்தோர் வாலுள்ள ம்ருகம் போன்ற இனத்தினின்றுதான் நாம் ஜனனமாகிறோம் என்று தெரிவிக்கிறார்கள். உட்கார்ந்து தலைநிமிர்ந்து நடக்கக்கூடிய நிலைமை ஏற்பட்ட ம்ருகங்களுக்கு வால் ப்ரயோஜனமில்லாத உருப்பு ஆதலால் மழுங்கிப்போனதுபோலும். ஆனால் இப்பொழுதும் அதற்கு அத்தாக்ஷிக்காக முதுகெலும்பின் நுனியாக ஓர் முள்ளெலும்பு தேய்ந்து அமுங்கி இடை எலும்புடன் ஒட்டிக் கிடக்கக்காணலாம்.

முதுகெலும்புள்ளவைகள்.—(1) மீன் இனம் (1) தவளை இனம், (3) ஊர்வன, (4) பக்ஷிகள், (5) ம்ருகங்கள் (6) மனிதன்.

ம்ருக குணங்கள் நம்மிடத்தில் முற்றிலும் விட்டு அகலவில்லை யென்பதற்கு அடையாளங்கள் சில கூறுவோம்:—'குழந்தைப்பிடி குரங்குப்பிடி' என்று வழங்குவதிலேயே ஒருவாறு இதன் உண்மையை அறியலாம். நமக்குக் கோபம் வருங்கால் நம்முடைய முகம் அடையும் விகாரத்தை டார்வின் என்ற உயிர் நூல் நிபுணர் கூறியபடி ஒரு போட்டகிருப் தக்ஷணமே எடுத்துப் பார்க்கும் பக்ஷத்தில் நாய் ஒன்றோடொன்று கோபிக்குங்கால் அதன் உதடு வலிப்பும், பல் விகாரமும் எப்படிக் காணப்படுமோ அதற்குக் கொஞ்சம்கூட வித்யாஸ மிருப்பதாகப் பார்க்கமாட்டோம். ஆகையால் ம்ருக ஸம்பந்தம் நமக்கு இருப்பதனாலேயே நம்முடைய நிலைமை இழிவான நிலைமைக்கு வரவில்லை. ம்ருகக் குணத்தை எவ்வளவுக்கெவ்வளவு ஒழித்து, ஸாத்விகக் குணத்தைத் தழுவி ஸன்மார்க்க நெறியில் நடப்போமோ, அவ்வளக்கவ்வளவு மனிதன் தனக்குச் சிருஷ்டி வர்க்கங்களில் மேலான பதவியை அடைந்து வாழ்கிறான். ஆகையால் அம்மாதிரி ஸ்திதிக்கு வர நாம் ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

N. S. ஜம்புநாத ஐயர், B. A., L. T., F. Z S.

யோகிகளும் ஸந்யாஸிகளும்.—இவர்கள் ஸர்ப்பத்தை ஒத்தவர். ஸர்ப்பம் தானிருக்க, புற்றையாவது, வளையையாவது தானே அமைத்துக்கொள்ளாது. எலி வளைகளையும் எறும்புப் புற்றுகளையும் தன் வீடாகக் கொள்ளும். அவை தமக்கு வாஸ யோக்யத்திற்கு இசையாமற்போனால் வேறொன்றை நாடி நுழையும். யோகிகளும், ஸந்யாஸிகளும், அவ்வாறே தமக்கென்று வீடு கொள்ளாமல் இன்றைக்கோர், வீட்டிலும் நாளைக்கோர், வீட்டிலுமாக பிறர் வீடுகளிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். இவர்களுக்கு இவ்வுலக வீடுகளின்மேல் எண்ணம் கிடையா. பேரின்ப வீட்டைக் காண விரும்புவோர், பொய்வீட்டை விரும்புவாரா? ஸூர்யனைக் காண விரும்புவோர் விளக்கைப்பார்க்க விரும்பார்.

## * த்ருவசரித்ரம்—பக்தியின் மஹிமை

### THE STORY OF DRUVA: THE GLORY OF DEVOTION.

ஸத்ய லோகாதிபதியான ப்ரஹ்மாவின் வழித் தோன்றலாகிய ஸ்வாயம்புவமனு ப்ரா்ஹிஷ்மதி என்னு மிடத்தில் அரசுசெலுத்தி வந்தவன். உத்தான பாதன் என்ற அவனுடைய புத்ரன் அரசாக்ஷிகாலத் தில், தேசமெங்கும், உவகையே மலிந்து, ஸௌக்யமுற் றிருந்தது. அரசன் தார்மீகனும், சௌர்யவானு மிருந்தமையால், அவன் தேசத்தில் சத்ருக்கள், சோரர் பீதியும், மற்றைய உபாதிகளு மில்லை.

இவ்வரசனின் மனைவியர் ஸுநீதி, ஸுருசி, என்ற இருவரில், இளையாளாகிய ஸுருசியிடத்தினிலேயே அரசன் அத்யந்தம் அன்புகொண்டிருந்தனன். ப்ரஹ்ம பௌத்ரனாயினும், ஸகல குணங்களும் நிறைந்த மன்ன னாயினும், மனுஷ ஜன்மமெடுத்த எவர்க்கும் இம்மாதிரி யான குறையிருத்தல் ஸஹஜமே யன்றோ?

இப்படி யிருக்குநாளில், ஸுநீதிக்கும் ஸுருசிக்கும் புத்ரர்கள் இருவர் ஜனித்தனர். இவர்கள் ஐந்து வயது ப்ராயமடைந்து ஸௌக்யமாய் வளர்ந்து வருநாளொன் றில், உத்தானபாத மன்னன் தன்னுடைய இளையாள் குழந்தையைத் தன் தொடையொன்றில் வைத்துக் கொண்டும், ஸுருசி பக்கத்திலிருக்க, குழந்தையை அணைத்துக் கொஞ்சிக்குலாவி, மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்திருந்தான்.

இச்சமயத்தில் த்ருவன் என்னும் பெயருள்ள ஸுநீதி என்ற உத்தான்பாத மன்னனின் மூத்த பட்ட மஹிஷியின் குமாரன், தன் தந்தையை யணுகி, தன் ஸகோதரன்போல், தன்னுடைய பிதாவின் மற்றொரு தொடையில் உட்கார்ந்து இன்பமனுபவிக்க ஆவலுள்ளவ னாய்,பிதுர்வாத்ஸல்யத்துடன் அணுகிய குழந்தையைத் தன்னுடைய அப்ரியையாகிய மூத்தாள் குமாரன் என்ற எண்ணத்துடனிருக்கும் ராஜனும், அதிபால்ய மான ஸுந்தர குழந்தையினிடத்து த்வேஷிக்கவில்லை. தான் அக்குழந்தையையும் எடுத்து ஆநந்திக்கவேண் டும் என்ற ப்ரியங்கொண்டானாயினும், தன் பக்கத்தி லுள்ள ஸுருசியினிடத்துள்ள அன்பினாலும்,பயத்தினா லும், தன்னிடம் வரும் குழந்தைக்கு இடம் கொடுக்க வேயில்லை. இது பார்த்திருந்த ஸுருசியும் மன்னனின் நிலைமையை யறிந்து குழந்தையைப் பார்த்து, "எட்டக் கூடாத உயரத்திலிருக்கிற மரத்துப்பழத்தைத் தாவிப் பிடிப்பதை யொப்பத் தாவும் உன் ஆண்மை யென்ன ஆண்மை! ஒட்டைச்சாண் பயல் என்ன கார்யம் செய் யத்துணிந்தாய்! கடாக்ஷ வீக்ஷண்யத்திற்கே ஈடுபட்டு அது போதுமென்றுபோகும் பூமண்டலேச்வரர் வணங் கும் எம்மன்னர் மன்னனின் தொடையில் ஏறிக்கொஞ்சு வதற்கு ஸரியான வழியாய் நீ வரவேண்டும். வெகு தபஸு செய்தபலனால் என் வயிற்றில் பிறந்தா லன்றோ இம்மன்னனின் தொடையில் உட்காரும் பாக் யம் கிடைக்கும். நல்ல ஸுகுமாரனாயிருந்தபோதிலும், நல்லவர்களும் கெட்ட ஸஹவாஸத்தால்கெட்டவர்களா வதுபோல், நீ என் சக்களத்தியும், ராஜனின் அப்ரி யையுமாகிய அவள் வயிற்றிற் பிறந்து, ராஜ்யாதிபத்யம் முதலியன வற்றிற்கும் யோக்யமில்லாதவனுமாயி னாய்" என்று உதாஸீனமாய், தன்னுடைய சக்களத்தி யாகியஸுநீதியின் பேரையும் உரைக்கக்கூடமனமில்லா தவளாய்க்கூறிய தன் இளைய தாயாரின் வார்த்தை,த்ருவ னின் மனதில் நாராசம் காய்ச்சிவிட்டது போலிருந்தது. அவன் இங்கும் அங்கும் விளையாடிப் புழுதி படிந்த தேகத்தினோடு அவன் பெருக்கிய கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகி நனைத்தது. தன்னிளைய தாய் சொல்லியதை நினைத்து வெளிக்காட்டாமல் குமுறிய மனத்துடனும், தட தடத்த நெஞ்சுடனும், அரசன் ஸந்நிதானம் விட்டகன்று அந்தப்புரத்தில் தன் மாதா ஸந்நிதானம் விரைந்து சென்றான்.

தன் குழந்தை கண்ணீர் ஆறாய்ப் பெருக்கிக்கொண்டு வருவதைக்கண்ட ஸுநீதி குழந்தைக்கு யாது நேரிட்ட தோ என்று துக்கத்தோடு வந்ததும், மனம் வெதும்பி வரும் த்ருவன் தன் மாதாவைக் கட்டிக்கொண்டு கோ வென்று கதறி ப்ரலாபித்தான். தான், தன் தாயைக் கண்டு ப்ரலாபித்த பிறகுதான், த்ருவனின் மனமும் சற்றே நிலைப்பட்டு அதன்மேல் கொஞ்சம் கொஞ்ச மாய்த் தனக்குத் தன் தந்தையிடம் இளைய தாயினால் நேரிட்ட ஸம்பவத்தை ஆதியோடந்தமாய்க் கூறினான்.

ஸுநீதியும், இது கேட்டு மனம் மிகுதியும் நொந்தா ளாயினும், அவ்வளவையும் சிறுவன் எதிரில் காட்டாது மறைத்துத் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, த்ருவனைத் தன்னாலானமட்டும் நல்ல வார்த்தைகளால் ஸமாதானப்படுத்தினாள். "பூர்வ ஜன்மாந்த்ரத்தில் ஈச் வரபஜனமும் பக்தியும் பண்ணாததனால் நேர்ந்த விஷ யம் இது! உன் இளைய தாயார் சொன்னது ஸரிதான்; எல்லாவற்றையும் நாம் பொறுத்துக்கொள்ளவேண்டும்;

* த்ருவன் இம்மஹானே. இப்போதும் இங்கிலீஷில் சொல்லப்படும் (Pole star) வடக்கில் காணப்படும் உத்தர த்ருவ நக்ஷத்ரமாயினனென்பர்.

இனி நீ கடவுளை நன்ருய் வழிபடின், அடுத்த ஜன்மத்தி
னிலாவது உனக்கு நல்ல பதவி கிடைக்கும்; என்
னுடைய சக்களத்தியாகிய ஸுருசியும் உன் மாதா
வாகையாலும், உன்னை அங்கீகரிக்காதிருந்த உன் பிதா
வுடைய நோக்கங்களும், அங்கீகரிக்கத் தக்கன. உன்
மாதாவே அவ்வார்த்தை சொல்லியிராமல், வேறு யாரா
வது சொல்லியிருந்தால், அதுபற்றி நாம் மனம் வருத்
தப்படவேண்டும்; அதற்குப் பரிஹாரம் தேடவேண்
டும். நம் கையே நம் கண்ணைக் குத்தினல் அதனை
வெட்டுவோருண்டோ? ஆகவே, குழந்தாய்! வருத்தப்
படாதே" என்று தேற்றினதைப்பற்றிக் கொஞ்சமும்
தைர்யம் கொள்ளாமல், தன் இளைய தாயார் சொன்ன
சொல்லைப்பற்றி வருத்தமும், மனவலியும் மிகுதியும்
கொண்ட த்ருவனின் மனது ஸமாதானப்படாது என்று
ஸுநீதி தெளிந்தாள். த்ருவ! குழந்தாய்! உன்னுடைய
ஸஹோதரனைக் காட்டிலும் மேலான பதவியை யடை
வதற்கு ஸ்ரீமந் நாராயணர்ச்சனமும், பக்தியும் தவிர
வேறில்லை. குபேர பதவியும், இந்த்ர பதவியும், ப்ரஹ்ம
பதவியும், மேலே சொன்ன பரமேச்வரனுடைய கடா
க்ஷத்தாலே யல்லாது கிடைக்கத் தக்கனவன்று என்று
சொல்லக்கேட்ட த்ருவன், சிறியனுயினும், தன் தாயா
ரிடமிருந்து பெற்ற வுபதேசத்துடன், அன்னையை ப்ர
தக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, மேலான பதவி கொடுக்
கும் பரமாத்மாவைத் தர்சித்து ப்ரம்மபதவியினும்
உயர்ந்ததான யோகிகளுக்கு மெட்டாதஸ்தானமடையப்
போகிறேன் என்று உடனே அந்தப்புரம்விட்டு, அரண்
மனைவிட்டு, ஆஸ்தானவாசல், ராஜவீதி, பட்டணம்,
கோட்டை மதில், நகரெல்லை, முதலியவற்றினைக் கடி
தினில் தாண்டி, நகரெல்லையிலிருக்கும் உபவனம் வந்
துற்றுன். பக்தர்கள் மனதிலேயே குடியிருக்கும் ஸ்ரீமந்
நாராயண மூர்த்தி, ஊணுறக்கம் முதலியவற்றையும்,
லக்ஷ்யம் செய்யாது, தீவிரமான வைராக்யத்துடன்
ஈச்வரஸந்நிதானம் தேடி மனோராஜ்யமான வழியில்
நடை செலுத்திவரும் ஸுந்தரபாலனெதிரில், அத்ரி,
பாரத்வாஜர், வஸிஷ்டர், முதலான ஸப்தரிஷிகளை
அனுப்பினர். அவர்கள் இக்குழந்தை யெதிரில் ப்ர
ஸன்னமாக, அவர்களையே ஈச்வரனுகப் பாவித்து
அக்குழந்தை அவர்களுக்கு ப்ரதக்ஷிண நமஸ்காரங்
கள் செய்து, பகவான் எங்குளர், அவரைப் பார்க்
கப் போகிறேன் என்ற ப்ரச்னங்கள் செய்ய,
சீக்ரம் ஈச்வரனை யடைவாய், நாராயணன் என்
பவர்தான் பகவான், அவரைத் தர்சித்து க்ஷேம
மடைவாய் என்று சொல்லி மறைந்தனர். இது கேட்டுக்
கொஞ்சதூரம் போன குழந்தையின் கண்ணெதிரில்
மஹதி என்ற தானுக வாசிக்கும் வீணையான யந்த்ரத்
துடன் விளங்கும் ஸ்ரீமஹாபாகவத சிரோன்மணியா
ரும் நாரதபகவான் தோன்றினர். குழந்தையை நோக்கி
"மெல்லிய தேஹத்தையுடைய நீ எங்கே போகிருய்?
அரண்மனையில் வஸிக்கத்தகுந்த நீ, இப்படிவருவது
ஸரியில்லையே' உன்னுடைய கருத்தென்ன என்னலும்
நான் பகவானைத் தரிசித்து என்னிஷ்ட ஸித்தியை
யடையப் போகிறேன்; இஷ்டஸித்தி கொடுக்கிற பக
வானிடம் போகிற எனக்குப் பசிதாஹம் எங்கிருந்து
வரும்? அஃதெல்லாமிருக்க, தங்களுக்குப் பகவானிரு
க்குமிடம் தெரியுமாயின் அதனைச் சொல்லும் கேட்
போம் என்று தீவிர வைராக்யத்துடன் கேட்கும், குழந்
தையின் பரிபக்வத்தைக்கண்டு, குழந்தைக்கு த்வாத
சாக்ஷர மந்த்ரத்தை உபதேசித்து, ஸ்ரீமந் நாராயண
மூர்த்தி, சதுர்ப்புஜத்தை யுடையவரென்றும், ஒருகை
யில் சங்கும், ஒன்றில் சக்காமும், மற்றென்றில் பத்ம
மும், மற்றென்றில் கதையுமுடையவரென்றும், வன
மாலாதரரென்றும், வக்ஷஸ்தல கௌஸ்துபமும்,
பீதாம்பர தாரியென்றும், ச்யாமள வர்ணமுடையவ
ரென்றும், சாந்தஹ்ருதய ரென்றும், ஸுவர்ண
மகுடோத் வஜ்லரென்றும், ஸுவர்ண குண்டலமும்,
கடகமுடையவரென்று ஸ்ரீமன் நாராயண மூர்த்தியி
னுருவத்தை அவன் மனத்தில் விளங்கச்செய்து,
இஃதே யோகிகள் ஆராதிக்கும் மூர்த்தியென்றும்
சொல்லி யமுனு நதிக்கரையிலுள்ள மதுவனத்திலிரு
ந்து த்யானம் செய்ய ஈச்வரன் ப்ரஸன்னமாகி இஷ்ட
ஸித்தி யளிப்பரென்று சொல்லி, அவ்வனம் போகும்
வழியையுங்காட்டி அந்தர்த்தானமானுர்.

ஸ்ரீமத் நாரதமுனிவர் சொல்லிய வழிப்படியே
சென்று, பாலனுகிய த்ருவன் மதுவனத்தை யடைந்து,
ஸ்ரீ நாரதமுனிவர் சொல்லிய சங்சக்ரகதாதரராகிய
ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தனது சித்தத்தில் வை
த்து த்யானம் செய்பவரானர். தீவ்ரமான பக்தியுடன்
தன்னையே குறித்துப் பக்திபண்ணும் குழந்தையினிடம்
அன்பு பூண்டு ஸ்ரீமஹாவிஷ்ணு அவன் ஹ்ருதய கம
லத்தில் ஸாந்நித்யமாயிருந்தருளினர். உபநயனமும்,
உபதேசமும் இல்லாமல் மாதா உபதேசமும் நாரதரின்
உபதேசமும் பெற்ற த்ருவன் என்ற பாலன் ஹ்ருத
யத்தில் ஸ்ரீபகவான் ப்ரகாசிக்க அன்னவன்ரக்கண்டு
ஆநந்த பூரிதனுகி அவரையே த்யானிப்பவனுனன்.
ஈச்வர மயத்தினல் ஜாஜ்வல்யமடைந்த தேஹத்தை
யுடைய குழந்தை ஈச்வரனைத் துவாதச மஹாமந்த்ரத்

தினால் ஜபிக்க ஜகதீச்வரனின் உருவமே யடைந்து ஜ்வலிக்க, தேவதைகளாகட்டும், மற்றெவராகட்டும், தம்முடைய ஸுகஸௌகர்யங்களுக்கு இடைஞ்சலாயிருக்கும் இக்குழந்தையின் தபஸினை எவ்விதத்தினாலும் கலைக்கவொண்ணாத நிர்விகல்ப ஸமாதியோகத்தில் காஷ்டம்போன்றிருந்தான் த்ருவனும்.

தன்னுடைய இளையதாய் பிள்ளையாகிய உத்தமனைக் காட்டிலும், மஹாயோகியர்கள், மஹரிஷிமண்டலங்கள், ஸூர்யசந்த்ரர்கள் முதலிய பலதேவர்களிருப்பிடத்திற்கும், உயர்ந்த ஸ்தானத்தைப் பெற அபேக்ஷித்து வந்த த்ருவன், ஏகாக்ர சித்தனாய் நாரதர் உபதேசித்த ஓம் நமோ பகவதே வாஸுதேவாய என்னும் த்வாதசாக்ஷர மந்த்த்தை ஸரியாக ஜபித்துக்கொண்டு ஆறு மாஸ காலவளவும் யோகஸமாதியிலிருப்பது பார்த்துப் பகவானுக்கு ஸஹிக்காமல் உடனே குழந்தையின்பக்திக்குஈடுபட்டு சாந்தாகாரத்துடன்நீலமேகச்யாமள வர்ணத்துடன், பீதாம்பரம்சங்கு சக்ர கதாதாரியாயும், ஸுவர்ண மகுடத்துடனும், வக்ஷஸ்தலத்தில் கௌஸ்துப மணிதரித்தவராயும் செந்தாமரைக் கண்ணராயும், எல்லாரும் வந்திக்கத்தகுந்த ஸ்ரீமஹாவிஷ்ணு, மந்தஹாஸத்துடன் தோன்றினார். ஹ்ருதயாகாரத்தில்ஸர்வபரிபூர்ணமாய்நிறைந்து விளங்குகிறபகவானை மனவினால் அநுபவித்துக் கொண்டிருக்கும் குழந்தை த்ருவன், எதிரில் ப்ரஸன்னமாகிய ஸ்ரீமந்நாராயணனைவெகுநேரம்வரையில்ஸமாதிகலைந்து பார்க்காதது கண்டு, பகவான் ஆச்சர்யப்பட்டு அவனுடைய அதிஉன்னத பக்திக்கு வியந்து மந்தஹாஸம்செய்து, அதனால் வந்த அமிர்த தாரையில் த்ருவனை ஸ்நாநம் செய்வித்துஅவன்மீது படிந்திருந்த மாசினை நீக்கினார். யோகோபாஸனையில் களைத்திருந்த த்ருவன், ஞான சக்ஷுஸுக்கு இலக்கான பிறகு, தம்கைகளினால்அவனை ஸ்பர்சித்துப் பகவான் எழுப்பியதில், ஆநந்தபாஷ்பம் பெருகப் பெருக உரோமம் சிலிர்ப்ப ஸ்தோத்ரம் செய்து, இன்னதென்றேயறியாத பால்மணமாறாப் பாலன் பகவானிணையடியில் விழுந்து விழுந்து பணிந்தான்.



பகவான் பணிந்தபாலனை நோக்கி, "வேண்டிய வற்றைக்கேள்" என்றருள, குழந்தையும் "நீன்பாதாரவிந்தமேயல்லாது வேறென்றினையும் வேண்டேன்" என்றான். இதுகேட்ட பரந்தாமன், "பகவானை ஆச்ரயித்த உனக்கு இதுகிடைப்பது வித்தமானாலும், எது முன்னால் அபேக்ஷிக்கப்பட்டதோ அதைப் பெற்றுக் கொள்; எல்லா தேவதைகளாலும், நவக்ரஹங்கள், ஸூர்யசந்த்ரர்கள் முதலியோர்களாலும் ப்ரதக்ஷிணம் செய்யப்பட்ட உன்னத நிலைமையை உனக்குக் கொடுத்தேன். அதில் உன்னுடைய மாதாவுடன் நீயிருந்து எல்லாராலும் கொண்டாடப்பட்டு, உலகத்தில் பக்தியினால் அடையக்கூடிய நிலைமையைக் காட்டியிருந்துபின்கல்பாந்தத்தில் என் நிலைமையையடைவது நிச்சயம்; பகவானையடைந்தோர் முக்தியடைவார்கள், அம்முக்தி உனக்குக்கிடைப்பது நிச்சயம், கொஞ்சகாலம் ராஜ்யபாரத்தை வஹிக்காது, ஒருமட்டாய்என்னுடைய பாதாரவிந்தத்தில் சேர்த்துக்கொள்வதில் எனக்கு இஷ்டமானாலும், பகவானை ஆராதித்து இஷ்டபலன் கிடைக்காமல் போன

வன் போனவனே யாய்விட்டான், திரும்பிவரவில்லை, உலக ஸுகம் அனுபவிக்கவில்லை, ஸ்ரீமந் நாராயணனை ஆராதிப்பதில் இதுதான் கண்டபலன் என்ற ஒருவித அபவாதத்திற்கு ஆளாக்காமல், நீ சிரக்காலம் ராஜ்ய பாரத்திலிருந்து ஸுகப்பட்டு, பின் ஸகல உலகத்தார்களும் போற்றும்படியான உன்னத ஸ்தானத்திலிருந்து பின் அடுத்தபடியில் என்னுலகம் வரக்கடவாய்" என்று சொல்லி, கடவுள், குழந்தையை அதைர்யப்படுத்தாமல், வத்ஸனிடத்துள்ள மிகுந்த வாத்ஸல்ய மிகுதியால் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே தன்னுடைய அங்கங்களை ஒவ்வொன்றாக மறைத்துக்கொண்டு மெதுவாய் அந்தர்த்தானமாயினர்.

பகவத்க்ருபை பூர்ணமாகக்கொண்ட த்ருவன், தன் பிரிவையும் மஹிமையையும், நாரதமஹரிஷியினிடமிருந்து கேட்டு வருந்தும் பிதாவினிடம் போய், அவராலும், அவனுடைய இளையதாயாராலும் ஆதரிக்கப்பெற்று, மகுடாபிஷேகம் கொண்டு, 26000 வருஷம் பூமியை ஒரு குடைக்கீழ் அரசாண்டு, பின் நிலைவிட்டுக் கலங்காத நக்ஷத்ரபதவி யடைந்தனன் என்ற கதையைச் சௌனகரையுள்ளிட்ட நைமிசாரண்ய வாஸிகளுக்கு, அங்கு எழுந்தருளிய நாரதபகவான் திருவாய் மலர்ந்தருளினர்.

**உறுதியுள்ளவன் சிறுவனுயினும், தான் கொண்ட கார்யத்தை ஸாதிக்கவல்லவனுவான் என்பது** த்ருவனால் அறிகிறோம். நிலைகலங்காமைக்கும், பக்தி வைராக்யத்திற்கும் ப்ரஹ்லாதனைப் போன்ற த்ருவனால், பகவதாராதனை அதிலும் ஸகுணோபாஸனை, கடைசியில் நன்மையை விளைக்கும் என்பது அறிகிறோம். பகவதாராதனை செய்வதற்கு மனஸு ஒருவருக்கு வருகிறதோ அருமையானது. அப்பேர்ப்பட்ட கார்யம் செய்வதற்கு ப்ரதிகூலங்கள் வருகிறதோ எண்ணிறந்தன. பாம்பின் தலையிலுள்ள உயர்ந்த ரத்னம் போலும் விலையற்றிருப்பது ஈச்வரஸ்வரூபமும், அவனிடத்துக்கொள்ளத்தகும் பக்தி விசேஷமும். மனுஷனிடத்துள்ள காமக்ரோத லோபமோஹ மதமாச்சர்யம் என்னும் இடையூறு செய்யும் மனுஷர்கள்போல் பாம்பின் உருவமும் அவற்றின் விஷத்தன்மையும் பாம்பின் மணியை யெடுக்க மந்த்ரசக்தியினலோ வேறெவ்வித உபாயத்தினலோ அப்பாம்பின் கண்ணினைக்கட்டி மணியை யெடுக்க முயற்சிப்பதுபோலும், மேற்கூறியகாமக்ரோதங்களுக்கு இடம் கொடாது ஜயித்து ஈச்வரனுடைய பக்திவலையிற் படுவது. ஆகவே நினைத்த வல்லதெதையும் கொடுக்கத்தக்க கல்பக வ்ருக்ஷமாகிய பகவானை எவ்விதமான பாம்புகள் சூழ்ந்திருப்பினும் இடைவிடாத த்யானமாகிய பக்தி முயற்சியினல் பிடித்து த்ருவகுழந்தையைப்போலும், ப்ரஹ்லாதனைப்போலும் நல்லபதவி யடைவோமாக.

வி. ஸுப்ரமணிய ஐயர்.

# இயற்கை அற்புதங்கள்
## WONDERS IN NATURE

### XXI உஷ்ணம்: அதன்கார்யம்: அதன்மாறுபாடுகள்

### HEAT: ITS EFFECTS AND VARIETIES

உஷ்ணம் வஸ்துக்களைப் பொதுவாகப் பெரிதாக்குகிறது என்றும்; அப்பொழுது அவ்வஸ்துக்களின் உஷ்ணநிலை அதிகப்படுகின்றது என்றும் முன்னரே கூறியாய்விட்டது. சிற்சில வஸ்துக்கள் விஷயத்தில் உஷ்ணமானது இவ்வாறு செய்யாது வஸ்துவையே மாற்றிவிடுகிறது. சர்க்கரையைச் சுடவைத்தால் அது கருப்பாகி முடிவில் வெறும் கரியாகவே ஆகிவிடுகிறது. முன் எடுத்த சர்க்கரையின் நிறையோடு பின் காணப்படும் கரியின் நிறையை ஒப்பிட்டால் பின்னது நிறையில் குறைந்துவிட்டது என்பது வெளியாகும். இதனலே சர்க்கரையின் ஓர்பாகம் உஷ்ணத்தால் பிரிந்து போயிருக்கவேண்டும். ஆகவே உஷ்ணம் சிலவஸ்துக்களைப் பிரித்து விடுகின்றது. இம்மாதிரியே மரம், கிளிஞ்சில், துணி, இரும்பு முதலியவைகளை உஷ்ணம் மாற்றும் திறனுடையது. இம்மாதிரி பிரிவிற்கு **ரஸாயனப்பிரிவு** என்று பெயர். ஆகவே பொதுவாக **ரஸாயனமாற்றம்** உஷ்ணத்தின் ஓர் கார்யம்.

உஷ்ணத்தால் இனம் மாற்றம் ஏற்படுகிறது. அதாவது திடவஸ்துக்கள் த்ரவங்களாகவும், த்ரவங்கள் வாயுபதார்த்தங்களாகவும் உஷ்ணத்தால் மாற்றப்படும். முன்னதிற்கு உருகுதல் என்றும், பின்னதிற்குக் **கொதித்தல்** என்றும் பெயர். விழுதான நெய் கொஞ்ச நாழிகையில் உருகும், பனிக்கட்டி ஸாதாரணமாக உருகிக்கொண்டேதான் இருக்கும். ஈயம் கொஞ்சம் அதிக நாழிகை சுடவைத்தால்தான் உருகும் இரும்பு வெகுநாழிகை கழித்து உருகும். கரியோ வெகுநாழிகை கழிந்தபின்னும் உருகாது. இம்மாதிரி ஒவ்வொரு வஸ்துவும் சூடுகாட்டிய உடன் உருகுவதில்லை. கொஞ்ச நாழிகை அதற்கு ஏற்ற உஷ்ண நிலைக்கு ஏறிய பின்புதான் உருகுகிறது. இந்த உருகும் உஷ்ணநிலைக்கு உருகும்நிலை என்று பெயர். ஒவ்வொரு வஸ்துவுக்கும் தனித்தனியாக உருகும் உஷ்ணநிலை உண்டு. இம்மாதிரியே கொதிக்கும் விஷயத்திலும், ஒவ்வொரு வஸ்துவுக்கும் தனித்தனி கொதிக்கும்நிலை உண்டு. முன் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் டிகிரிகள் எல்லாம் சதாம்ச உஷ்ண அளவைகள்.

| வஸ்து | உருகும்நிலை | கொதிக்கும்நிலை |
|---|---|---|
| பாதரஸம் | .. | 357° |
| வெண்ணெய் | 33° | |
| ஈயம் | 325° | |
| வெள்ளி | 1000° | |
| கந்தகம் | 114° | 440° |
| மெழுகு | 65° | |
| செம்பு | 1090° | |
| கண்ணாடி | 1100° | |
| பொன் | 1250° | |
| இரும்பு | 1500° | |

வெண்ணெய் 33 டிகிரியில் உருகுகிறது. வெண்ணெயுள் ஓர் உஷ்ண அளவையை சொருகி வைப்போம். அது சுற்றிலும் உள்ள 15 டிகிரி உஷ்ணம் காட்டுவதாக வைத்துக்கொள்வோம். இந்த வெண்ணெயைச் சுடவைப்போம். மெதுவாக உஷ்ணநிலை வர வர ஏறி 33 டிகிரிக்கு வரும். வந்ததும் வெண்ணெயின் ஓர்புறம் உருகி நெய்யாகத் தொடங்கும். இது ஏற்பட்டவுடன் உஷ்ண அளவைப்பாதரஸம் ஏறாது நின்றுவிடுகின்றது. வெண்ணெய் முழுவதும் நெய்யாகும் வரையில் பாதரஸம் அப்படியே நின்றுவிடும். பின்னர்தான் 33-ல் இருந்து 34, 35 முதலிய டிக்ரிகளுக்கு ஏறத்தொடங்கும். இதை உணர்ந்ததும், 33 இல் ஏறாது பாதரஸம் நின்றிருந்த காலத்தில் கொடுக்கப்பட்ட உஷ்ணம் என்னவாயிற்று என்ற சங்கை பிறக்கும். அதை உஷ்ண அளவையால் உணரமுடியவில்லை. ஆதலால் அது மறைந்து கிடக்க வேண்டும். இம்மாதிரி வஸ்துக்கள் உருகும் காலத்தில் மறைந்துபோகும் உஷ்ணத்திற்கு, மறைஉஷ்ணம் என்று பெயர். இதற்கு உருக்க மறையுஷ்ணம் என்று பெயர். இம்மாதிரியே வஸ்துக்கள் கொதிக்கும் காலத்திலும். உஷ்ணம் மறைவதுண்டு. தண்ணீர் ஸாதாரணமாக 100 டிகிரியில் கொதிக்கத் தொடங்குகிறது. தண்ணீரில் ஒரு கொதி வந்துவிட்டால், தண்ணீர் முழுவதும் ஆவியாகும் வரையில் உஷ்ண அளவைப் பாதரஸம் 100 - வது டிகிரியிலேயே நிற்கும். இந்த உஷ்ணத்திற்கு ஆவி மறை உஷ்ணம் என்று பெயர். ஆகவே இனம் மாறுங்கால் கொஞ்ச உஷ்ணம் மறைந்து போகிறது. இம்மாதிரியே குளிர்ச்சியால் மாறாக இனம் மாற்றல் ஏற்படுங்கால் உஷ்ணம் வெளிப்படும்.


உஷ்ணத்தை ஓர்விதமாக அளவிட முயன்றிருக்கின்றனர். ஒரு பவுன் சுத்தத்தண்ணீரை ஒரு டிகிரி ஏற்றும் உஷ்ணத்தை உஷ்ணமூலமாக மதிக்கப்படுகிறது. ஆகவே 10-பவுன் தண்ணீரை 5 டிகிரிஏற்ற 50 உஷ்ணமூலங்கள் வேண்டும். இந்த ஒழுங்குப்படி 1 பவுன் பனிக்கட்டி முற்றிலும் தண்ணீராக 79 உஷ்ண மூலங்களும்; 1 பவுன் தண்ணீர் ஆவியாக 537 உஷ்ண மூலங்களும் வேண்டும் என்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

4 பவுன் பனிக்கட்டியை ஓர் பாத்திரத்தில் போட்டு அதனுள் ஓர் உஷ்ண அளவையைச் சொருகுவோம். அது-10 டிகிரியில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இதைச் சுடவைக்குங்கால் ஆவியாகும் வரையில் என்ன மாறுபாடுகள் ஏற்படுகின்றன என்று எடுத்துக்கூறுவோம். முதலில் பனிக்கட்டி அளவில் குறைந்து கொண்டேயும் உஷ்ண நிலையில் -10° முதல் 0 வரையில் ஏறுகிறது. 0 டிகிரியில் வந்ததும் உஷ்ண அளவைப் பாதரஸம் நின்றுவிடுகிறது. பனிக்கட்டி உருகிக்கொண்டு வருகிறது. பனிக்கட்டி தண்ணீராகும்வரையில் இவ்வாறே யிருக்க 0 பனிக்கட்டி 0 தண்ணீராவதற்குள் 316 உஷ்ண மூலங்களை விழுங்கி விடுகின்றது. பின்னர் தண்ணீர் அளவில் குறுகிக்கொண்டும், உஷ்ணநிலையில் ஏறிக்கொண்டும் 4 டிகிரிவரையில் ஏறும். 4 டிகிரி தாண்டியதும் அளவு வர வர அதிகமாகிக்கொண்டும், உஷ்ண நிலையில் ஏறிக்கொண்டும், 100 டிகிரிவரையில் வரும். உடனே தண்ணீரில் கொதிவர உஷ்ண அளவைப் பாதரஸம் 100-ல் நின்றுவிடும். தண்ணீர்முழுவதும் ஆவியாகும்வரை இவ்வாறே இருக்க 2148 உஷ்ண மூலங்கள் மறைந்துவிடும். போகும் ஆவியைப் பிடித்துச் சுடவைத்தால் 100-க்கு மேல் உஷ்ண அளவு ஏறும். ஆதலால் அளவு மாற்றமும், உஷ்ண நிலை ஏற்றமும் வஸ்துவில் காணப்படுங்கால் இனம் மாற்றம் ஏற்படாது. இனம் மாற்றம் ஏற்படுங்கால் முன்னிரண்டும் நடவா. மறையும் உஷ்ணம் வஸ்துவின் ஸம்ச்லேஷந்தை (அணுக்கட்டை) தளர்த்தி திடவஸ்துவை த்ரவவஸ்துவாகவும், த்ரவத்தை வாயு வஸ்துவாகவும் மாற்ற உபயோகப்படுகின்றது. இம்மாதிரியான மறை உஷ்ணம் என்பது ஒன்று ஈச்வர ஸ்ருஷ்டியில் அமையாவிடில் வஸ்துக்கள் உருகத் தொடங்கினால் உடனே உருகிவிடும். அதனால் மிகக் கெடுதிகள் ஏற்படும்.

உருகுவதும் கொதிப்பதும் ஒவ்வொரு வஸ்து விஷயத்திலும் தனித்தனியான உஷ்ண நிலையில் ஏற்படும் என்று முன்னரே கூறியாகி விட்டது. இப்படி இருப்பினும் இந்த நிலை அநேக விஷயங்களைப்

பொறுத்தது. முக்யமாக இது அந்த வஸ்துவின் மேலுள்ள அழுத்தத்தைப் பொறுத்தது. ஸம்ச்லேஷத் தளர்ச்சியால் வஸ்துக்கள் இனம் மாறுவதால் அவைகளின்மேல் உள்ள அழுத்தம் அதிகமாக, இத்தொழில் அதிகமான உஷ்ணநிலையிலும், குறையுங்கால் தாழ்ந்த உஷ்ண நிலையிலும்தான் ஏற்படும். ஸாதாரணமாகத் தண்ணீர் 100-டிக்ரியில் கொதிக்கத் தொடங்குகிறது. ஓர் மலைச்சிகரத்தில் தண்ணீரைக் காய்ச்சினால் அது 100-டிக்கிரிக்குக் கீழே அதாவது 97 அல்லது 98 டிக்ரியில் கொதிக்கத்தொடங்கும். சுரங்கத்தின் கீழே அதே தண்ணீர் ஸுமார் 102 அல்லது 103 டிக்ரியில் கொதிக்கத் தொடங்கும். தண்ணீரிருக்கும் பாத்திரத்தை மூடிவிட்டுக்காய்ச்சினால்உண்டாகும் நீராவி வெளியேபோக இடமில்லாததால் தண்ணீரை அதிகமாக அழுத்த அதைஎளிதில் கொதிக்கவிடாது.தண்ணீரில் கொதிவர இடங்கொடுத்துவிட்டால் பின்னர் கொடுக்கும் உஷ்ணம் அதன் உஷ்ணநிலையை ஏற்ற உபயோகப்படாது வீணுகும்; அதாவது அது சூட்டில் அதிகப்படாது. ஆதலால் நமது ஸ்த்ரீகள் பருப்பு கர்ணக்கிழங்கு முதலிய 100 டிகிரிக்குமேல் வெந்துவரும் பதார்த்தங்களைச் சமைக்குங்கால் பாத்ரத்தை மூடிவிடுவது வழக்கம். அதற்குக் காரணம் அவர்களைக் கேட்டால் திறந்த பதார்த்தத்தில் சூடு உறைக்காது என்பார்கள். அதன் ரஹஸ்யம் முற்கூறியதே. இந்த பதார்த்தங்களே 100 டிகிரிக்கு மேல்தான் பாகமாகும். தண்ணீரோ 100 டிகிரியில் கொதிக்கத்தொடங்கும். பின்னர் உஷ்ணம் அதில் ஏறாது. தண்ணீர் ஆவியாகிக் குறைந்து வருமே ஒழிய பருப்பு வேகாது. பாத்திரத்தை மூடிவிட்டால் தண்ணீர் 100 டிகிரி மேல்பட்டுத்தான்கொதிக்கத்தொடங்கும்.அதற்குள் பருப்பும் வெந்துவிடும். இந்த விஷயம் நம்மவர்களுக்கு இவ்வளவு தெளிவாகத் தெரியாவிடினும், இது அடங்கிய கார்யங்களை அவர்கள் தவறாது செய்துவருகின்றனர்.

அழுத்தம் குறையத் தண்ணீர் 100டிகிரிக்குக் கீழே கொதிக்கும்என்பதைப் பின்வரும்அற்புதசோதனையால் காட்டலாம். இதில் குளிர்ந்த ஜலம் விட்டுத் தண்ணீரைக் கொதிக்கவைக்கப் போகிறோம்! ஓர் குவளைப் பாத்திரத்தை எடுத்து அதனுள் பாதிஅளவு தண்ணீரை விடுவோம். அதைச் சாராய விளக்கில் கொதிக்கும் வரையில் சுட வைப்போம். நன்றாகக் கொதிக்குங்கால் குவளையின் வாய்வழியாக நிறைய ஆவிவரும். இந்த ஸமயத்தில் *குவளைவாயைத் தகுந்த சடையால் நன்றாக அடைப்போம். அதை ஓர் ஆதாரத்திலுள்ள வளையத்தில் தலைகீழாக நுழைத்து நிறுத்துவோம். பின்னர் துணியைத் தண்ணீரைத் தோய்த்து இதி மேலே இருக்கும் குவளையின் அடிப்பாகத்தில் குளிர்ந்த தண்ணீரை விடுவோம். உடனே தண்




ணீர் கொதிக்கும். இம்மாதிரி கொஞ்ச நாழிகை செய்துவிட்டு, உடனே குவளையைத் திருப்பி சடையை எடுத்துவிடுவோம். * இவ்வாறு நடக்க என்ன காரணம்? தண்ணீர் நன்றாகக்கொதித்து நீராவி வாய் நிறைந்து வருங்கால் பாத்திரத்துள் நீராவியே இருக்கின்றது; ஸாதாரண வாயு முற்றிலும் வெளியே போகிறது. சடையைவைத்துத் திருப்பி நிறுத்துங்கால் தண்ணீரின் உஷ்ணம் 100 டிகிரி கீழே போய்விடும், 96, 97ல் இருக்கலாம். தண்ணீரின் மேல்பாகத்தில் நீராவி அழுத்திக் கொண்டிருக்கிறது. குளிர்ந்த ஜலம் மேலே விழும்பொழுது இந்த நீராவி இனம் மாறித் தண்ணீராக உள் அழுத்தம் குறைகின்றது. உடனே தண்ணீர் கொதிக்கிறது தெரிகின்றது. ஆதலால் அழுத்தம் குறைய கொதிக்கும் நிலை இறங்கும், அதிகமாகக் கொதிநிலை ஏறும். இம்மாதிரியே தான் உருகுங்காலும்.த்ரவங்களில் சிலவஸ்துக்கள் கரைந்திருப்பினும் கொதிநிலை ஏறும். உப்புநீர் 100 டிகிரிக்கு மேல்பட்டுத் தான் கொதிக்கும்.

பனிக்கட்டி விஷயம் மாத்திரம் இந்த விதிக்குப் புறநடை. பனிக்கட்டி 0 டிகிரியில் ஸாதாரணமாக உருகும். அழுத்தம் ஏறினால்–1 அல்லது–2 டிகிரியிலும்

* இக்குறிப்புள் அடங்கிய தொழில்களை வெகு சீக்கிரமாக மூன்றுநிமிஷத்திற்குள் செய்து முடித்துவிட வேண்டும். இல்லாவிடில் ஸாதாரண வெளிவாயு அழுத்தத்தால் குவளைபடீரென்றுவெடித்து அபாயம் உண்டாக்கும்.

தாழ்ந்தால் 1 அல்லது 2 டிகிரியிலும் உருகும். பனிக் கட்டி உஷ்ணத்தால் குறுகுவதும், குளிர்ச்சியால் பெருகுவதுமே இதற்குக் காரணம். இம்மாதிரி பனிக் கட்டி உள்ளதென்பது பனிக்கட்டி தண்ணீரில் மிதப்பதாலேயே விளங்கும். பனிக்கட்டியின் இவ் விசித்திரத்தைப் பின் வரும் சோதனையும் வெளியாக்கும். ஓர் உயர்ந்த தகரப்பாத்திரத்தை எடுத்து அதன் நடுவில் வெளிப்புறத்தில் சுற்றிலும் ஓர் குழிவான தட்டு அமைப்போம். மேலே வாயின் அருகாமையில் ஓர் சதாம்ச உஷ்ண அளவையை வெளியில் 0 டிகிரி முதல் தெரியும்படியாகவும், அகன்றபாகம் உள்ளே நீட்டிக்கொண்டிருக்கும்படியாகவும் அமைப்போம். இம்மாதிரியே சுற்றுத்தட்டின் கீழ்ப்பாகத்தில் அதே தூரத்தில் வேறொரு சதாம்ச உஷ்ண அளவையை அமைப்போம். உள்ளே நிறைய தண்ணீர்விட்டு வெளியே உப்பும் பனிக்கட்டித்தூளையும் சுற்றுத்தட்டுள் போடுவோம். இரண்டு உஷ்ண அளவைகளும் 15 டிகிரியில் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். உடனே கீழ்உஷ்ணஅளவை மெதுவாக4டிகிரி வரையில் வரும், பின்னர் மேல் உஷ்ண அளவை இறங்கி சீக்ரம் 4 டிகிரிவரையில் வந்ததும் மெதுவாக 0 டிகிரிவரையில் இறங்கும். அதன் பின்பு கீழ் உஷ்ண அளவை வெகு மெதுவாக 4 டிகிரியிலிருந்து இறங்கிவரும். முதலில் கீழ் உஷ்ண அளவை 4 டிகிரி வரையில் இறங்குவதால் குளிர்ந்த ஜலம் குன்றிக் கனமாகி கீழே இறங்குகிறது என்றும், 4 டிகிரிக்கு மேற்பட்டு மேல் உஷ்ண அளவை இறங்குவதால் இதன் மேல் குளிரும் ஜலம் அகன்று லேசாகி மேலேஏறுகின்றது என்றும் இவ்வாறு ஜலம் 0 டிகிரிவரையில் இறங்கிப் பின் பனிக்கட்டியாகிக் கீழே இறங்குகிறது என்றும் வெளியாகும். ஆகவே 4 டிகிரியில் தான் தண்ணீருக்கு அதிகமான அடர்த்தி. பனிக் கட்டிபோன்ற பொது விதிக்குப் புறனடையாக இருக்கும் வார்ப்பட இரும்பு இவைகள் விஷயங்களில் உருகுதல் கொதித்தல் முதலிய விஷயவிதிகளும் மாறுபட்டே இருக்கும்.

இம்மாதிரி தண்ணீர் விஷயத்தில் உள்ள மாறுபாடானஅமைப்பால்ஸ்ருஷ்டியில் ஒருவித உபயோகம் இருக்கிறது. பூமியில் மிகக் குளிர்ந்த பாகங்களாகிய வட ஸமுத்ரங்களில் சுற்றும் வாயுவில் உள்ள குளிர்ச்சியால் தண்ணீர் குளிர, அந்தக் குளிர்ந்த தண்ணீர் கீழே இறங்கி தண்ணீர் முழுவதும் 4 டிகிரிக்கு வந்ததும், குளிர்ந்த தண்ணீர் மேலே மிதந்து பனிக் கட்டியாகி தண்ணீர் மேல்மட்டத்தை மறைத்து விடுகின்றது. இதனால் மேலே எவ்வளவு குளிர்ந்து பனிக் கட்டியால் மூடப்பட்ட போதிலும் உள்புறம் 4 டிகிரித் தண்ணீராகவே இருக்க, வெளிக்குளிரால் தாக்கப் படாத நீர் ஜந்துக்கள் கீழே ஸாதாரணமாக உலாவி வர இடமுண்டு. இவ்வாறின்றி 4 டிகிரிக்குக் கீழும் தண்ணீர் குறுகிப் பனிக்கட்டியாவது என்றால் குளிர்ந்தபாகங்களிலுள்ள நீர் நிலைகள் ஸமுத்ரங்கள் எல்லாம் பாறையாக உறைந்துபோய் உள்ளிருக்கும். மீன்கள் இடையில் அகப்பட்டு நசுங்கி இறக்கவேண்டி வரும். இவ்வாறு ஆக இடங்கொடாது தண்ணீர் பொதுவிதிக்கு மாறாக ஸ்ருஷ்டியில் அமைந்து கிடக்கும் அற்புதமே அற்புதம்!

தண்ணீர் விஷயத்தில் ஆவியாதல் என்ற ஓர் இனம் மாற்றம் உண்டு. இதில் தண்ணீர் ஆவியாகிறது என்பது உண்மையாயினும், இதற்கும் கொதித்தலுக்கும் மிகுந்த வித்யாஸம் உண்டு. கொதித்தல் என்பது ஸாதாரணமாக 100-வது டிகிரியில் நீராவிக் குமிழிகள் வெகு வேகமாகத் தண்ணீரின்அடிப்பாகத்திலிருந்து கிளம்பி மேல்பாகம் வந்து வெடிக்க நீராவி மேலே கிளம்புவது. ஆனால் ஆவியாதல் என்பது எல்லா உஷ்ணநிலைகளிலும் தண்ணீர் ஆவியாகக் கிளம்புவது. பூமியிலுள்ள நீர்நிலைகளிலிருந்தும் ஸமுத்ர மேல் மட்டத்தி லிருந்தும் ஸாதாரணமாக ஸூர்ய உஷ்ணத்தால் ஆவி கிளம்புவதும், நனைந்த பதார்த்தங்கள் உலருவதும் இந்த விதமான இனம் மாற்றமே. இந்த ஆவியாதல் என்ற இனம் மாற்றத்திற்குக் கொதியே இராது. இது காற்றோட்டம், வஸ்துவில் வெளித் தெரியும் மேற்பாகம், காற்றின் உஷ்ணநிலை, ஆகிய இந்த முகாந்திரங்களைப் பொறுத்து, இவை அதிகரிக்க அதிகமாயும் குறைந்தக்கால் குறைந்தும் நடப்பது. இம்மாதிரி இனம் மாறியதண்ணீர் வாயுவில் எந்த ரூபங்களாகி இருக்கின்றது என்பதை (தொகுதி 2, பக்கம் 141) வாயுவிலுள்ள தண்ணீரும் அதன் ரூபாந்த்ரங்களும் என்ற வ்யாஸத்தில் எடுத்துக் கூறியாகிவிட்டது.

இம்மாதிரி இனம் மாற்றம் ஏற்படுங்கால் குளிர்ச்சி உண்டாகும். வேர்வை விடுங்கால் விசிறிக்கொண்டால் நமக்கு குளிர்ச்சியானஉணர்ச்சி உண்டாகிறது. உஷ்ண அளவையின் அகன்ற பாகத்தைத் தண்ணீரில் தோய்த்து மேலே விசிறிபோட்டு விசிறியினால் அதன்

பாதரஸம் கீழே இறங்கி உஷ்ணக்குறைவைக் காட்டும். வாயிலில் தண்ணீர் தெளித்தால் உடனே குளிர்ந்து காட்டும். இந்த ஸமயங்களில் தண்ணீர் வெளி உஷ்ண ஸஹாயமின்றி ஆவியாகிறது. அதற்கு வேண்டிய உஷ்ணத்தை அது படிந்திருக்கு மிடத்திலிருந்தே எடுத்துக்கொள்ள அங்கு உஷ்ணக்குறைவு ஏற்படுகிறது. இதனல் குளிர்ச்சி என்ற உணர்ச்சி உண்டாகிறது.

இம்மாதிரியே சிற்சில வஸ்துக்களைக் கலக்குங்கால் மிகுந்த உஷ்ணக்குறைவு ஏற்படுகின்றது. 0டிகிரியில் இருக்கும் பனிக்கட்டித்தூளில் உப்புப்பொடியைச் சேர்த்தால்—18டிகிரிவரையில் கலவை இறங்கிவிடுகிறது. இம்மாதிரியே சிற்சில வஸ்துக்கள் தண்ணீரில் கரையுங்காலத்தில் உஷ்ணக்குறைவு ஏற்படுகின்றது. வெடி உப்பைத் தண்ணீரில் கரைத்தால் குளிர்ச்சி உண்டாவதே இதற்கு உதாரணம். இங்கு உண்டாகும் உஷ்ணக்குறைவுக்கு முன்னர் ஆவியாதல் விஷயத்தில் கூறப்பட்டகாரணமே பொருந்தும். இம்மாதிரி கலக்குங்கால் குளிர்ச்சி உண்டாகும் சேர்க்கைக்குத் துளிர்க்கலவைகள் என்றுபெயர்.

எல்லா வஸ்துக்களும் ஒரேமாதிரி உஷ்ணநிலையில் ஏறுவதில்லை. ஒரேமாதிரியான இரண்டு சாராயவிளக்கை எடுத்துக்கொண்டு ஒரேமாதிரியான இரண்டு பாத்திரங்களிலிருக்கும் ஸமநிறை உடைய (4 பவுன் என்போம்) தண்ணீர் பாதரஸம் ஆகிய இவைகளை சுடவைக்கத் தொடங்குவோம். முன்னரே இவைகளுள் இரண்டு உஷ்ணஅளவைகளை அகன்றபாகம் முழுகும்படி வைப்போம். தண்ணீர் 100 டிகிரிக்கு 30 நிமிஷத்தில் வந்துகொதிக்கத்தொடங்கும் என்றல் பாதரஸம் 1 நிமிஷத்தில்100 டிகிரிக்கு வந்துவிடும். இதனல் 30 நிமிஷத்தில் தண்ணீரில் 340 உஷ்ண மூலங்கள் ஏறுகின்றன ; ஸாதாரண உஷ்ணம் 15° என்போம். இரண்டாவது விளக்கும் இதேமாதிரியான விளக்காதலால் அதிலிருந்து 1 நிமிஷத்தில் $11\frac{1}{3}$ உஷ்ண மூலங்கள் பாதரஸத்தில் ஏறியிருக்கவேண்டும். ஆதலால் 4 பவுன் பாதரஸம் $11\frac{1}{3}$ உஷ்ண மூலங்களால் அதே நிறையுள்ள தண்ணீர் எவ்வளவு உஷ்ணநிலைகள் ஏறிற்றே அதே உஷ்ணநிலைகள் ஏறிற்று. அதாவது பாதரஸம் தண்ணீரைப்போல 30 மடங்கு [$11\frac{1}{3}$ ÷ 340] சீக்ரமாக உஷ்ணப்படுகிறது. இம்மாதிரியே ஒவ்வொரு வஸ்து விஷயத்திலும் உஷ்ண நிலைகள் ஏறும் விஷயம். ஒரே நிறையுள்ள அநேக வஸ்துக்கள் ஒரே உஷ்ண நிலையிலிருந்து ஒரே முடிவான உஷ்ண நிலைக்கு வர வெவ்வேறு உஷ்ண மூலங்கள் வேண்டும் என்பது வெளியாயிற்று. தண்ணீரை இவைகளுக்கு மூலவஸ்துவாகக்கொண்டு உஷ்ணமூல விஷயத்தில் மற்றையவஸ்துக்களை இதனேடு ஒப்பிடுவது வழக்கம். ஒரு வஸ்து ஓர் உஷ்ண நிலை இடை ஸஞ்சரிப்பதற்கு வேண்டிய உஷ்ண மூலங்களை, அதேநிறையுள்ள தண்ணீர் அதே உஷ்ணநிலை இடை ஸஞ்சரிப்பதற்கு வேண்டிய உஷ்ணமூலத்தால் வகுத்தால் ஓர் எண் வரும். இதற்கு விசிஷ்ட உஷ்ண அளவு என்று பெயர். பாதரஸத்திற்கு விசிஷ்ட உஷ்ணஅளவு 1/30. எல்லா வஸ்துக்களுக்கும் விசிஷ்ட உஷ்ண அளவு 1-ஐவிட சிறியது. ஆகவே தண்ணீர் எளிதில் உஷ்ண நிலையில் ஏறுவதில்லை. இம்மாதிரியாக இருப்பதால் தான் தண்ணீர் எளிதில் பனிக்கட்டியாகாமலும், ஆவியாகாமலும் த்ரவமாகவே இருப்பது. இவ்வாறில்லாமலிருந்தால் தண்ணீர் ஸூர்ய உஷ்ணத்தால் சீக்ரம் ஆவியாகப் பறந்தோடிப் போய்விடும். குளிரால் எளிதில் பனிக்கட்டியாகிவிடும். மலையிலுள்ள பனிக்கட்டிகள் ஸூர்யவெப்பத்தால் எளிதில் தண்ணீராகக் கங்கையாதி நதிகளில் பெரிய வெள்ளங்கள் திடீரென்று வந்து ஊர்களை அழித்துவிடும். இம்மாதிரி வராதபடி தண்ணீரின் விசிஷ்ட உஷ்ண அளவு எல்லா வஸ்துக்களைதைவிட அதிகமாக ஸ்ருஷ்டியில் அமைந்து கிடக்கிறது. வஸ்துக்களின் விசிஷ்ட உஷ்ண அளவு கண்டுபிடிக்கும் விதம் அதிக உபயோககரமாக இல்லாதிருப்பதால் இங்கு விஸ்தரிக்கப்படவில்லை.

இதை முடிக்கும் முன் உஷ்ணநிலைக்கும், உஷ்ணபரிமாணத்திற்கும் உள்ள வித்யாஸத்தை நன்கு உணர்த்த வேண்டும். உஷ்ணநிலை என்பது உஷ்ண அளவையிலுள்ள பாதரஸத்தால் அறியப்படுவது. இது உஷ்ணம் வாங்கவாவது கொடுக்கவாவது ஓர் வஸ்துவில் உள்ள சக்தி - வாங்கும் வஸ்து தாழ்ந்த உஷ்ண நிலையில் இருப்பதென்றும், கொடுக்கும் வஸ்து மேலான உஷ்ண நிலையிலிருப்பதென்றும் மதிக்கப்படும் உஷ்ணபரிமாணம் ஓர் வஸ்துவிலிருக்கும் உஷ்ண மூலங்களே. வஸ்துவின் நிறை, அது ஸஞ்சரிக்கும் உஷ்ண நிலை இடை, அதன் விசிஷ்ட உஷ்ணஅளவு இவைகளைப் பெருக்கினல் வரும் எண்ணே. 5 பவுன் பாதரஸத்தில் 15 டிகிரி முதல், 75 டிகிரி வரையில் ஏறுங்கால் புதிதாக ஏறியுள்ள உள்ள உஷ்ணபரிமாணம் 5 × 60 × 1/30 அல்லது 10 உஷ்ண மூலங்கள். ஆகவே உஷ்ண பரிமாணம் கண்டு பிடிப்பதில் உஷ்ணநிலை ஓர் அங்கம். ஓர் வெந்நீர் தவலையிலிருக்கும் வெந்நீரை ஓர் சிறு பாத்ரத்தில் முகர்ந்து எடுத்தால் தவலையிலும் பாத்ரத்திலும் உள்ள தண்ணீரின்உஷ்ண நிலை ஒன்றே. ஆனல் முன்னதன் உஷ்ணபரிமாணம் பின்னதில் இருப்பதைவிட அதிகம். ஓர் கண்டியில் தண்ணீர் எடுத்தால் மூக்கிலும் பாத்திரத்திலும் தண்ணீர்மட்டம் ஒன்றேயாயினும், பாத்ரத்தில் உள்ள தண்ணீரின் பரிமாணம் மூக்கி

விருப்பதன் பரிமாணத்தைவிட அதிகம். ஆகவே தண்ணீர் விஷயத்தில் மட்டத்தைப் போன்றது உஷ்ணநிலை, பருமனைப் போன்றது உஷ்ண பரிமாணம்.

உஷ்ணநிலை = Temperature
ரஸாயனப்பிரிவு = Decomposition
ரஸாயனமாற்றம் = Chemical change
இனம்மாற்றம் = Change of state
உருகுதல் = Melting
கொதித்தல் = Boiling or Ebullition
உருகும் நிலை = Melting point
கொதிக்கும்நிலை = Boiling point
மறை உஷ்ணம் = Latent heat
உருக்க மறை உஷ்ணம் = Latest heat of fusion
ஆவிமறை உஷ்ணம் = Latent heat of vapourisation
உஷ்ணமூலம் = Thermal Unit
ஸம்ச்லேஷம் = Cohesion
ஆவியாதல் = Evaporation
குளிர்க்கலவைகள் = Freezing Mixtures
உஷ்ணநிலையிடை = Range of temperature
விசிஷ்ட உஷ்ண அளவு = Specific heat
உஷ்ணபரிமாணம் = Quantity of heat

டில்லிதர்பார்.—நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் நாளது 1911ம் வருஷம் நவம்பர்-மீ 14உ லண்டன் பட்டணத்தைவிட்டு டோவருக்குப் புறப்படுவார்கள். டோவரிலிருந்து மரக்கலகமேறி கலே சேர்ந்து அங்கிருந்து புகை ரதமார்க்கமாக ஜிேனோவா வந்து சேர்வார்கள். இத்தலிதேசத்துத் துறைமுகமாகிய ஜினோவாவில் இவர்களுக்குத்தயாராய் ஒரு கப்பல் காத்துக்கொண்டிருக்கும். இக்கப்பல் பம்பாய்க்கு டிசம்பர்-மீ 2ம்தேதி வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களை நமது வைசிராய் லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் பம்பாயில் நல்வரவு ஏற்பார். இரண்டு நாட்கள் பம்பாயில் தங்கினபிறகு டில்லிக்கு அவர்கள் ஸ்பெஷல் வண்டியில் புறப்பட்டு ஏழாந்தேதி டில்லியைச் சேர்வார்கள். பத்துதினங்கள் டில்லி நகரத்தில் தாமதிப்பார்கள். பன்னிரண்டாம் தேதி தர்பார் நடந்தேறும். இதன் மத்தியில் நமது இந்திய தேச அரசர்கள் செய்யும் இராஜ மரியாதைகளை அங்கிகரிப்பார்கள். ஒரு நாள் அல்லது இரண்டு நாள் போலோ என்ற விளையாட்டுக்குப் போவார்கள். டிசம்பர்-மீ 16உ பரிவாரங்களுடன் வேட்டை நிமித்தமாகச் சக்கரவர்த்தியவர்கள் நேப்பாளத்துக்கு விஜயமாவார்கள். இதில் பத்துப்பன்னிரெண்டு நாட்கள் கழியும். இதன் மத்தியில் நமது சக்ரவர்த்தினி, முக்யமான சிவஸ்தலங்களைப் பார்க்கப்போவார்கள். கல்கத்தாவில் 30உ நமது அரசரும் அரசியும் வந்துசேர்வார்கள். 1912 வரு ஜனவரி-மீ முதல் தேதி கல்கத்தாவில் இராணுவச் சைந்நியக்காக்ஷி நடக்கும்.

## மாணவர் பக்கம்
## STUDENTS' PAGES
### வியாஸ விதானம்
### Essay writing
### 2. கதா வியாஸங்கள்
### NARRATIVE ESSAYS

(3) வெளிநாட்டு விஷயங்கள்:—தர்மாபிலேக் காவல்

Foreign Events:.The defence of Thermopylae

குறிப்பு.—முகவுரை காரணங்கள்—கதை—முடிவுரை.

தர்மாபிலே என்னும் இடம் க்ரீஸ் தேசத்தில் கிழக்கரை ஓரமாக மத்யபாகத்தில் உள்ள ஓர் கணவாய். இதன் அருகாமையில் கடற்கரை வடமேற்கே இருந்து தென்கிழக்கே நோக்கிப்போகிறது. இந்தவிடத்தில்ஒரு மலை உண்டு. இது வடபாகத்திலும் தென்பாகத்திலும் கடற்கரைக்கு அருகாமையில் வருகிறது. இந்த விடங்களில் இரண்டு வண்டிகள் கூடப்போக இடமில்லை. ஆதலால் இந்தப் பாகத்திற்கு வாயில் என்று பெயர். மேலும் க்ரீஸ் வடபாகத்திலிருந்து தென்பாகம் போக வேண்டுபவர்கள் இதன் வழியாகத்தான் போகவேண்டும். மலைகளின் இடையே வழி ஒன்று இருந்தபோதிலும், அவ்வழி அபாயகரமாக இருந்ததால் வெளி நாட்டாரால் எளிதில் உபயோகப்படுத்த முடியாது. இதனாலும் இப்பாகத்திற்கு வாயில் என்ற பெயர் பொருந்தும். இந்த ப்ரதேசங்களில் வெந்நீர் ஊற்றுக்கள் அநேகம் இருந்ததால் இவ்விடத்திற்கு உஷ்ணவாயில் என்ற பெயர் வந்தது. இதற்கு க்ரீக் பாஷையில் தர்மாபிலே என்று பெயர். இதனால் தான் இவ்விடத்திற்கு இப்பெயர் ஏற்பட்டது.

இந்த விடத்தில் சண்டைக்கு வந்தவருள் ஒருவர் பாரஸீக ஜாதியார். இவர்கள் அரசனான டேரியஸ் என்பவன் சில வருஷங்களுக்கு முன்பு தன்னாலியன்ற மட்டும் க்ரீஸ் தேசத்தை வசப்படுத்த முயன்றான். இவன் மாரதான் என்னும் இடத்தில் க்ரீஸ் ஜாதியாரால் நன்றாக முறியடிக்கப்பட்டான். இவன் பிள்ளை ஸெர்க்ஸஸ் என்பவன், தகப்பன் தொடங்கிய கார்யத்தை முடிப்பதாகத் தீர்மானித்து வெகு காலமாகப் படைகளைத் தயார் செய்தான். இது முடிந்ததும் கடல்போன்ற தனது ஸேனையைப் பெரும்பாலும் நில மார்க்கமாக க்ரீஸுக்கு நடத்திவந்தான். இந்த ஸேனை

யைத் தடுக்க க்ரீஸில் முயற்சிகள் செய்யப்பட்டன. இந்த ஸேனை புரண்டுவருகிறது என்று கேள்விப் பட்டவுடன் சில க்ரீஸ் ஜாதியார் ஸெர்க்ஸஸிடம் சரணம் புகுந்தனர். ஸுமார் 7000 பெயர்கள் லியோனிடாஸ் என்னும் ஸ்பார்ட்டா அரசன்கீழ்த் தர்மாபிலேயைக் காக்க அனுப்பப்பட்டனர். இவர்களுள் 300 பெயர்கள்தான் ஸ்பார்டர்கள். மற்றவர்கள் இதர ஜாதியார்கள். தர்மாபிலேயைத் தாண்டிக்கொண்டு தான் கிழக்கே இருக்கும் புத்திமான்கள் நிறைந்த ஆதென்ஸையும், தெற்கே இருக்கும் வீரர்கள் நிறைந்த ஸ்பார்டாவையும் ஸெர்க்ஸஸ் தாக்கவேண்டும். ஆகவே இவ்விரண்டு முக்யமான மாகாணங்களைக் காக்க இந்தத் தர்மாபிலேயைக் காவல் செய்ய வேண்டியது அவச்யமாயிற்று.

தர்மாபிலேயில் ஸ்பார்டர்கள் வந்து சேர்ந்ததும் தமது ஆயுதங்களை மணலில் நட்டுவிட்டு அவர்கள் தமது தலைகளை வாரிக்கொண்டிருந்தனர். ஸெர்க்ஸஸ் ஸேனை நெருங்கி வர அவன் ஒரு வேவுகாரனை அனுப்பிவித்தான். அவன் மூலமாக ஸ்பார்டர்கள் நிலைதெரிய வர அங்குள்ளவர்களிடம் விசாரித்து, ஸ்பார்ட்டார்கள் செய்யும் தொழில் அவர்களுக்கு யுத்தவிஷயத்தில் உள்ள பிடிவாதத்தை வெளிப்படுத்தியது என்று தெரிந்துகொண்டான். அவர்கள் தனது சேனைப் பெருக்கைக் கேட்டு ஓடிவிடுவார்கள் என்று வீண் எண்ணம் கொண்டிருந்தான் ஸெர்க்ஸஸ். "கடல் போன்ற சேனைவருகிறது. அவர்கள் அம்புகள் ஸூர்யனையும் மறைத்துவிடும்" என்று கேள்விப்பட்ட ஸ்பார்டர்கள் "அதற்கென்ன நிழலில் நாம் ஸுகமாகச் சண்டையிடலாம்" என்று அலக்ஷ்யமாகக் கூறினராம். இரண்டொருநாள் கழித்துத் தன்னிடம்இருந்த மீட்ஸ் ஜாதி ஸேனையை ஏவினன் ஸெர்க்ஸஸ். நடந்த சண்டையில் அவர்களால்வடமேற்கு வாயிலில் நுழையவே முடியவில்லை. கொடிய போர் நடந்ததில் பாரவீகர் பக்கத்தில் அநேகர் மாண்டு விழுந்தனர். மறுநாளும் சண்டை பலமாக நடந்தது. ஸெர்க்ஸஸ் தன் ஸேனைகளுள் **அழிவற்றவர்கள்** என்று பெயர் பெற்ற பதினுயிரவரை சண்டை யிடும்படி உத்தரவு செய்தான். என்ன செய்தென்ன ! ஸ்பார்டர்கள் வீரம், அவர் தங்கியிருந்த இடத்தின் விசேஷம், ஒலிம்பியன் ஆட்டங்கள் என்ற திருவிழாநாள் அன்றைக்காக இருந்ததால் அவர்களுக்கு உண்டானஉத்ஸாஹம், ஆகிய இவைகளுக்கு எதிரே பாரவீகர் ஸேனையால் என்ன செய்யமுடியும்? அன்று மாலைக்குள் அநேக பாரவீகர்சள் மாண்டு சாய்ந்தனர். இந்த யுத்தம் நடந்து வந்த காலத்தில் இரண்டுமூன்று தரம்தனதுஆஸனத்திலிருந்து துக்க அதிகத்தால் எழும்பி விழுந்து பரிதவித்தனனும் ஸெர்க்ஸஸ். அப்பொழுது க்ரேக்கனை இபையால்டீஸ் என்ற துரோகி ஒருவன் மலைகளுள்ளே அப்புறம் போக வழியொன்றிருக்கிறது என்று சொன்னான். அவன் பின்னே ஸெர்க்ஸஸ் ஸேனையின் ஓர் பாகத்தை அனுப்பினன். அவன் இதை மலைமார்க்கமாக நடத்திவருகையில் அதைக் காவல்செய்ய வைத்திருந்த ஓர் ஸேனபாகம் இவர்களை எதிர்த்தது. ஸ்பார்டர்கள் ஸொப்னம் கண்டு வெருண்டு வந்த பாரவீகர்களுக்கு 'இவர்களும் ஸ்பார்டர்களோ ?' என்ற பிரமை உண்டாயிற்று. கொலைபாதகன் இபையால்டீஸ், 'அல்ல' வென்று அவர்களுக்குத் தைர்யம் கூற, அவர்கள் அம்பெய்து காவல்செய்து வந்தவர்களை ஓட்டினர். இவர்களுள் சிலர் சென்று பாரவீகர்கள் அவர்களை வளைத்துக்கொள்ளச்செய்திருக்கும் உபாயத்தை லியோனிடாஸுக்கு வெளியிட்டனர். உடனே ஸ்பார்டர்கள் விதிப்படி, லியோனிடாஸ்ஸும் அவன் முன்னூற்று வரும் அந்தக் கணவாய்க்குள்ளேயே இருந்து காவல் செய்வதாகத் தீர்மானித்து விட்டனர். ஒரு சண்டைக்குப்போனல் வெற்றியோடுதிரும்பவேண்டும், அல்லது சண்டைசெய்துகொண்டு மடியவேண்டும் என்பதே அவர்கள் சபதம். இதன்படி இருக்க எண்ணமில்லாத மற்ற ஜாதியாரை லியோனிடாஸ் பிரிந்துபோகும்படி உத்தரவு செய்து, கணவாயின் மறுபுறத்தில் வரும் பாரவீகர்களை வெளியிலிருந்து தாக்கும்படி வேண்டிக்கொண்டான். இம்மாதிரியானதும் லியோனிடாஸ் சும்மா இராது இயன்றமட்டும் சண்டை செய்தே இறப்பது என்ற தீர்மானத்தோடு வடமேற்கே இருக்கும் பாரவீகர்களைத் தாக்க உத்தரவு செய்தான்.முன்னிலும் பதின்மடங்கு கோரமாகயுத்தம் நடந்தது. ஸெர்க்ஸஸ் இவர்களை வளைந்து கொன்றுவிடலாம் என்ற தைர்யத்தால் நல்ல சண்டைசெய்யும் ஓர் பாகத்தை இவர்களிடம் போர்செய்ய விட்டுவிட்டு மற்றையப் பாகங்களை எல்லாம் சும்மாவைத்துக் கொண்டு இபையால்டீஸ் மறுபுறம் வருவதை எதிர்பார்த்திருந்தான். மூன்றும்நாள் நடுப்பகல் பார்வீகர்கள் மறுபுறம்வந்துவிட்டார்கள் என்று தெரிந்தது. உடனே முன்னிலும் அதிகமாகப் போர் தொடங்கியது. என்ன ஸாமர்த்தியம் இருந்தாலும் ஸ்பார்டர்கள் தொகை மிக்குறைவு தானே! அவர்கள் ஆவேசம் பிடித்தவர்போலச் சண்டையிட்டபோதிலும் அவர் கையிலிருந்த ஈட்டிகள் முறிந்து

போயின. உடனே அவர்கள் கத்திச்சண்டை செய்ய நெருங்கும்படி நேர்ந்தது. பின்னும் முன்னும் பாரவீகர்கள் பாதை ஏற்பட்டு விட்டது. இந்த அபாய காலத்தில் முதலில் லியோனிடாஸ் உயிரிழந்து கீழே விழுந்தான். அவன் பிணத்தைச்சுற்றிக் கொடியபோர் வெகுகாலம் நடக்க அதில் சில ஸ்பார்டர்கள்தான் மிஞ்சினர். மாரதான் யுத்த கீர்த்தியை நாழிகழித்து வந்ததால் அடைய முடியாமற் போனது, அவர்களுக்கு ஞாபகம் வர முன்னினும் பதின்மடங்கு வீர்யத்தோடு அவர் சண்டைசெய்தனர். முடிவில் இவர்களும் அருகே ஓர் சிறு குன்றின்மேல் சற்று இளைப்பாறப் பின்னடைய வேண்டிவந்தது. அங்குச் செத்தபாம்பை அடிப்பதுபோல இவர்களைப் பாரவீகர்கள் கொன்று தீர்த்து விட்டனர். இங்குப் பாரவீகர்கள் ஜயித்த போதிலும், 300 ஸ்பார்டர்கள் நம்மை இப்பாடு படுத்தி விட்டார்களே! க்ரீஸ் முழுவதும்சேர்ந்து வரப்போகிறதே. நம்மகதி, என்ன? என்ற ஏக்கம் ஸெர்க்ஸஸுக்கு வந்துவிட்டது. இதற்கேற்ப ஸ்பார்டர்கள் நடத்தையால் யுத்த ஆவேசம் கொண்ட அதீனியர் முதலிய மற்றைய க்ரீஸ் ஜாதியாரால் பாரவீகர்கள் கொஞ்சநாளில் நன்றாய் முறியடிக்கப்பட பஞ்சாய்ப் பறந்தோடிப் போயினர். லியோனிடாஸும் அவனை முன்னுற்று வந்த வீரர்களும், பின்வாங்காது சண்டையிட்டுத் தம் நாட்டாருக்குத் தைர்யம் ஊட்டிய இடத்தில் இன்றும் ஓர் சிலாரூபமான அறிகுறி அமைந்து காணப்படுகின்றது. அவர்கள் புகழ் உலகுள்ளளவும் எப்படி மாறும்!

இதிலிருந்து ஒரே மனத்துடன் நடப்பவர் சிலராயினும், குழப்பம் மிகுந்த பலரை எளிதில் தடுக்கலாம் என்பதும், வேற்றுடம்பு மாய்ந்தாலும் புகழுடம்பு மாயாது என்பதும், நன்றாக வெளியாகும்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்.

1 மாரதான் யுத்தம்
2 ஸாக்ரேடிஸ் விசாரணை [யும் மரணமும்
3 வீஸரைக் கொலைசெய் [தது
4 ஹொரேஷியஸ் பாலங் [காத்தது
5 மாஸ்கோவை எரித்தது
6 ஹானிபல் ஆல்ப்ஸ்மலை [களைத் தாண்டியது
7 வாடர்லூ யுத்தம்
8 பாங்நாக்பரன் யுத்தம்
9 அமெரிக்கர் ஸ்வதந்தி [ரம் பெற்றது
10 ஆல்ப்ரெட்டும் டானி [யரும்

### பொதுக்குறிப்புகள்

1. முகவுரை.
2. காரணம்.
3. கதை.
4. முடிவுரை—அபிப்ராயம், அல்லது கருத்து.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

### 4. Conduction of Heat

We have spoken about thrusting a poker into the fire, and told you that at last the other end of the poker will be too hot to hold. But if, instead of a metal poker or rod, a glass or a stoneware rod were thrust into the fire, the other end of this rod would never get very hot because the stoneware does not conduct heat nearly so well as the metal.

Wool and feathers are still worse conductors, and this is why these substances have been provided by nature as the clothing of animals; for the heat of an animal is generally greater than that of the surrounding substances, and this heat is not readily, conducted off through the garment of wool, feathers or fur with which the animal is clad.

A bad conductor may be used not only to keep in heat but also to keep it out; flannel for instance, may be used to wrap round our bodies in order to keep the heat in, or it may be used to wrap round a block of ice, which we wish to preserve, in order to keep the heat out. In fact, heat cannot readily pass through flannel whether it be going from within outwards or from without inwards.

—*Physics Primer*, *pages* 102·103

### உஷ்ணம் ஊடுருவிப் பரவல்

ஒரு தூண்டுகோலை நெருப்பில் சொருகும் விஷயத்தைப்பற்றிக் கூறுங்கால், முடிவில் அதன் மறுநுனி மிக உஷ்ணமாகிவிடும், அதைத் தொடக்கூட முடியாது என்று எடுத்து விளக்கியிருக்கிறோம். ஆனால் உலோகங்களால் செய்த தூண்டுகோல் அல்லது கம்பிக்குப் பதிலாகக் கண்ணாடி அல்லது சுட்டமண்ணாலாகிய கோலை நெருப்பில் சொருகினால் அதன் மறுநுனி எப்

பொழுதும் மிகச்சூடாகிவிடாது. சுட்டமண், உலோகங்களைப்போல, அவ்வளவு நன்முக உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடாது.

அடர்ந்த உரோமமும், இறகுகளும் சுட்டமண்ணை விட உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடும் சக்தியில் மிகத் தாழ்ந்தவை. இதனுல்தான் இவைகள் ஸ்வபாவமாக ஜந்துக்களுக்குப் போர்வைகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சுற்றுமுற்றும் உள்ள வஸ்துக்களைவிட ஒருஜந்துவிடம் அதிக உஷ்ணம் காணப்படும். அவைகளுக்கு மேற்போர்வைகளாக இருக்கும் அடர்ந்த உரோமம், இறகு, மயிர் ஆகிய இவைகள் வழியாக எளிதில் இந்த உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதில்லை.

எளிதில் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடாத வஸ்துக்களை, உஷ்ணத்தை உள்ளே அடக்கிவைப்பதற்கு உபயோகப்படுத்துவதும் அல்லாமல், உஷ்ணத்தை உள்ளே புகவொட்டாது தடுப்பதற்கும் உபயோகப்படுத்தலாம். இதற்கு உதாரணமாகக் கம்பளியை எடுத்துக்கொள்வோம். தேஹத்து உஷ்ணம் வெளியே சிதறிப் போகாதபடி இதை மேலே சுற்றிக்கொள்ளலாம். இதுவுமன்றி, வெளிஉஷ்ணம் தாக்கி நஷ்டமாகாதபடி தடுப்பதற்காக இதைப் பனிக்கட்டி மேலும் சுற்றிவைக்கலாம். ஆராயுங்கால் உள்ளே இருந்து வெளியேயாவது அல்லது மாருகவாவது உஷ்ணம் கம்பளியின் வழியே ஊடுருவிப்பரவாது.

---

**மாம்ஸ முண்பதை விட்டதோர்மாது:**—பெல்ஜியம் தேசத்தில் **ப்ரஸல்ஸ்** என்னும் காலேஜில் தேஹதத்வசாஸ்த்ர போதகாசிரியராயிருக்கும் டோடெய்கோ என்னும் ஓர் மாதரசியார், மாம்ஸம் உண்பவர், உண்ணுதவரென்று இருதிறத்தவருள், யார் அதிக நாள் பட்டினியாகவிருத்தல் கூடுமென்று பரீக்ஷித்துப்பார்த்து, மாம்ஸமுண்ணுதவர்களே பலசாலிகளென்றும், பசி பொறுப்பவரென்றும், தேகாரோக்யமுடையவரென்றும் கண்டு, தாமும் மாம்ஸமுண்பதை விட்டாராம்.

நெடுங்காலமாக மாம்ஸபக்ஷணஞ் செய்து வந்தவரும் மாம்ஸபக்ஷணமே தேஹத்திற்கு வலுவையுண்டாக்குமென்னும் அபிப்ராயத்தை யுடையவருமாகிய ஐரோப்பியரிற் சில பகுதியார், மாம்ஸபோஜனஞ் செய்வது தவறென்றும், அதனினும் சாகபக்ஷணமே, எல்லாவிதத்திலும் மேலானதென்றும் பரீக்ஷித்துப்பார்த்து மாம்ஸபக்ஷணத்தை விலக்கிவருகின்றனர். பிறப்பிலேயே சாகபக்ஷணிகளாக விருக்கும் நம்மவரிற் சிலர் மாம்ஸபக்ஷணஞ்செய்தல் வேண்டுமென்று கூறுவது கலிகாலக் கொடுமையே!

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### ஜடபரதர் சரித்ரம் (3) மஹான்கள் நிலை

பரதமான் தேஹம் விட்டதும் ஓர் ஆங்கிரஸப்ராஹ்மணர் குலத்தில் கடைக்குட்டியாக வந்து பிறந்தது. இவருக்குத்தமயன்மார்கள் ஒன்பதுபேர்கள் இருந்தனர். இவர் தகப்பனுர் இவருக்கு அநேக வழிகளால் கல்வி கற்பிக்க முயன்ருர். இவருக்குக் கர்ம பரிபாகத்தால் மனம் பரம்பொருளிடமே சென்று கொண்டிருந்தது. மேலும் சென்ற இரண்டு ஜன்மங்களாக இவர் படாத பாடெல்லாம் பட்டுப் பரமபதம் பெறமுடியாது கிடந்து தத்தளித் திருக்கிருர். இவைகள் எல்லாம் இவருக்கு ஞாபகத்தில் வர பிறந்ததுமுதல் இவர் மனதைப் பரம்பொருளிடம் ஈடுபடுத்தி, எங்கே வாய்திறந்து பேசத் தொடங்கிவிட்டால் இந்த ஜன்மத்திற்குரிய அபிமானிகள் வந்து மூடிக்கொண்டு தம்மை வீழ்த்திவிடுமோ என்று அஞ்சி வாய்கூடத் திறவாதிருந்து விட்டார். ஆதலால் தகப்பனுர் கல்வி கற்பிக்கச்செய்த முயற்சிகள் எல்லாம் வீணுயின. இவருக்கு உபநயனம் நடக்கி அப்பொழுது காயத்ரீமந்திரம் சொல்லிக்கொடுத்தும் இவர் மனதில் அது ஏறவில்லை. இவ்வாறு இவர் மந்தராக இருப்பதைக் கண்டு இவருக்கு எல்லோரும் **ஜடர்** என்று பெயரிட இவருக்கு **ஜடபரதர்** என்ற பெயர் நின்றுவிட்டது.

தமது கடைக்குட்டி இவ்வாறு உபயோகமற்றிருப்பதைக் கண்டு ஏங்கிக் கொஞ்சநாளில் தகப்பனுர் இறந்தார். பரதர் தாயார் உடன்கட்டை ஏறினுள். இவர் தமயன்மார்கள் தாயாராகிய மூத்தாய் தான் பின் தங்கினுள். அவள் பிள்ளைகள் மஹா ஸமர்த்தர்கள். தமக்குப் பரதர் உபயோகப்படமாட்டார், என்று கண்டு இவருக்குத் தகுந்தபடி தேஹச்ரமம் உண்டாகத்தக்க வயல் வெளிக்காவலை இவருக்குக் கொடுத்தார்கள். இவரிடம் நல்ல வேலை வாங்கினுர்களே ஒழிய தகுந்த உணவு கொடுக்கவில்லை. கிடைத்ததைக்கொண்டு த்ருப்தி அடைவது ஞானியின் இயல்பாகையால்தான், பரதர் இதைக் கவனியாது தமக்கு இட்டவேலையை வயல் வெளியில் தம்மால் இயன்றமட்டும் செய்துவந்தார். நல்ல உணவில்லாமலிருந்தபோதிலும், அவரது மனச்சிறப்பால் அவர் தேஹம் வாடாது பருத்தே இருந்தது. இவர் காவல் செய்யுங்கால் வயலில் பரண் மேல் தடியும் கையுமாய் அஞ்சாதிருப்பது வழக்கம்.

இவரைக்கண்டதும், புல்லுருவைக்கண்டு ஓடுவது போலப், பக்ஷிகள் முதலியன கிட்டேஅணுகா. இரவிலும் இவர் இவ்வாறு காவல் செய்வது வழக்கம். இங்கு இவர் விடாது பரம்பொருளிடம் மனதைச் செலுத்திக்கொண்டிருந்தபடியால் வெகுகாலம் மெய்ம் மறந்திருப்பார்.

இவ்வாறு ஜடபரதர் காவல்செய்து வருகையில் ஒரு நாள் இரவில் சில வேலையாள்கள் வந்து இவரைப் பிடித்துக்கொண்டு நரபலிக்காகத் தமது யஜமானனிடம் கொண்டுபோய்விட்டார்கள். இந்த யஜமானன் ஒரு திருடர்ராஜன். அவனுக்குப் பிள்ளையே இல்லாதிருந்தது. இதற்காகக் காளிக்கு இவன் நரபலி கொடுப்பதாகத் தீர்மானித்திருந்தான். 'கழுவுக்கேற்ற கோமுட்டி' என்றபடி ஜடபாதரே பலிக்குத் தகுந்த பசு என்று மதிக்கப்பட்டார். இவரை எண்ணெய் தேய்த்து ஸ்நானம்செய்து வைத்தார்கள். மாலை மஞ்சள் முதலியவைகளால் அலங்காரம் செய்தார்கள். காளியின் முன்னிலையில், இவரைக் கொண்டுபோய் நிறுத்தினுர்கள். ஜடபாதர் அப்பொழுதும் ஞான நிஷ்டையில் இருந்தார். அவருக்கும் ஒன்றும் தெரியவில்லை. அவரை முட்டிபோட்டு உட்காரச்செய்து தலையைக் குனிந்து நிற்கும்படி செய்துவைத்தார்கள். உடனே மஹானுன ஜடபரதரை வெட்ட உறையிலிருந்து கத்தியை அந்த ராஜன் உருவி ஓங்கிவிட்டான்.

காளி எவ்வாறு இந்தப் பலியைத் தாங்குவாள்! அவளுக்கு விக்ரஹத்தில் இருப்புக்கொள்ளவில்லை. பலிக்காகக்கொண்டு வந்திருப்பவன் மஹாப்ராஹ்மணன் அல்லவா! காளியைப்போன்ற ஸகல தேவதைகளுள்ளும் இருந்து ப்ரகாசிக்கும் பரம்பொருளாகி நிற்கும் ஞானியாதலால், ஜடபரதரை வெட்டத் தொடங்கிய உடன் ப்ராஹ்மணன் தபோக்னியால் தஹிக்கப்பட்டு, மிகுந்த அட்டஹாஸம் செய்துகொண்டு,காளி,விக்ரஹத்திலிருந்துவெளிவந்து கோபாவேசத்தில் அங்கிருந்தோர் எல்லோரையும் வெட்டிச் சாய்த்துவிட்டாள். நடந்தகாரியம் ஒன்றும் நிஷ்டாபரரான பாதருக்குத் தெரியாது. இதனுல் பரம்பொருளை உள்ளபடி பற்றி நிற்பவருக்குத் தாழ்ந்த தேவதைகள் எல்லாம் அடங்கிநிற்கும். எவ்விதமான க்ஷுத்ரதேவதையின் சக்தியும் இந்த ஞானியிடம் பலிக்காது. இவன் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு இவன் ஆராதிக்கும் தெய்வம்போலவே தாக்கற்று நிற்பான். ஒருவித மனோவ்யாதியும் இவனிடம் அணுகாது. பிசாசு காற்று சங்கை க்ஷுத்ர தேவதை முதலிய பாமரர் நம்பிக்கையில் ஒரு சிறிய பாகம் மாத்திரம் பரம்பொருள் விஷயத்தில் ஒருவனுக்கு மாருது ஏற்பட்டுவிட்டால்,அவனுக்கு ஸ்வர்க்கக் கதவு திறந்துவிட்டது என்பதற்கு ஸந்தேஹமே இல்லை!

இவ்வாறு பாதர் அறியாமலே வந்த ஆபத்து அவர் அறியாமலே பறந்து ஓடிப்போகக் காளிகோயில் வாயிலில் அவர் வந்து உட்கார்ந்தார். காலையில் அவ்வழியே ஒருராஜன் பல்லக்குப் போய்க்கொண்டிருந்தது. அதில் ரகுகுணன் என்ற ராஜன் கபிலர்என்னும் தனது குருவைக்கண்டு உபதேசம்பெற மஹா விநயபயபக்தியுடன் போய்க்கொண்டிருந்தான். அவன் பல்லக்கைச் சுமப்பதற்கு, கூட ஒரு ஆள் வேண்டியிருந்தது. பல்லக்குப் போயிகள் தேடிவருகையில் காளி கோயில் வாயிலில் கொழுத்த பரதரைக்கண்டு, பல்லக்குத்தூக்க இவரே தகுந்தவர் என்று எண்ணி இவரை இழுத்துச்சென்று இவரதுதோளின்மேலும்பல்லக்குத்தாங்கும்படிசெய்துவிட்டனர். இவர், மஹான்கள் வழக்கப்படி, நடக்குங்கால் கீழே பார்த்துக்கொண்டு ஊரும் ஜந்துக்கள் தம் கால்களில் அகப்பட்டு இறந்துவிடாதபடித் தமது காலை எட்டிவைத்து நடந்துவந்தார். மற்றவர் நடையோடு இது இசையாததால் பல்லக்குக் குலுங்கத் தொடங்கியது. ரகுகுணனுக்கு மிகுந்த கஷ்டம் உண்டாக அவன் பல்லக்குப் போயிகளைக் கண்டித்தான். அவர்கள் புதிதாய் வந்த பாதரைக்காட்டி அவரால் தான் பல்லக்குக் குலுங்குவதாக வெளியிட்டனர். கொஞ்சநாழிகைக்கு எல்லாம் பல்லக்கு மறுபடியும் குலுங்கத்தொடங்கியது. அரசனுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. 'நீ என்ன நடைபிணமா? என் உத்தரவுக்கு விரோதமாகவா நடக்கிருய்? பார் நான் உனக்குக் கொடிய தண்டனை விதிக்கிறேன்!' என்று கர்ஜித்தான்.

இதைக்கேட்டதும், அரசனது பாக்கிய காலம் வர, ஜடபரதர்வாய் திறந்து குலுங்க நகைத்தார்! இதுவரையிலும் வாயைத் திறவாதிருந்தவர், இப்பொழுது அரசனை நோக்கி, 'எனக்கு தேஹத்தில் அபிமானம் இல்லாததாலும், ஸதா ஆத்மரூபத்திலேயே நான் ஈடுபட்டிருப்பதினுலும், நான் உயிரோடிருந்தும் இறந்தவனுக்கு ஸமம்தான்: நடைபிணம்தான்! எனக்கு உலக விஷயங்கள் ஒருபொருட்டேயல்ல. அவை செத்தவனை எவ்வாறு தாக்குகிறதில்லையோ அவ்வாறே என்னையும் தாக்குகிறதில்லை. ஆகையால் செத்தாரைப் போலே திரிபவனுகிய என்னைத் தண்டிப்பதினுல் எனக்கு ஒரு

மாறுபாடும் ஏற்படாது. நீ அப்படிச்செய்வது அரைத்த மாவை மறுபடியும் அரைப்பதுபோல வீணாகுமே ஒழிய வேறல்ல:' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

கேட்டான் ரகுகுணன் ! ஜடபரதர் சிறப்பு விளங்கி விட்டது. நாம் உபதேசம் பெறப் போகையில் இம்மாதிரி மஹானுக்கு அபராதம் செய்யும்படி நேர்ந்து விட்டதே ! என்று பதறினான். ஒருவேளை 'கும்பிடப்போன தெய்வம்தான் குறுக்கே வந்தது' என்றபடி கபிலமுனி இவர்தானோ என்று ஐயுற்றான். பல்லக்கினின்றும் பரபரப்புடன் கீழே இறங்கினான். பாதருக்கு ஸாஷ்டாங்கத் தண்டனிட்டான். 'நான் அறியாமற் செய்த அபராதத்தைப்பொறுத் தருளல்வேண்டும்' என்று கெஞ்சி மன்றாடினான்.

ஞானிகளுக்கு மானவமானாதிகள் ஒருபொருட்டல்ல ஆதலால், முன்னர் கடிந்துகொண்ட காலத்தில் ஜடபரதர் மனம் எந்தச்சாந்தநிலையிலிருந்ததோ அதே சாந்த நிலையில் அரசன் தண்டனிட்ட பொழுதும் இருந்தது. அப்பொழுது மனங்கோணாது ஜடபரதர் ரகுகுணனுக்கு உபதேசம் செய்யத்தொடங்கினார். மனத்தின் ஸ்வரூபம், குணங்களின் ஸ்வரூபம்; பரம்பொருளின் அந்தர்யாமித்வம், ஹரிஸேவையால் மனதை அடக்க அதனால் வரும் பயன், ஹரிபக்தியில்லாத மற்றை ஸாதனங்களின் பயனில்லாமை, அபிமானத்தால் தாம் பட்டபாடு, அகங்காரம் உண்மையாக உள்ளதல்ல, என்னும் அரிய விஷயங்களைப்பற்றி அவர் எடுத்துப் பிரஸ்தாபித்தார். அதன் பின்பு உலகத்தில் ஜனங்கள் பொதுவாக சிற்றின்பாதிகளில் சிக்கிச் சண்டை சச்சரவுகள் செய்து பணத்தாசையால் பணம் ஸம்பாதிக்க, பலாத்காரமாக மற்றவர், அதைப் பிடிங்கிப் போவதால் வரும் துக்கத்திற்கு ஆளாகி, காமக்ரோதாதிகளுக்கு அடிமையாகி, மோக்ஷவழி அறியாது தத்தளிப்பதை வெகு விசித்திரமாக எடுத்துச்சொல்லி அரசனுக்கு உள்ளத் துறவு வரும்படி செய்தார். உடனே அரசனும் துறவுபூண்டு பரதரது ஸஹாயத்தால் நாளடைவில் பரமபதம்அடைந்தான். பரதரும் பரம்பொருளைத் தியானம் செய்து கொண்டே காலக்கிரமத்தில் தமது தேகத்தை விட்டுப் பரம்பொருளோடு கலந்து ஸமாதி பெற்றார்.

ஓம் தத்ஸத்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## த்ரௌபதி அல்லது மனத்தினிலை

### கீழ்மை ஒழிந்த காதை (தொடர்ச்சி)

த்ரௌபதியின் மொழிகளைக்கேட்ட கீசகன் "நீ சொல்லியதே பொருந்தும். நான் தனியே உன்னிடம் வருவேன். கந்தர்வர்கள் நீ என்னோடு வருவதைக் காணமுடியாது"என்று கூறிவிட்டுக் கீசகன்வேடிக்கையாய்ப் பேசிய காமமொழிகள் எல்லாம்,த்ரௌபதிக்குத் துன்பத்தையே தந்தன. ஒவ்வொரு க்ஷணமும் அவளுக்கு யுகமாகப்பட்டது. இதற்குள் மாலைப்பொழுது மிகவாத்திரத்தோடு இரக்தப்பெருக்கத்தைப் பரப்பிக் கொண்டு காமக்கடலில் அழுந்திய மனம் இருளில் பாய்ந்து தாங்காது அழிவதுபோல் அழியவந்தது. கீசகனும் ஸந்தோஷக்கடலில் மூழ்கி தன்னுடலை அலங்கரித்துக்கொள்ள வீடு சென்றான். யாகசேனையும் பீமசேனனை மறுபடியும் தூண்டச்சென்றாள். கீசகன் தன்மனம் கனிய அலங்கரித்து, இன்பச்சுவையில் ஆழ எண்ணி காமமே குடிகொண்ட கருத்தனாய் த்ரௌபதியிடம் செல்லப்புறப்பட்டான். அவியும் விளக்கின் பிழம்பு விம்முதல்போல் அவன் மனமும் விம்மி விம்மி குதூஹலமடைந்தது.

தன் படுக்கை அறையை அடைந்து "ஸைரந்த்ரி ! நீ விரும்பியவற்றை வேண்டிய அளவு கொடுத்தேன். அநேக அழகிய பெண்களை உனக்குப் பாங்கிமாராக்கினேன். உனக்கும் உன் பாங்கிமார்களுக்கும் தக்க அரண்மனை ஒன்று தந்திருக்கிறேன். உனக்குத்தக்க அந்தஃபுரமும் ஏற்படுத்தி இருக்கிறேன். கூத்து குரவை முதலிய வேடிக்கைகளுக்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்தேன். நானும் நன்றாக அலங்கரித்துக் கொண்டுவந்தேன். என்னைப்பார்த்த என்னுடைய அரண்மனைப் பெண்களெல்லாம் என்னைத் துதி செய்து 'உன்னைப்போல் உடுத்து அழகில் சிறந்து விளங்குகிறவர்கள் உலகில் எங்கும்இல்லை' என்றார்கள்" என்றான்.

"அத்ருஷ்டத்தால் நீ அழகாகப் பிறந்தாய். உன்னையே ஸ்தோத்ரம் செய்துகொள்கிறாய். இதைப்போல் ம்ருதுவான ஸ்பர்சம் இதற்குமுன் நீ கண்டிருக்கமாட்டாய். உன்னுடைய ஸ்பர்சம் என்னுடம்பை நெருப்புப்போல் எரிக்கிறது. நீ டம்பத்தில் சிறந்

தவன். பெண்களிடம்தான் உன் பெருமை எல்லாம் சொல்லிக்காட்டுவாய்" என்று சொல்லிக் கொண்டு அங்கு வந்து படுத்திருந்த பீமஸேனன் கோபம் மிகுந்து எழும்பிக் குதித்து "அடா கீசகா! இன்றைக்கு உன் உடன்பிறந்தாள், உன்னுடல் மலைபோல் வீழ்ந்து ரக்தப்ரவாஹத்தில் புரளப்பார்ப்பாள்! உன்னுடல் விட்டு உயிரைத் துலைத்தால் ஸைரந்த்ரி ஸுகமாக வாழலாம். நாங்கள், அவளுடைய கணவர்களும், ஸந்தோஷமாக வாழலாம்" என்றான்.

பீமன், பின் கீசகனுடைய மயிரைப்பிடித்து இழுத்தான். கீசகன் அவனுடைய கையைப்பிடித்துக் கொண்டான். வாலி ஸுக்ரீவர்கள் முன் சண்டை செய்தது போல் இப்பொழுது இரண்டு யானை ஒன்றன் முன் ஒன்றுவந்து போரிட்டால் போல சண்டை செய்தார்கள். ஐந்துதலை நாகம்போன்ற தமது கைகளால் ஒருவரையொருவர் தாக்கினார்கள். கோபமிகுதியால் ஒருவரையொருவர் அடித்தனர். பற்களையும் கடித்தனர். ஜயத்திற்காக இரண்டுபேரும் உழைத்தார்கள். அடிமேல் அடிவைத்து இருவரும் புடைத்துக் கொண்டார்கள். ஒருவரையொருவர் மோதி இடம்வலமாகச் சுற்றி நடுவில் நின்று ஒருவரடியை மற்றவன் விலக்கியும், மாறொருவரும் தோளொடு தோளும் படும்படிக் குத்தி சண்டையிட்டார்கள். பின் வட்டமாகி ஓடுவர். கையைச் சுழற்றி அடிப்பர். கீசகன் மிகு கோபத்தோடு மல்லயுத்தம் செய்தான். பின் பீமன் கீசகனை உதைத்து மிகு வேகத்தோடு வீசினான். அடியற்ற மரம்போல் கீசகன் கீழ் விழுந்தான். பின் ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து சண்டையிட்டார்கள். பீமசேனன் கீசகனைப் பிடித்துப் பெருங்காற்று மரங்களை அலைமோதுவது போல கீசகனை உலுக்கு உலுக்கென்று உலுக்கினான். இதனால் கீசகனுடைய பலம் மிகக்குறைந்தது. ஆனாலும் தன் பலத்தையெல்லாம் கிளப்பிக்கொண்டு பீமன்மேல் பாய்ந்துக் கீழ்மோதினான். மார்பில் உதைத்து முட்டினான். பீமன்கதையை எடுத்துக்கொண்டு கீசகனுடைய மண்டையை உடைக்கவேண்டும் என்று கிளம்பினான். கீசகனுடைய மார்பில் புடைத்தான். இடைவிடாது பீமன் மோத கீசகன் அசைவற்று நின்றான். பீமன் அவனை மார்போடு மார்பணைந்து தன்னுடைய ஆசையைக்காட்ட தனது கைகளால் அவனை அமுக்கினான். அவன் மயிரைப் பிடித்துக்கொண்டு ஸிம்ஹம்போல் கர்ஜித்தான். அவனை இங்கும் அங்கும் அசக்கி அசக்கி வெகுநேரம் அவன் உடம்பைக் குலுக்கினான். பின் உதை உதை யென்று உதைத்தான். அவன் நெஞ்சைப் பிடித்துத் திரிகினான். கீழ்த்தள்ளித் துகைத்தான். நெஞ்சை மிதித்தான். மார்பில் முழந்தாளால் முட்டினான். உடம்பைச் சின்ன பின்னமாக்கிக் கீழ்வீசி எறிந்தான். பின், குதூஹலத்துடன் சிதறி விழுந்து கிடந்த கீசகனது உடலைக் காலால் வீசி "ஸைரந்த்ரியின் கற்பை அழிக்க முயன்ற இக்கொடியகீசகன்,—த்ரௌபதிக்கு வழியில் முள்ளாக நின்ற இக்கொடியவன்— இவனைக்கொன்றேன். என் தமையனுக்காகச் செய்ய வேண்டிய கடனைச் செய்துவிட்டேன்" என்று உரத்



Draupadi at the Court of Virat.

துக் கூவிக்கொண்டு போய் த்ரௌபதிக்குக் கீசகனுடைய நிலையைக்காட்டி ஸந்தோஷப்படுத்தினன்.

உடனே எல்லாரிடமும் 'எனது கணவர் ஆகிய கந்தர்வர் கீசகனை அழித்தார்' என்று மஹாஸந்தோஷத்தோடு ஸைரந்த்ரி "பிறாது மனைவியை விரும்பிய கீசகனுடைய கதி யிது. வாரும். வந்துபாரும்." என்று கூறினள். இதைக் கேட்டதும் சபையிலிருந்த யாவரும் பதினாயிரம் தீவத்தியுடன் வந்து பார்த்து நடுங்கினர். ரத்த வெள்ளத்தில் மாம்ஸபிண்டமாக விழுந்திருந்த கீசகனுடைய உடல் அச்சுவேறு ஆணி வேறாக விழுந்திருப்பதைக்கண்டு எல்லாரும் கண்டு நடு நடுங்கி பயந்து இது கந்தர்வர்களே செய்திருப்பர் என்று நிச்சயம் செய்துகொண்டு விளங்கினர்.

## முடிவடைந்த காதை

கீசகனழிந்ததும் உபகீசகர் எதிர்க்க அவர்களையும் பீமன் கொன்றான். இதற்குள் பாண்டவர் ஒளிந்து இருக்கவேண்டிய காலமும் கடந்தது. வெளி வந்து தமக்குச்சேரவேண்டிய நாட்டைக் கேட்டுச்சாந்தமாகப் போகவேண்டுமென்று தருமர் நிற்க த்ரௌபதி தான் தலைவிரித்திருப்பதைக் கண்டும் இவ்வாறு செய்த லாகுமா என்றாள். இதற்குள் பலதூது நடந்தும் "மயிர் முனைக்கும் மண்கொடேன்" என்று துர்யோதனன் தடுத்தான். போர் மூண்டது. இருதிறத்தாருக்கும் வேண்டிய துணைவரோடு சேர்ந்து பலத்த யுத்தம் குருக்ஷேத்ரத்தில் நடந்தது. பதினெட்டு நாள் சண்டை நடந்தது. கடைசியாக கௌரவர் வேரோடு நாசமானார்கள். துர்யோதனன் குற்றுயிராய்ச் சமந்த பஞ்சகம் என்னும் இடத்தில் விழுந்து கிடப்பதை அச்வத்தாமன் கண்டு "யான் பாண்டவர்களை இன்றிரவு கொன்று வருவேன்" என்று துர்யோதனனோடு சொல்லிப் பாண்டவரது பாசறை(படைவீடு)யை அடைந்தான். அங்கு ஓர் பூதம் காத்துக்கொண்டிருப்பதைக் கண்டு சிவனைக்குறித்துப் பூஜைசெய்து ஓர் கத்தி அவரிடமிருந்து பெற்று அதனால் யாவரையும் கொன்றான். த்ரௌபதியின் குழைந்தைகளாகிய உபபாண்டவர்களைப் பாண்டவர்களென்று எண்ணி அவரையுங்கொன்றான். பின் அபாண்டவீய அஸ்த்ரத்தை ப்ரயோகித்து யாவரையுங் கொன்றான்.

இவ்வளவும் நடந்தது. அப்பொழுது த்ரௌபதியும் அங்கு இல்லை. பாண்டவரும் அங்கு இல்லை. பக்கத்திலிருந்த உபப்லாவ்ய வனத்தில் அன்றிரவு தங்க ஸ்ரீவாஸுதேவன் அவர்களை அழைத்துப் போயிருந்தனர். காலையுந்ததும் தருமர் தனது குழந்தைகள் யாவும் இறந்தனவென்று வ்யஸனமுற்று நகுலனைக் கூவி அப்பாழும் த்ரௌபதியை அழைத்துவா வென, அவனும் வனஞ்சென்று அவளை அழைத்து வந்தான். தர்மர் தலைமேல் அறைந்துகொண்டு உருண்டுபுரண்டு அழுதுகொண்டிருந்தார். அவர்முன் காற்றால் அடிசாய்ந்த மரம்போல் வ்யஸன மிகுதியினால் பூமியில் விழுந்து த்ரௌபதி அழுதாள். புரண்டாள். கதறினாள். மேகம் மறைக்க ஒளி நீங்கின ஸூர்யன்போல் முகம் வாட புத்திமயங்கி கீழ்விழுந்து இருந்தாள். பீமன் ஓடி வந்து அவளை வாரி எடுத்தான். வ்யஸனத்தைத் தணித்துத் தேறுதல் கூற அழ ஆரம்பித்தாள். பின் வ்யஸன மிகுதியால் பாண்டவர்களைப் பார்த்து,

"அத்ருஷ்ட வசத்தால் பூமி முழுதும் உமதாக்கிக் கொண்டீர்கள். (க்ஷத்ரிய தர்மத்தில் உயிரைவிட்ட) உமதுவீரக்குழந்தைகளைப் பலிகொடுத்துவிட்டுஇம்முழு உலகையும் ஆளப்போகிறீர்கள்! ஹே தனஞ்ஜயா! ஸுபத்ரையின் குழந்தையை விட்டுவிட்டு, யமனுக்கிரை யாக்கிவிட்டு, ஏதோ அதிருஷ்டத்தால் பூமி கிடைத்ததென்று ஆளப்போகிறீர்! அப்படிபாவி அச்வத்தாமன், ராத்ரிவேளையில், தூங்கும் குழந்தைகளை, ஒருவரையும் தொந்தரை செய்யாதவர்களைக் கொலை செய்தான், என்று கேட்டதும் என்மனம் அலைகின்றது. என்வயிறு எரிகிறது. வயிற்றில் கலநெருப்பிட்டால்போல எரிகிறது. என்உடல் முழுதும் வேகின்றது. என்மனம் துடிக்கின்றது. அப்பாவி அச்வத்தாமனுக்குத் தக்கவாறு தண்டனை செய்யாது விட்டால் என் உயிர் இராது. என் குழந்தைகளை நாசஞ் செய்தான். நீங்களும் வலிமிகுந்தவர்கள்! உமதாண்மை எங்கே? நான் சொல்லியதைக் கூறுவிடில் ப்ராயத்தில் உட்காருவேன். அச்வத்தாமனைக்கொன்று அவன் தலையிலிருக்கும் மாணிக்கத்தைத் தர்மர் தலையில் நான் வைத்தாலன்றி உயிரோடிரேன். ப்ராயத்தி விருப்பேன்" என்றாள்.

பின் பீமஸேனனைப்பார்த்து அழுதாள். அவனும் தனஞ்ஜயனுமாகச் சென்று யுத்தம்செய்து அச்வத்தாமனது சிரோரத்நத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். அதைத் தர்மர் தலையில் அணிந்து பார்த்தாள். பின் தமது உறவினர்க்குச் செய்யவேண்டியகருமங்களைத்தர்மர் செய்துவிட்டுப் பட்டாபிஷேகம் செய்துகொண்டார். அச்வமேதமொன்றும் செய்து பெருமை அடைந்தார். பின் காந்தாரி முதலிய யாவரும் துறவுபூண்டு காட்டில் வஸித்துமுத்திபெற்றனர். பின்க்ருஷ்ணர் துர்வாஸரது சாபத்தின் பலனாகக் காலமென்னும் அம்பின்வாய்ப்பட்டுத் தன்ஜோதியைத் தன் வைகுண்டத்தி லடையச் செய்தார். இதைக்கேட்டுப் பாண்டவரும் துறவெய்தி மஹாமேருவை வணங்கிக்கொண்டு உத்திரதிசையாக நாடி ஹிமயபர்வதமார்க்கமாகச் சென்றார்கள். இவர்களோடு த்ரௌபதியும் உடன்வந்தாள். வழியில் வாய் வறண்டு நடைதளர்ந்து அசைவற்று த்ரௌபதி கீழ் விழுந்தாள். விழுந்ததும் ஒரு சுடர்ப்பிழம்பு கிளம்பி வானம அடைந்து, சிலநாள் நரகத்திலிருந்து இந்த்ரன் விமானத்தில் தர்மர் வந்து தரிசனம் தர இந்திராணியினிடம் உள்ளூற மருவினள்.—

என்பது முனி ச்ரேஷ்டரான ஸ்ரீவேதவ்யாஸ பகவான் இயற்றிய ஸ்ரீபாரத இதிஹாஸத்தில் இருந்து எடுத்து உரைக்கப்பட்ட த்ரௌபதிக்கதையின் ஸாரம்.